உ

75

மட்டுவில் வடக்கு

# பன்றித்தலைச்சி அம்மன் கோவில்



பூர்வீக

## சரித்திர வரலாறும்

# கும்பாபிஷேக வைபவமும்

1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உ

மட்டுவில் வடக்கு

பன்றித்தலைச்சிக்

# கண்ணகை அம்மன் கோவில்

பூர்வீக

## சரித்திர வரலாறும்

# கும்பாபிஷேக வைபவமும்

தொகுப்பு :

பண்டிதர் க. சிவகுருநாதன்

ஆசிரியர் : நா. நல்லதம்பி

தேவஸ்தான வெளியீடு

1991

பதிப்புரிமை

விலை ரூபா : 75/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
தேவிமயம்

# சமர்ப்பணம்

## கண்ணகை அம்மன் தியானம்

திபுஜாம்ச திவிநெத்ராம்ச கரண்டமகுடான் விதாம், லம்பகம்
வாமகஸ்தாம்ச தெக்ஷிணெ சைவநூபுரம் நிபிடஸ்தந
பாராம்ச முக்தா தாமை ரலம் கிறுதாம் சர்வாபரண பூசாட்டியாம்
சர்வசோபச மன்விதாம் ஏதத்துறாபாம் கண்ணகாம் இதி தியாத்வா.

★

பன்றித் தலைச்சி ஸ்ரீ கண்ணகை அம்பாளின்
பாதார விந்தங்களில்
இச்சிறு நூலைச்
சமர்ப்பிக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நற்சிந்தனை

தூய விமானமுந் தூலம தாகுமா
லாய சதாசிவ மாகுநற் சூக்குமம்
பாய பலிபீடம் பத்திர லிங்கமா
மாய வரனிலை யாய்ந்துகொள் வார்கட்கே.

(திருமூலர்)


அத்த னாலய மனைத்தும் வைகலும்
பத்தி யோடு முன்பரவி மிகுஞ்
சுத்த னாகியே தொலைவி லாருயிர்
முத்தி யெய்தினாள் முழுது ணர்ந்துளான்.

(கந்தபுராணம்)

★ ★ ★

**பன்றித்தலைச்சி என்னும் தலத்தில்**
**மூலஸ்தானம், நீராவி மண்டபம் விமானம்**
**கட்டப்பெற்று வர்ணம் தீட்டப் பெற்று**
**காட்சி அளிக்கின்றது.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூலஸ்தானமும்
நீராவி மண்டபமும் விமானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ கண்ணகை அம்பாள் மூலஸ்தானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ சிவகாமி அம்மன்



எழுந்தருளி

ஸ்ரீ விநாயகர் ஸ்ரீ பாலசுப்பிரமணியர்

ஸ்ரீ ராஜராஜேசுவரி அம்மன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

இ. பி. 1750 ஆம் ஆண்டு அமைக்கப்பெற்ற மூலஸ்தானமும் நீராவி மண்டபமும், இதுவரை முற்றுப்பெறாமலே இருந்து வந்தன.

இப்பொழுது அவை பழுதடைந்தும், வெடிப்புகள் ஏற்பட்டும் காணப்பெற்றமையால் அவற்றை அவசியம் புனர்நிர்மாணம் செய்ய வேண்டும் என்று தீர்மானித்தோம், அதற்கான வாய்ப்பை எதிர் பார்த்திருந்தோம்.

வேறு திருப்பணி வேலைகள் இங்கு நிறைய உண்டு. ஆயின், அவற்றிற்கான தீராந்திகள் பெறுவது அப்போது கஷ்டமாக இருந்தது. எனவே மூலஸ்தானத்தையும், நீராவி மண்டபத்தையும் புனரமைப்புச் செய்யலாம்; அவற்றிற்குத் தேவையான மூலப் பொருட்களை அதிக சிரமமின்றிப் பெற்றுவிடலாம் என்று தீர்மானித்தோம்.

1989 வைகாசி 22ல் வாலஸ்தாபனம் செய்தோம். மிகவும் உறுதியான அத்திவாரம் இட்டு, மூலஸ்தான நீராவி மண்டப வேலைகள் ஆரம்பமாகின. முன்பு உபயோகிக்கப்பட்ட பழைய வைரக் கற்களோடு புதிய கற்களுந் தேடிச் செப்பனிட்டு, நிறைவான, அழகான மூலஸ்தானம், நீராவி மண்டபம், விமானம், தூபி என்பன அமைக்கப்பெற்றன. அத்துடன், சிவகாமி அம்மன் கோவிலுக்கும், பிள்ளையார், கந்தசுவாமியார் கோவில்களுக்கும் விமானங்கள் கட்டப் பெற்றன. நாகதம்பிரான், சனீஸ்வரன், வைரவர் கோவில்கள் திருத்திப் புதிதாகக் கட்டப்பெற்று விமானமும் தூபியும், அமைக்கப்பெற்றன. ஸ்தம்பகுறடும் திருத்தி கல் திருப்பணியாக அமைக்கப்பெற்றன.

வேலைகள் எவ்வளவு துரிதமாக, திறமையானதாக நடைபெற்றனவோ அவ்வளவுக்கு நாட்டின் நிலமை கஷ்டமானதாகிக் கொண்டு வந்தது. இந்நிலையில் மகாகும்பாபிஷேகத்தை எப்போது செய்வது? எப்படிச் செய்வது? என்ற கவலை எழுந்தது. எப்படியாவது, 1991ல் கும்பாபிஷேகம் நடைபெற வேண்டும் என்ற முடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வோடு, குறைவேலைகளை ஓரளவு பூர்த்தி செய்து 14 - 06 - 91ல் மகாகும்பாபிஷேக விஞ்ஞாபனம் அச்சடிக்கும் திருவருட் செயல் கைகூடியது.

30 - 06 - 91ல் மகாகும்பாபிஷேகத்திற்கான கிரியாகால நிகழ்சிகள் ஆரம்பமாயின. 04 - 07 - 91ல் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. 45 நாட்கள் மண்டலாபிஷேகம் காலையும் மாலையும் நிகழ்ந்தது.

மேலும் இந்தக் கும்பாபிஷேக வைபவத்தையொட்டிய ஒரு மலர் வெளியிட வேண்டுமென அன்பர்கள், அடியார்கள் விரும்பினார்கள். அதில் முன்னைய காலங்களில் நடைபெற்ற கும்பாபிஷேக நினைவுகளும் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் ஆலயத்தின் பூர்வீக வரலாறும்அமைந்திருக்க வேண்டும் என்னும் விருப்பத்தினால்.

மட்டுவில் பன்றித்தலைச்சிக் கண்ணகை அம்மன் ஆலய பூர்வீக வரலாறும் மகாகும்பாபிஷேக வைபவமும் என்னும் இந்நூலை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

வணக்கம்

மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன்
தேவஸ்தானம்,
தர்மகர்த்தா சபையினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | சமர்ப்பணம் | |
| 2. | நற்சிந்தனை | |
| 3. | முகவுரை | |
| 4. | ஆசிச்செய்திகள் | |
| | அ) நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் | |
| | ஆ) சிவஸ்ரீ ச. ப்ா. வைத்தியநாத சிவாச்சாரியார் | |
| | இ) சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள் | |
| | ஈ) சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி | |
| | உ) பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா | |
| | ஊ) திரு. ஆ. கந்தையா ( இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபர் ) | |
| | எ) திரு. அ. சிவஞானம் ஆசிரியர் | |
| | ஏ) அருட்கவி சீ. விநாசித்தம்பி | |
| 5 | தொடக்கவுரை ... ... ... | 01 |
| 6. | ஆலய வளர்ச்சி வரலாறு ... ... | 03 |
| 7. | ஒரு கண்ணோட்டம் ... ... ... | 07 |
| 8. | பன்றித்தலைச்சி அம்மன் ... ... | 08 |
| 9. | தேவஸ்தான பரிபாலனம் ... ... | 10 |
| 10. | கோவில் பதிவு ... ... | 12 |
| 11. | சக்தி வழிபாடு ... ... | 13 |
| 12. | அம்பிகையும் தமிழும் ... ... | 16 |
| 13. | கும்பாபிஷேக நிகழ்ச்சிகள் ( வர்ணனை ) ... | 18 |
| 14. | கும்பாபிஷேக தத்துவம் ... ... | 22 |
| 15. | சிவநெறி சீர்பெற அன்பு செய்வோம் ... ... | 24 |
| 16. | அம்பிகை அருள் ... | 25 |
| 17. | எல்லோருக்கும் பொதுவான சக்தி வழிபாடு ... | 26 |
| 18. | அன்னை வழிபாடு ... ... | 29 |
| 19. | துவாசாரோகணம் ... ... | 31 |
| 20. | சக்தி தத்துவம் ... ... | 32 |
| 21. | ஸ்ரீ சக்கர பூஜை ... ... | 35 |
| 22. | மஹோற்சவம் ... ... | 37 |
| 23. | உற்சவங்கள் ... ... | 38 |
| 24. | மஹோற்சவ கால வாகனக் கிரமங்கள் ... ... | 41 |
| 25. | ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் திருஊஞ்சல் ... | 42 |
| 26. | பக்தரின் அற்புதத் தெய்வம் ... ... | 46 |
| 27. | தோத்திர மாலை ... ... | 47 |
| 28. | ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அஷ்டகம் ... ... | 51 |
| 29. | பன்றித்தலைச்சி அம்பாள் துதி ... ... | 53 |
| 30. | திருமுறைகள் ... ... | 55 |
| 31. | மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபனம் ( 1946-ம் ஆண்டு ) ... | 58 |
| 32 | மஹோற்சவ விஞ்ஞாபனம் ( 1946-ம் ஆண்டு ) ... | 59 |
| 33. | மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபனம் ( 1955-ம் ஆண்டு ) ... | 60 |
| 34. | மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபனம் ( 1964-ம் ஆண்டு ) ... | 61 |
| 34. | மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபனம் ( 1991-ம் ஆண்டு ) ... | 63 |
| 36. | நன்றியுரை ... ... ... | 66 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன
### முதல்வர் அவர்களின்
# ஆசியுரை

அருளோங்கும் அம்பாள் அடியார்களே!

பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் தேவஸ்தான மஹா கும்பாபிஷேகம் யாதானுமொரு குறையின்றி நனிதே நிறைவுற்றது பெருமகிழ்ச்சிக் குரிய தொன்றாகும். ஒருமையுடனும், சித்த சுத்தியுடனும் அம்பாளை வழிபட்டு அருள் பெற்றுய்ந்த அடியார்களின் உண்மைச் சரிதைகளை யாம் அறிவோம் புராதன வரலாற்றுப் பெருமைமிக்க இத்தேவஸ்தானத்தை அறியாதார் இக்குடாநாட்டில் இலர். மற்றும் தேவாலயங்களிலும் பொங்கல் வழிபாடு உண்டு. ஆனால் மட்டுவில் அம்மன் கோயில் பொங்கல் என்றால் சைவமக்கள் உள்ளங்களிலே, அதில் கலந்து கொள்ள வேண்டுமென்ற பக்தி ஆர்வம் பெருகுவதை யாம் அறிவோம்.

இம் மஹாகும்பாபிஷேகம் செவ்வனே நிறைவுற நிறை நெஞ்சோடு நிதி உதவி புரிந்தும், எல்லாவகையாலும் சுயநலமில்லாத் தொண்டுகள் ஆற்றியும் துணை நின்ற அன்பர்களைப் பாராட்டி, எல்லோருக்கும் அம்பாளின் பேரருள் வேண்டி எமது உளமார்ந்த நல்லாசிகளை வழங்குகின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

ஸ்ரீலஸ்ரீ குருமஹா சந்நிதானம்

பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம், இலங்கை.
14-07-1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
தேவிமயம்

சிவாகம வித்யாபூஷணம், கிரியாரத்தினம்

# சிவஸ்ரீ ச. பா. வைத்தியநாத சிவாச்சாரியார்

அவர்கள் வழங்கிய

# நல்லாசிகள்

**ஸ்துதி**

*சொல்லும் பொருளுமென நடமாடும் துணைவருடன்*
*புல்லும், பரிமளப் பூங்கொடியேநின், புதுமலர்த்தாள்*
*அல்லும் பகலுந்தொழு மவர்க்கேயழியா வரசும்*
*செல்லும் தவநெறியும் சிவலோகமும் சித்திக்குமே! – (அபிராமியந்தாதி)*

சிவத்தின் கருணையே அருட்சக்தி என்று ஆகமநூல் கூறுகிறது அந்த அருட்சக்தி பிரபஞ்சத்தை இயக்கிக்கொண்டிருக்கிறது. பிரபஞ்சத்தில் உள்ள தாவரசங்கமப்பொருள்கள் யாவற்றுக்கும் அருட்சக்தி தாயாக விளங்குகின்றது. ஆயிரம் பெயர் கூறி அன்னையை வழிபடத் தொடங்கும் பொழுது முதலில் ஸ்ரீமாத்திரே நம என்று கூறி வழிபட்டு வருவதை நாம் காண்கின்ரும். சகல உயிர்களுக்கும் தாயாக விளங்கும் தேவிக்கு வணக்கம் என்பது அதன் பொருள். குபுத்திரோஜா, யெதகு, வசித, மிகு, மாதா, நபவதி, என்று ஒரு பெரியார் போற்றியிருக்கிருர். சொற்கேளாத துட்டப்பிள்ளைகள் பிறக்கக்கூடும் ஆனல் பிள்ளையை வெறுக்கக்கூறும் தாய் இருக்கமாட்டாள் என்பது இதன் பொருளாகும். இந்தக்குணம், உலகமாதாவாகிய ஸ்ரீகண்ணகை அம்பாளுக்கு, இயற்கையாகவே அமைந்ததாகும். அந்த அருள்மிகு ஸ்ரீ கண்ணகை புண்ணிய பூமியாகிய மட்டுவிலில் வாழும் சைவமக்களுக்கு அந்த இடத்திலே மிகச்சிறப்பாக சிற்பமுறைப்படி அமைந்த அழகிய ஸ்தூலலிங்கமாகிய ஸ்தூபியுடன் ஆலயந்தன்னில் எழுந்தருளி அருள் பாலித்து வருகின்ருள். ஊருக்கு அழகு கோயில் என்பது முதுமொழி. ஆலயங்கள் பல அழகு செய்ய விளங்குவது மட்டுவில் பன்றிச்தலைச்சி திருப்பதி. அப்பகுதியில் உள்ள ஆலயமாகும். மிகப் பெருமை வாய்ந்தது எனவே இவ்வாலய மகாகும்பாபிஷேகத்தைக் கண்டுகளிக்க பேர்ராவர்த்துடன் இருக்கும் தொண்டர்கள் நிர்வாக அன்பர்கள், பொருளுதவிய தர்மசீலர்கள், மற்றும்முள்ள சைவநன் மக்கள் எல்லோருக்கும் இந்த நந்நாளில் எல்லாம் வல்ல ஸ்ரீகண்ணகை அம்பாளின் திருவருளால் சகல நலன்களும், பெற்று இனிது வாழும் வண்ணம் அம்பிகையை வேண்டி நல்லாசி கூறுகின்றேன்.

சுபமஸ்து

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

ஊரெழு.
14-07-1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள்

அவர்களின்

# ஆசியுரை

அன்னை பராசக்தியின் திருவருட்கோலங்களுள் ஒன்றாக விளங்கும் கண்ணகா பரமேஸ்வரியின் திருவுருவக்காட்சி மட்டுவில் பன்றித்தலைச்சி திவ்யக்ஷேத்திரத்தில் புதிதாக அமைக்கப்பெற்ற கருவறையில் சிறந்த முறையில் புனராவர்த்தன கும்பாபிஷேகம் செய்யப் பெற்று அருட்பொலிவுடன் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. தனக்கே உரித்தான உயர் அழகு தோற்றத்துடன் பிரகாசிக்கும் அன்னையை எவ்வளவு நேரம் நோக்கினும் கண் இமைக்க மறுக்கிறது. பராசக்தியாக, ராஜராஜேஸ்வரியாக, புவனேஸ்வரியாக, மீனாட்சியாக, பர்வதவர்த்தினியாக, கண்ணகா பரமேஸ்வரியாக விளங்குவதெல்லாம் அன்னையின் ஒரே திருவருட்சக்தி தான், சக்தியே எல்லாமாக விளங்குகின்றாள். அன்னையின் கும்பாபிஷேகத்தை நடாத்திவைத்த சிவாசார்யர்கள், ஆதீனகர்த்தாக்கள், திருப்பணி செய்தவர்கள், பக்தர்கள், எல்லோருமே பாக்யம் செய்தவர்கள். எல்லோருக்கும் அன்னையின் திருவருட் கடாட்சம் உண்டு. அவள் அருளால் லோகமே க்ஷேமமாக இருக்க பிரார்த்திக்கின்றேன்.

"குருகுலம்",
இணுவில்.
*14-07-1991*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாள் துணை

சிவத்தமிழ் செல்வி

## துர்க்காதுரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

வழங்கிய

## மட்டுவில் பன்றித்தலைச்சி அம்பாள் ஆலய

# குடமுழுக்கு விழா வாழ்த்துரை

"அரிது அரிது மானிடராதல் அரிது" என்று பாடினார் ஒளவையார் கிடைத்தற்கரிய மானிடப்பிறவியின் மகிமையை உணர்ந்து. வாழவேண்டிய கடமை மனிதப்பிறவி எடுத்தோர் அனைவருக்கும் உண்டு. உலக இன்பங்களைத் துய்ப்பதற்கு மாத்திரம் இறைவன் மானிடப் பிறவியை எமக்குத் தரவில்லை கற்றுக் கேட்டுச் சிந்தித்து தெளிந்து நிற்றற்காகவே இப்பிறவி கிடைத்தது. ஆகவே இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ என்று ஏங்கி ஏங்கி இறைவனை வழிபட்டு அறக்கருமங்களில் ஈடுபட வேண்டும்.

அறக்கருமங்கள் அனைத்திலும் முதன்மையானது திருக்கோயில்களைப் பற்றிய சிந்தனையாகும். இது சிவபுண்ணியம் எனப் பேசப்படும்.

சிந்தனை செய்ய மனம் அமைத்தேன் செப்ப
நாவமைத்தேன்
வந்தனை செய்ய தலை அமைத்தேன்
கை தொழ அமைத்தேன்
பந்தனை செய்வதற்கு அன்பமைத்தேன்
மெய் அரும்ப வைத்தேன்
வெந்த வெண்ணீறணி ஈசற்கு
இவையான் விதித்தனவே.

என்ற வகையில் உடம்பையும், உள்ளத்தையும் ஈஸ்வரார்ப்பணமாக்கி வாழ்ந்தவர்கள் ஞானிகள். அவர்கள் காட்டிய வழி அமைதிவழி! அதுவே அன்புவழி. இந்த வகையில் வாழ்வை அமைத்துக்கொள்ளவே திருக்கோயில்கள் எமக்கு இன்றியமையாதவை.

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற பொன்மொழிக்கு ஏற்ப எம்மக்களுக்குத் தெய்வ நம்பிக்கையும் தர்ம சிந்தனையும் ஒன்றாக இணைவதால் சமீப காலத்தில் ஏற்பட்ட இடர்ப்பாடுகளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியிலும் திருக்கோயிற் பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகிறது. மட்டுவில் பன்றித் தலைச்சி அம்பாள் ஆலயம் தற்போது புனருத்தாரணம் செய்யப்பட்டுக் குடமுழுக்குச் செய்யப்பட்டது மிகவும் மகிழ்ச்சிக்குரிய நிகழ்ச்சியாகும். எமது இலட்சியச் சின்னங்களாக விளங்குவன திருக்கோயில்களே. இவற்றின் வளர்ச்சியிலே தான் எம்மினத்தின் எழுச்சி ஓங்கவேண்டும். இவ்வுண்மையை மாமன்னர்களும் ஞானிகளும் நன்கு உணர்ந்திருந்தனர். கும்பாபிஷேகம் என்பது எல்லா வகையான குறைபாடுகளும் நீங்கி திருவருள் விளக்கம் மேம்படுவதற்குரிய பெருஞ்சாந்தியாகும். பொங்கலாலும், பூசைகளாலும் பொலிவு பெற்றுத் திகழ்பவள் எங்கள் பன்றித் தலைச்சி அம்பாள். விரும்பித் தொழும் அடியாரின் வேதனைகளை மாற்றி வைப்பவள், அவள் அற்புத சக்தி கொண்ட இந்த அன்னையின் திருவடிகளை வணங்கி ஆறுதல் பெறுபவர் பலர். எனவே இன்று குடமுழுக்கு மூலம் புதுமை பெற்று விளங்கும் இவ்வாலயச் சிறப்பைப் பாராட்டவேண்டிய கடமை எமக்கு உண்டு. அருட்கடமையாகவும் ஆத்மீக விருப்பாகவும் கொண்டு இதனை நிறைவேற்றிய அனைவருக்கும் எனது வாழ்த்து உரித்தாகுக.

" அஞ்சல் மொழியாள் அருந்தவப் பெண்பிள்ளை
செஞ்சொல் மடமொழி சீருடைச் சேயிழை
தஞ்சம் என்றெண்ணித் தன்டி போற்றுவார்க்கு
இன்சொல் அளிக்கும் இறைவி என்றுரே "

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.

செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி
தலைவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சங்கீத கதாப்பிரசங்க வித்துவான்

நல்லைக் குருமணியின் பிரதம சிஷ்யன்

கானகதாவாரிதி, முத்தமிழ் மாமணி

## பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா

( ஆசிரியர் ) அவர்கள் வழங்கிய

# ஆசியுரை

ஆயும், அறிவும் கடந்த அரனுக்குத் தாயும், மகளும், தாரமுமாக விளங்குபவள் அம்பிகை. இவளே சகல ஆற்றல்களுக்கும் இருப்பிடமாவாள். அமைதியான வாழ்வையும், அளவில்லாத ஆனந்தத்தையும், அருளும் அன்னையாக மிளிர்கின்றாள். இவளை உபாசித்துப் பெரும் புண்ணியம் பெற்றோர் பலர். எவனுக்கு மறுபிறவி என்பது ஒன்று இல்லையோ அவனே அம்பிகையை உபாசிக்கும் பாக்கியம் பெற்றவனாவான். நம்நாட்டில் தேவி வழிபாடு மிகச் சிறந்து காணப்படுகிறது. இந்தவகையில் மட்டுவில் அருள்மிகு பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாளுக்கு அடியார்கள் பக்திபூர்வமாக மகாகும்பாபிஷேகம் செய்வித்ததை அறிந்து பெருமகிழ்ச்சி கொண்டேன். அம்பிகையின் ஆலயத்தை மீண்டும் புதுப்பித்து கும்பாபிஷேகம் நிகழ்த்துதல் பெரும் சிவபுண்ணியமாகும். இம்மரபுக்கேற்ப மட்டுவில் வாழ் சைவப்பெருமக்கள் அம்பிகையின் திருப்பணிக் கைங்கரியத்தை அவளருளால் இனிதே நிறைவு செய்து அம்பிகையின் மகாகும்பாபிஷேகத்தைக் காணும்பேறு பெற்றுள்ளனர். அதனை அடிப்படையாகக் கொண்டு வெளிவரும் இந்த கும்பாபிஷேக விழாச் சிறப்பு மலர் பக்தகோடிகளின் மனதில், இல்லங்களில் மணம் வீசவும், நறுமணம் நிறைந்த வாடாத மலராகத் திகழவும் எல்லாம் வல்ல அம்பிகையின் பாதக்கமலங்களைப் பிரார்த்தித்து நல்லாசி கூறி அமைகிறேன்.

சுபமஸ்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. ஆ. கந்தையா
( இளைப்பாறிய உ. அ. அதிபர் )
அவர்களின்

# ஆசியுரை

சைவசமய வரலாற்றில் தென்கைலாயம் என்று கூறப்படும் பிரதேசத்தில் யாழ் குடாநாடும் அடங்கும். யாழ் குடாநாட்டில் முதன் முதலாக அமைக்கப்பட்ட சிவாலயம் தென்மராட்சியிற்தான் உண்டு. மட்டுவில் வடக்கு தென்மராட்சியின் வடபகுதியாகும். சைவமணங் கமழும் மட்டுவில் வடக்கில் எழுந்தருளியுள்ள கண்ணகை அம்பாள் ஆலயம் தொன்மை வாய்ந்தது. இக்கோயில் ஏறக்குறைய இருநூற் றைம்பது ஆண்டுகளுக்கு முன்பே அமைக்கப்பட்டதும் யாழ் குடா நாட்டின் எல்லாப்பகுதிகளிலுமிருந்து பக்தர்கள் இதனைத் தங்கள் வழிபாட்டிடமாகக் கொண்டனர். இங்கே பிரதானமாகக் கொண்டாடப் படுவது பங்குனித்திங்கள் தோறும் பொங்கல் செய்வதேயாகும். உழவன் தனது வயலில் விளைந்த நெல்லை அறுவடை செய்ததும் கொடிய தொற்றுநோய்கள் அணுகாவண்ணம் அம்பாளுக்குப் பொங் கிப் படைப்பான்.

இக்கோயில் நிர்வாகம் மாவட்ட நீதிபதியால் நியமிக்கப்பட்ட ஒரு தர்மகர்த்தா சபையினால் நடாத்தப்படுகின்றது. இக்கோயில் ஒரு மடாலயமாக இருந்ததை மாற்றி, மூலஸ்தானம், விமானம் முதலியன அமைத்து, இப்பொழுது புனராவர்த்தன குடமுழுக்கும் நடந்தேறியுள்ளது.

நாட்டில் தற்போது நிலவும் சூழ்நிலையில் இவற்றை அமைத்து குடமுழுக்குச் செய்து முடித்தது அம்பாளின் திருவருளே யாகும்.

இதைச் செய்வதில் ஆர்வம்காட்டி ஒத்துழைத்த சகல அம்பாள் அடியார்களுக்கும் நாம் நன்றி கூறுவதோடு, அவர்கள் அம்பாளின் ஆசியைப் பெறுவார்களெனப் பிரார்த்திக்கின்றோம்.

ஆ. கந்தையா
( இளைப்பாறிய உ. அ. அதிபர் )

கண்டி வீதி,
சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. அ. சிவஞானம் ஆசிரியர்

## அவர்கள் வழங்கிய

# வாழ்த்துரை

மட்டுவிலுக்கு சந்திரபுரம் என்றும் ஒரு பெயர் உண்டு. அதைத் திங்கள் ஊர் என்றும் சொல்லலாம். ஒவ்வொரு திங்களும் பன்றித் தலைச்சிக் கண்ணகை அம்மன் கோயிலில் விசேட பூசைகள் நடைபெறுகின்றன, தினமும் ஆறுகாலப்பூசை நிகழ்கிறது. ஆனால் திங்களில் தான் பெருந்திரளான மக்கள் வந்து வழிபடுகின்றனர். பங்குனித் திங்கள் கார்த்திகைத் திங்கள் என்பன இக்கோயிலின் சிறந்த தினங்களாகும். திங்கள் ஒரு குளிர்ந்த கிரகம் அதுபோல எங்கள் அன்னையும் ஒரு குளிர்ந்த கருணைத்தெய்வம். அவளைத் தொடர்ந்து வழிபடுகிறவர்களைக் கேட்டால் தெரியும் அவள் செய்யும் புதுமை, யாராவது தொடர்ந்து நாலு திங்களுக்கு இங்கே வந்து வழிபட்டால் அவர்களுக்கு ஏதோ ஒரு சிறந்த நிகழ்ச்சி நடக்கும். நம்பினவரைக் கைவிடாள் எங்கள் அன்னை, காலத்துக்குக் காலம் கோயில்களைப் புதுப்பித்து கும்பாபிஷேகம் செய்ய சக்தி கூடும். அன்னையின் சக்தி அதிகரித்து அனைத்து அடியாரையும் நல்வழிப்படுத்திக் கொண்டுவருகிறது. இங்கே வழிபடும் எத்தனையோ அடியார் அவள்செய்யும் அற்புதங்களைக் கூறக் கேட்டிருக்கின்றோம். கோயிலைத் திருத்தி கும்பாபிஷேகம் செய்வதும் ஒரு சிறந்த சிவத்தொண்டுதான். அதைத் துணிந்து செய்த கோயில் முகாமையாளர் திரு. சி. சிவகுரு அவர்களையும் தலைவர் திரு. ஆ. கந்தையா அவர்களையும் நாங்கள் போற்றவேண்டும். எங்களுக்கு ஒரு அழகான கோயிலைப் புதுப்பித்து தந்து ஒழுங்காக நிர்வகித்து இந்த ஊரையும், சக்திவழிபாட்டையும் மேம்பாடடையச் செய்த திரு. சி. சிவகுரு அவர்களின் தொண்டு பாராட்டப்பட வேண்டிய தொன்றாகும். இக்கோயில் இன்னும் பல சிறப்புக்களை பெற்று பல்லாண்டுகாலம் அருள்பொழிந்து இருக்க எங்கள் பன்றித்தலைச்சி கண்ணகை அருள் பாலிப்பாளாக, எத்தனையோ ஆண்டுகளுக்கொரு முறைதான் ஒரு கும்பாபிஷேகம் நிகழ்வது வழக்கம். அதைத்தக்க முறையில் நடக்க ஒழுங்கு செய்த தர்மகர்த்தா சபையினரும் சிவாச்சாரியார்களும், ஊரவர்களும், தொழிலாளிகளும் நீடூழிவாழ்க. இது எங்கள் பிற்சந்ததிக்கு ஓர் சிறந்த சொத்து, ஊருக்கும் புகழ் கோயில் முகாமையாளருக்கும் புகழ், கண்ணகித்தாய் கண்கண்ட தெய்வம், அன்னை கோயில் வாழ்க. வாழ்க அவள் அடியாரெல்லாம்.

சுபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டுவில் பன்றித்தலைச்சி அம்பாள் ஆலய குடமுழுக்கு விழா

## வாழ்த்து

### அடியரெல்லாம் கற்பகம்போல வாழி !

தண்ணருள் வளமோங்கு மட்டுவிற் பதிப்பன்றித்
தலைச்சியெனப் பேரெடுத்துச்
சகம்புகழும் அற்புதம் பலகாட்டி கண்ணகைத்
தாயாய் விளங்கும் இறைவி

விண்ணகம் விட்டிந்த மண்ணகம் நிலைகொள்ள
வேதநெறிக் கோயில் கட்டி
மேவுபிர சோற்பத்தி ஆனிமதி இருபதின்
வியாழன்நாள் அன்னவட்கு

புண்ணிய கும்பாபிசே கம்செய்து மண்டலப்
பூரணத் தினத்தில் அன்னை
புகழ்பேசும் இம்மலரைப் போற்றுபரி பாலனப்
புனிதர் வெளியீடு செய்தார்

கண்ணகையும் இராச ராசேஸ்வரியு மாய்நிற்கும்
காரணியின் அடிய ரிதனைக்
கற்றுக் கருத்திலருள் பெற்றுச் சுகம்தரும்
கற்பகம் போல வாழி.

அருட்கவி சீ. விநாசித்தம்பி

பொறுப்புரிமை - பரிபாலன சபை
ஸ்ரீ நாகபூஷணி நாராயணர்
தேவஸ்தானம்
நாகேஸ்வரம் - அளவெட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# தொடக்கவுரை

பண்டிதர்
க. சிவகுருநாதன்
நா. நல்லதம்பி

" பன்றித் தலைச்சி " என்ற இச்சொற்றொடரை இலங்கையில் அறியாதார் இல்லை யெனலாம். இச்சொற்றொடரோடு பங்குனித் திங்களும் சேர்ந்து வரும். யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள சைவமக்கள் ஒவ்வொருவரும் பங்குனித் திங்கட்கிழமைகளில் ஒரு கிழமையிலோ, அது வசதிவரா விட்டால், இன்னொரு நாளிலோ, பன்றித் தலைச்சி அம்பாள் கோவிலுக்குப் போகாமலிருக்கமாட்டார்கள்.

பன்றித்தலைச்சி அம்பாள் கோவிலுக்குப் போகிறவர்களுடன் கலந்து பேசினால், வருடமொருமுறை தன் தாயைக் காணச் செல்பவர்களின் மனப்பாங்கை அவர்களிடம் காணலாம்.

யாழ்ப்பாணத்தில் மற்ற ஆலயங்களுக்குப் போவதற்கும், பன்றித்தலைச்சி அம்பாள் ஆலயத்திற்குப் போவதற்கும் நிறைய வித்தியாசமுண்டு, பன்றித்தலைச்சிக்குப் போகிறவர்கள் அம்பாள் தீர்த்தத்தில் ஒரு குடம் தண்ணீராலேனும் முழுகாமல் விடமாட்டார்கள். தாங்களே பொங்கல், வேறுபலகாரங்கள் செய்து படைப்பார்கள். ஆகக் குறைந்தது ஒரு சர்க்கரைப் பொங்கலாவது செய்வார்கள். கோவில் வாசலில் தாங்களே அம்பாளுக்கு நிவேதித்து வணங்குவார்கள். கண்ணப்பர் காளாத்தியப்பருக்குச் செய்தது போல, அம்பாளுக்குப் படைத்து நின்று வணங்குவார்கள்.

யாழ்ப்பாணத்தில் நாலாபுறமிருந்தும் முற்காலத்தில் மக்கள் கால்நடையாகவும் மாட்டுவண்டி மூலமாகவும் வருவார்கள். கே. விலிலிந்து ஐந்து மைலுக்கப்பாலும் நான்கு திக்கிலும் இக்கோவில் யாத்திரிகர்களுக்காகத் தண்ணீர்ப்பந்தல் வைத்திருப்பார்கள். பங்குனிமாத வெயிலில் வருபவர்களுக்கு இத்தண்ணீர்ப்பந்தல்கள் அன்னையின் அருள்போன்று குளிர்விக்கும். 1950ம் ஆண்டளவில் இக்கோவிலுக்கு பல பக்கங்களிலுமிருந்தும் பேருந்து வண்டி ஓடத் தொடங்கியது. பேருந்தில் வருகிறவர்களும் தண்ணீர்பந்தல் உள்ள இடங்களில் நிறுத்தித் தாக சாந்தி செய்வார்கள். இப்பொழுது துவிச்சக்கர வண்டியில் வருபவர்கள் தான் அதிகம்.

பன்றித்தலைச்சிப் பங்குனித் திங்களுக்கும் முட்டிக்கத்தரிக்காய்களுக்கும் தொடர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புண்டு. சனங்கள் மட்டுவிற் கத்தரிக்காய்க்காகத்தான் வருகிறார்களோ என்று கூட நினைக்கத் தோன்றும்.

கோவில் வெளிவீதி பெரிய பரப்பினையுடையது. வருகிறவர்களெல்லோரும் இடம் இல்லை என்று சொல்லாமல் அடுப்பு மூட்டக் கற்களும் போதியளவு கிடைக்கும். பங்குனித்திங்கள் வைகறை தொடக்கம் மாலை வரையும் யாகசாலை போன்று பாகசாலை நடக்கும்.

இதைவிட, காவடி வகைகள் பல. காலை முதல் மாலை வரை கோவிலை வலம் வரும்.

இத்தியாதி தனிப்பெரும் மகிமையுடைய பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாளுக்கு, 1991 - 07 - 04ல் நடைபெற்ற மகாகும்பாபிஷேகத்தை யொட்டி வெளியிடும் இந்நூல் பொற்குடத்துக்குப் பொட்டிட்டது போல இருக்கும். இந்நூலைத் தொகுக்க ஒரு சிரமமும் இருக்கவில்லை. பெரியவர்கள் கட்டுரைகளை அன்புடன் உவந்தளிர்த்தார்கள். அவைகூடி ஒரு நூலாகத் திகழ்கின்றது; அவ்வளவே.

மனிதரும் தேவரும் மாயாமுனிவரும் வந்து சென்னி
குனிதரும் சேவடிக் கோமளமே! கொன்றையார் சடைமேல்
பனிதரும் திங்களும் பாம்பும் பகீரதியும் படைத்த
தனிதரும் நீயும் என் புந்தியெந் நாளும் பொருந்துகவே.

— அபிராமி அந்தாதி

இறைவனுடைய இறைவியே உபாயம் என்றும் அவன் அருள் இல்லையாகில் இறைவனையடைய முடியாதென்றும் இச் சக்தியின் அருள் முதலில் உள்ளத்தில் தோய்ந்தால் அன்றி இறையறிவு ஏற்படாதென்றும் இதனையே சைவசித்தாந்தம் சத்திநிபாதம் என்றும் கூறும். இறைவனும் இறைவியும் சேர்ந்தே இருப்பதுதான் பூரணத்வம். ஆற்றல் உடையவனை விட்டு அவன் ஆற்றலை மட்டும் பிரிக்க முடியாது. அக்கினியும் சூடும் போலவும் இருவம் அபின்னமாகாவலர் இந்த தத்துவத்தை நமது சமயங்கள் யாவும் ஒப்புக்கொள்கின்றன. இறைவனையும் இறைவியையும் அபின்னமாகவே பாவித்து உபசரிக்க வேண்டும். உபாஸகனின் உள்ளத்தில் அவர்கள் இணைந்து விடுவதால் உபாஸகனும் தாதாம்யம் அடைந்து சக்தி, சிவம், ஜீவன் மூன்றும் ஒன்றாகிவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டுவில் பன்றித்தலைச்சி

## கண்ணகை அம்மன்

# ஆலய வளர்ச்சி வரலாறு

மிகவுந் தொன்மை வாய்ந்த மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் ஆலயத்தின் ஆரம்ப காலம் பற்றித் திட்டவட்டமாக எதுவும் கூற இயலவில்லை.

இப்போது எமக்குக் கிடைத்துள்ள ஒரு பழைய ஆதாரம் இக்கோவில் அமைந்துள்ள காணியின் உறுதியாகும். அந்த உறுதியின் படி இக்காணியின் பெயர் '' அத்தாய் வளவு '' என்பதாகும். இதன் நிலப்பரப்பு 65ம் 2 குழியும். இக்காணியின் கிழக்கு எல்லையாக கனகசபை மூத்துக் குமாருவுக்கும் விசுவநாதர் தாமோதரம் பிள்ளைக்கும் உரிய ஆதனமும், ஒழுங்கை முகப்பும், அருணாசலம் கனகசபையால் கட்டப்பெற்ற மடமும் அதற்குரிய நிலமும் உள்ளன. வடக்கு எல்லையாக பிரதான வீதி சொல்லப்படுகிறது. அது இக்கோவிலின். வடக்கு வீதியுமாகும். மேற்கு எல்லையாக, கிராமச்சங்கத் தெரு இருக்கிறது. அது கோவிலின் மேற்கு வீதியுமாகும். தெற்கு இக்கோவிலுக்குரிய ஒரு ஆதனம்.

இந்த உறுதியில் கூறியுள்ள '' அத்தாய் வளவுக்குள் '' பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் கோயிலும், பன்றித்தலைச்சி பிள்ளையார் கோவிலும், ( பன்றித்தலைச்சி ஆலடிப்பிள்ளையார்,வீரகத்திப்பிள்ளையார் என்றும் சொல்லப்பெற்றது ), பாலசுப்பிரமணியர் என நாமம் பூண்ட கந்தசுவாமிப் பெருமான் கோவிலும் மற்றும் பரிவார மூர்த்திகளின் பீடங்களும், திருக்குளமும் அமைந்திருந்தன என்று அறியக் கூடியதாக இருக்கிறது. இவை, வெவ்வேறு விதமான பூசைமுறைகளைக் கொண்டவையாக இருந்து வந்துள்ளன. என்றும் அறிய முடிகிறது.

இப்போது நாம் காணுகின்ற திருக்குளம் இந்த உறுதியில் காட்டப்பட்ட திருக்குளமே யாகும். ( இது பின்னர் செய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யப்பட்ட புனரமைப்பு வேலைகளுடன் இன்று காட்சியளிக்கிறது ) ஆயின், பன்றித் தலைச்சி கண்ணகை அம்மன் கோவில் இப்போதுள்ள இடத்தில் முன்னர் இருக்க வில்லை. அத்திருக்கோவில் இதற்கு வடக்கு பக்கமாக இருந்திருக்க வேண்டும். அதற் கான செங்கற் கட்டிட இடிபாடுகள் வடக்குப் பக்கத்தில் இன்றும் காணப்படு கின்றன. மற்றும், பிள்ளையார் கோவிலும் கந்தசுவாமியார் கோவிலும் இப்போதுள்ள கோவில்களின் மேற்குப்பக்கமாக இருந்த மைக்கான அடையாளங்களும் காணப்படு கின்றன. இவை காலப்போக்கில், பன்றித் தலைச்சிக் கண்ணகை அம்மனை மூலமூர்த்தி யாகக்கொண்ட ஒரு கோயில் அமைப்பில் சேர்க்கப்பட்டிருக்கலாம்.

இன்று நாம் காணும் இடத்தில் இந்த ஆலயம் கி. பி 1750ஆம் ஆண்டில் திரு நாகர் கதிர்காமர் என்பவரால் வைரக்கற்களைக் கொண்டு கட்டப்பெற்றதை நாம் அறிய முடிகிறது. முன்னைய செங்கற் கட்டிடங் களாலான கோவில்களையும் இந்த நாகர் கதிர்காமரின் மூன்னோர்கள் தாம் கட்டி னார்கள் என்பது கர்ணபரம்பரைக் கதை யாகும்.

கி. பி 1750ல் நாகர் கதிர்காமர் அமைத்த மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் கோவிலை அவரே பராமரித்துப் பூசை செய்து வந்தார். பின்னர் அவருடைய மகன் வேலாயுதர் என்பவர் பராமரிப்பையும் பூசையையும் செய்துவந்தார். 1800ல் திரு. வேலாயுதரின் மகன் கதிர்காமர் என்பவர் கோயில் நிர் வாகம் பூசை முதலியவற்றின் பொறுப்பை ஏற்றார். அப்போது இவரது மகன் அப்பாக் குட்டி இவருக்கு உதவியாளாக இருந்துள் ளார். 1859ல் கதிர்காமரின் மனைவியான ( கைம்பெண் ) தெய்வானையும் கதிர்காமர் வேலாயுதரும் ( அப்பொழுது உடையாராக இருந்தவர் ) இவரின் சகோ தரர்களான தியாகராசா, இராமலிங்கம், சரவணமுத்து ஆகியோரும் சேர்ந்து கதிர் காமர் அப்பாக்குட்டியை பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் கோவில் பரிபாலனத் தையும், பூசையையும் பன்றித்தலைச்சி பிள்ளையார் கோவில் பரிபாலனத்தையும் கவனிக்கும்படி தத்துவநியமனம் எழுதிக் கொடுத்தார்கள். யாழ் கச்சேரி 1884 ஆம் ஆண்டு கோவில் பதிவில் காணப்படுகிறது. 1892ல் கதிர்காமர் தியாகராசா நிர்வாகம், பூசை முதலியவற்றின் பொறுப்பில் இருப்ப தாக யாழ். கைச்சேரி பதிவு காட்டுகிறது.

1900ஆம் ஆண்டில் வேலாயுத உடையாரின் மகன கதிர்காமர் கோவில் நிர்வாகத்தை யும் பூசைமுறைகளையும் ஏற்றுக்கொண் டார். இவர் தனது நிர்வாக காலத்தில் முன்னைய சில முறைகளில் மாற்றத்தைக் கொண்டுவந்தார். இதுவரை பங்குனித் திங்கள் திருவிழாக்களும் சுவாமி வீதிவலம் வருவதும் இருக்கவில்லை. பூசைமுறைகளை யும் தாமே செய்து வந்தனர். பிள்ளையார், கந்தசுவாமியார், வைரவர் பூசைகளை மாத்திரம் பிராமணர் மூலம் செய்தனர். 1900 ஆம் ஆண்டிலிருந்து, பங்குனித் திங்கள் திருவிழாவும் வீதிவலம் வருதலும் மாலை 5 - 00 மணிக்கு முன் நடைபெற ஒழுங்கு செய்தனர். அத்துடன் பன்றித் தலைச்சி கண்ணகை அம்மன் பூசையையும் பிராமணர்களே செய்யவேண்டும் என விதித் தனர். திருக்குளம் திருத்தியமைத்து வைரக் கற்களால் (வெள்ளைக்கற்களால்) படிக்கட் டுகளும் கட்டுவித்தவர் இந்த திரு. வே. கதிர்காமர் அவர்களே.

1919 ஆம் ஆண்டு கதிர்காமர் மகள் சின்னக்குட்டியும் கணவன் சின்னத்தம்பி சின்னப்பாவும் இக்கோயிலின் பரிபாலகர் களாக இருந்தார்கள். 1934 ஆம் ஆண்டு புரட்டாதி தொடக்கம் சின்னப்பா செல்லத் துரை நிர்வாகத்தைக் கையேற்றார். இவ ருடைய காலத்திலும் பல சீர்திருத்தங்கள் செய்யப் பெற்றன. திங்கட்கிழமைகளில் அம்பாளுக்கு இரண்டுநேரப்பூசையும் மற்றய நாட்களில் அபிஷேகமும் விளக்குவைத்தலும் மாத்திரம் நடைபெற்று வந்த முறைமையை மாற்றி, இரண்டுநேர நித்திய பூசைசெய்யும் வழக்கத்தை 1939 லிருந்து நடைமுறைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தினார் இந்த ஆண்டில் வெளி மண்டபம் கட்டப்பெற்றது.

1940 1942 காலப்பகுதியில் கண்ணகை அம்மனின் அர்த்த மண்டபம், மகா மண்டபம், சபை மண்டபம், தரிசன மண்டபம் ஆகியன கட்டப்பெற்றன.

1943 - 07 - 18 தொடக்கம் சின்னப்பா சிவகுரு ஆலய நிர்வாகப் பொறுப்பை கையேற்றார். இதுவரை காலமும் ஆசனத்தில் கும்பம் வைத்து முகம் சாத்தி அம்மனுக்குப் பூசை நடைபெற்று வந்தது. அந்த வழக்கம் கைவிடப்பெற்று, 1946 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் உத்தரட்டாதி நட்சத்திரத்தில், கண்ணகை அம்மன் தாமிர விக்கிரகம் பிரதிட்டைசெய்து மகா கும்பாபிஷேகம் முதன் முதலாகச் செய்வித்தார். மேலும் அதே ஆண்டு மார்கழித் திருவெம்பாவையில் கொடியேற்றத் திருவிழாவையும் முதன்முதலாக ஆரம்பித்தார்.

1947-ல் சின்னப்பா செல்லத்துரை பரிபாலனஞ் செய்தார். ஆயினும் மார்கழி மாத கொடியேற்றத் திருவிழாவை சின்னப்பா சிவகுருவே முன்னின்று நடாத்தி வைத்தார்.

1948-ல் மயில்வாகனம் குழந்தைவேலு கோவில் நிர்வாகத்தை ஏற்றார். இவ்வருடமும் மார்கழிமாத கொடியேற்ற விழா சின்னப்பா சிவகுரு தலைமையிலேயே நடைபெற்றது.

1949-ல் சுற்றுமதில், வைரவர்கோவில், யாகமண்டபம், மணிக்கோபுரம் ஆகிய வற்றிற்கான அத்திவார வேலையை திரு. சி. சிவகுரு செய்வித்தார்.

1950-ல் மணிக்கோபுரத்தின் முதற் தளம் பூர்த்தியானது. இவ்வாண்டிலிருந்து நான்கு நேர நித்தியபூசை நடைமுறைக்கு வந்தது.

1952-லிருந்து ஆறுகாலப்பூசை ஆரம்பிக்கப்பெற்றது.

1955-ல் சம்புரோட்சண கும்பாபிஷேகம் நடைபெற்றது. வைரவகோவில் கட்டிட வேலை முற்றுப்பெற்றுக் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

1958ம் ஆண்டு ஆவணி உத்திரட்டாதியில் சிவகாமி அம்மன் தாமிர விக்கிரகம் புதிதாகச் செய்து பிரதிட்டை செய்து கும்பாபிஷேகம் நிகழ்ந்தது. இரும்பாலான உண்டியல்கள் கோவில் வாசலிலும் வடகிழக்கு பிரதான வீதி முகப்பிலும் வைக்கப் பெற்றன.

1960-ல் கோவில் வாசல் வளவு ( இடப் பக்கம் ) 5½ பரப்பு ரூபா 10 ஆயிரத்துக்கு வாங்கி கோவில்வளவு விஸ்தரிக்கப் பெற்றது

1961-ல் ஆவணி உத்தரட்டாசியில் ஸ்ரீ சக்கரயந்திரம் செய்துவைத்து பிரதிஸ்டை கும்பாஅபிஷேகம் நடைபெற்றது.

1964-ல் மூலமூர்த்திக்கும், பரிவார மூர்த்திகளுக்கும், புதிதாக வைக்கப்பெற்ற சனீஸ்வரருக்கும், சண்டேஸ்வரிக்கும் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

1967-ல் செய்யப் பெற்ற அசையாமணி மணிக்கோபுர வேலை முற்றுப்பெற்று 1968-ல் மணி ஏற்றிவைக்கப்பெற்றுக் கும்பாபிஷேகமும் செய்யப்பெற்றது. 1970-ல் ஆலயப்பிரவேசம் நிகழ்ந்தது. பிள்ளையார் கோவிலும் கந்தசுவாமியார் கோவிலும் வைரக்கல்லால் அமைத்துக் கும்பாபிஷேகமும் நிகழ்ந்தது 1974ல்-ஆகும். கோவிலுக்கும் வீதிகளுக்குமான மின்னிணைப்பு 1974-ல் செய்யப்பெற்றது. புதியகளஞ்சிய அறைகள் இரண்டிற்கான வேலை 1975-ல் தொடங்கி 1977-ல் நிறைவடைந்து. மடைப்பள்ளியும் பணிமனையும் 1976-ல் கட்டப்பெற்றன. கொடித்தம்பத்துக்கு செப்புக்கலசம் செய்தது 1979-ல் ஆகும். 1983-ல் தம்பமண்டபத்தூண்கள் நிறுவப்பெற்று 1985ம், 1986ம் ஆண்டுகளில் தம்பகொட்டகையும் தெற்கு கொட்டகையும் பூர்த்தியாயின. பழையவசந்த மண்டபம் உடைத்து புதிதாக கட்டப்பெற்ற புதிய மஞ்சக் கொட்டகை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு வாகனசாலை அமைத்ததும் 1987-ல் ஆகும். தம்பக்கொட்டகைத் தனம் 1988-ல் பூர்த்தியானது.

1750-ல் அமைந்த மூலஸ்தானமும் நீராவி மண்டப உபபீடம் பழுதடைந்து காணப்பெற்றமையால் ஏறக்குறைய 240 வருடங்களுக்குப் பின் வாலஸ்தாபனம் செய்யும் முக்கிய நிகழ்ச்சி 1989 வைகாசி 22 (4-6-89) ஞாயிறு நிகழ்ந்தது. 1989 ஆவணி 21ந் ( 6-9-89 ) புதன் அத்திவாரம் வைக்கப் பெற்றது இவ்வாண்டில் ஆரம்பமான கட்டிட வேலைகள் 1990ம் ஆண்டின் முழுக் காலப் பகுதியிலும் நடைபெற்று 1991-ல் நிறைவுற்றன. எனவே 1990-ம் ஆண்டு சரித்திரம் படைத்த ஆண்டாகும்.

மூலஸ்தானம், நீராவி மண்டபம் விமானம் என்பனவும், சிவகாமி அம்மன் கோயில், பிள்ளையார் கோவில், கந்த சுவாமி கோவில் வைரவர் கோவில், நாகதம்பிரான் கோவில், சனீஸ்வரன் கோவில், ஆகியவற்றின் விமானங்களும் வைரக்கற்களால் ஸ்தம்பக்குறடும் அழகாக அமைக்கப்பெற்று, 1991 - 7 - 4ல் மஹா கும்பாபிஷேகமும் அதனைத் தொடர்ந்து 45 நாட்கள் மண்டலாபிஷேகமும் நடைபெற்ற சரித்திரப் பிரசித்திபெற்ற நிகழ்ச்சிக்கு மட்டுவில் பன்றித்தலைச்சி அம்பாளின் திருவருட்திறனே உற்ற துணையாகும்.

இவ்விதமாக ஆலயம் மேன்மேலும் சிறப்படையவும் அடியார்கள் பேரருள் பெறவும் எல்லாம் வல்ல பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் அருள் பாலிப்பாராக.

" நங்கடம் பனை பெற்றவள் பங்கினன்
தென் கடம்பை திருக்கரக் கோயிலான்
தன் கடன் அடியேனையுந் தாங்குதல்
என் கடன் பணிசெய்து கிடப்பதே "

— அப்பர் சுவாமிகள்

வணக்கம்

---

பாரும் புனலும் கனலும் வெங்காலும் படர்விதம்பும்
ஊரும் முருகு அவையொளி யூஎருவி ஒன்றுபடச்
சேரும் தலைவி சிவகாம சுந்தரி சீழடிக்கே
சாரும் தலமுடையார் படையாத தனமில்லையே.

பிரிதுவி, அப்பு, தேயுவாயு, ஆகாசம் என்னும் ஐம்பெரும் பூதங்களில் முறையே கந்தம், கிரகம், ரூபம், ஸ்பர்சம், சப்தம் என்ற தர்மத்தின் ரூபமாய் இரண்டறக் கலந்து அந்தர்யாமியாக இருக்கும் சிவகாம சுந்தரியாகிய அபிராமி அம்பிகையின் சிறந்த திருவடிகளில் சரணடையும் பாக்கியம் பெற்ற தவசீலர்கள் அடைய முடியாத செல்வம் ஒன்றுமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் தேவஸ்தான திருப்பணிகள்

# ஒரு கண்ணோட்டம்

கி. பி. 1750 ஆம் ஆண்டு கருவறை மூலஸ்தானம் தனி அறையாக வைரக் கல்லால் கட்டப்பெற்றிருந்தது நீராவி மண்டபத்திற்கான உபபீடமும் அதற்கான தூண்களும் நிறுத்தப்பெற்றிருந்தன.

கி. பி. 1940 — 42 ஆம் வருடங்களில் அர்த்தமண்டபம், மகாமண்டபம், சபைமண்டபம், தரிசனமண்டபம், என்பன வைரக்கல்லால் கட்டப்பெற்றன. 1946ல் முதலாவது மகா கும்பாபிஷேகம் நிகழ்ந்தது.

கி. பி. 1989 - 05 - 22 வாலஸ்தாபனம் செய்து மூலஸ்தானம் அர்த்தமண்டபம், நீராவிமண்டபம், என்பன புதிதாக அத்திவாரம் போட்டுக் கட்டப்பெற்றன. இதுவரை மூலஸ்தானம் பாவுக்கல்லால் மூடி குடிலாக இருந்துவந்தமை அடியார்கள் அறிந்ததே. இப்பொழுது அழகிய விமானமும் சிறு குடிலுடன் கூடிய தூபியும் காட்சியளிக்கின்றன:

சிவகாமி அம்மன், பிள்ளையார், கந்தசுவாமியார் கோவில்களுக்கும் புதிய விமானங்களும் தூபிகளும் கட்டப்பெற்றுள்ளன.

நாகதம்பிரான், வைரவமூர்த்தி, சனீஸ்வரன் கோவில்களும் திருத்தியமைக்கப் பெற்று விமானங்கள் தூபிகளுடன் விளங்குகின்றன.

## நிறைவேறிய திருப்பணிகள்

மூலஸ்தானம்
அர்த்தமண்டபம்
நீராவிமண்டபம்
மகாமண்டபம்
சபைமண்டபம்
தரிசனமண்டபம்
தம்பமண்டபம்
வசந்தமண்டபம்
பிள்ளையார் கோவில்
கந்தசுவாமி கோவில்
நாகதம்பிரான் கோவில்
சனீஸ்வரன் கோவில்
வைரவர் கோவில்
சிவகாமி அம்மன் கோவில்

யாகசாலை
பணிமனை
மடைப்பள்ளி
மடைப்பள்ளிக்கிணறு
திருமஞ்சனக்கிணறு
வில்லறை
களஞ்சிய அறை
குருவாசம்
மணிக்கோபுரம்
சிறுவாகனசாலை
மஞ்சம் நிற்கும் மண்டபம்
படிக்கட்டுகளுடன் திருக்குளம்

தர்மகர்த்தா சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பன்றித்தலைச்சி அம்மன்

ஆதிசக்தியாகவும் வராகச் சிரந்தனை மாற்றிய அன்னை தலமாகவும் விளங்கும் பன்றித்லைச்சி என்னும் திவ்விய க்ஷேத்திரத்தில் ஸ்ரீ கண்ணகை அம்பாளும், ஸ்ரீ சிவகாமி அம்பாளும், ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாளும், ஸ்ரீ கக்கரவாசினி அம்பாளும் எழுந்தருளி அருள்பாலித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஈழவள நாட்டின்கண் உள்ள பழம்பெரும் பதிகளுள் புதுமைமிக்க பன்றித்தலைச்சி அம்மன் தலமும் ஒன்றாகும். ஈழநாட்டிலுள்ள கதிர்காமம், நல்லூர், நயினாதீவு, வல்லிபுரக் கோயில் சந்நிதி, தெல்லிப்பளை துர்க்கை அம்மன் போன்ற அருள்பாலிக்கும் அற்புதக்கோயில்களில் இதுவும் ஒன்று இது அகில இலங்கை மக்களும் அன்புடன் வழிபடும் ஒருபழம்பெரும்புதுமைமிக்கதலம்; சைவமும் தமிழுந் தழைத்தோங்கும் தலம்.

ஆனைமுகன் என்பது ஆனைமுகத்தையுடைய பிள்ளையாரைக் குறிப்பது போல, பன்றித்தலையையுடைய தெய்வம் என்றும், மாட்டுத்தலையை பன்றித்தலையாக்கிய தெய்வம் என்றும், பண்டு தொட்டு இத்தலத்தினள் என்னும் பொருளில் பண்டித்தலைச்சி தெய்வம் என்றும் வழங்கி வருவதாகக் கூறுவர். எதுஎப்படியாயினும், பன்றித்தலைச்சி அம்மன் என்ற பெயரே அருளாச்சியுள்ள பெயராக இன்று விளங்குகிறது.

பங்குனித் திங்களில் பக்தகோடிகள் வைகறை தொடங்கி வந்தவண்ணமிருப்பர் வருபவர்கள் எல்லாம் பொங்கலுக்கு வேண்டிய பொருட்களுடன் வந்து, பொங்கிப் படைத்துத் தாமும் உண்டு அடியார்க்கும் வழங்கி அருள் பெற்றுச் செல்வர். அம்மாளாச்சி தீர்த்தமாகவும் அன்ன ஆகாரமாகவும் நின்று அனைத்துயிரையும் காக்கும் சக்தியாக விளங்குவாள். ஒரு வாளி தீர்த்தமாவது தன் தலையில் ஊற்றாத பக்தர் இல்லை என்றே கூறலாம். அன்று முழுநாளும் பூசையும் அபிஷேகமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலிய விளங்கும் கோயிற் சூழலைப் பத்துமயில்களுக் கப்பால் நின்று பார்த்தால், பக்தர்செய்யும் யாகபுகை (பொங்கல்) முகில்களுடன் கலப்பதைக் காணலாம். தேவர்கள, அன்னையை வழிபட வந்து விட்டதாகவே அன்றைய காட்சிதோன்றும். தாயிடம் வரும் குழந்தைகள் போலப், பன்றித்தலைச்சி அன்னையிடம் பல திக்கிலுமிருந்து ஆடியும் பாடியும் பிரதட்சணம் செய்தும் காவடிஎடுத்தும் பக்தர்கள் வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

கொடிய தொற்று நோய்களும் கலகங்களும் அன்னைபெயரைச் சொல்லவே அகன்றுவிடும். கண்நோய் சுகம்பெற்றோர் கொடுக்கும் கண்மடல்கள் அனந்தம். அன்னை ஏழைகளைக் கைவிடாள்; அவள் ஏழைகளின் தெய்வம்.

தீராத நோய்களைத் தீர்த்தருளுகின்ற பன்றித்தலைச்சி கண்ணகை அம்மனின் மூர்த்தி, தலம், தீர்த்த விசேஷங்கள் பிரபலமானவை.

கார்த்திகை சோமவார விரதமும் பங்குனித்திங்கள் விரதமும் அனுட்டிக்காத மக்களை யாம் குடாநாட்டுப் பகுதியில் காணமுடியாது. பெரும்பாலும் இப்பகுதி மக்கள் கோயிலுக்குச் சென்று பொங்கி வந்தே விரதம் முடிப்பது வழக்கம்.

இக்கோயிலில் வந்து வணங்கும் அடியார்கள் தங்கள் தங்கள் துக்கங்களைச் சொல்லி அழுவதையும் அவர்களுக்கு எல்லா விமோசனமும் கிடைப்பதையும் காண முடிகிறது.

" அழுதால் உன்னைப் பெறலாமே " என்றார் மாணிக்க வாசகரும்.

---

# தேவாரம்

மைப்படிந்த கண்ணாளும் தானும் கச்சி
மயானத்தான் வார்சடையான் என்னினல்லான்
ஒப்புடைய னல்லன் ஒருவ னல்லன்
ஓரூர னல்லவன் ஓர் உவம னில்லி
அப்படியும் அந்நிறமும் அவ்வண் ணமும்
அவனருளே கண்ணாகக் காணி னல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண் ணத்தன்
இவனிறைவன் என்றெழுதிக் காட்டொ ணாதே.

— அப்பர்

மானினேர்விழி மாதராய்வழு திக்குமாபெருந் தேவிகேள்
பானல் வாயொரு பாலனீங்கிவன் என்று நீபரி வெய்திடேல்
ஆனை மாமலை ஆதியாய விடங்களிற்பல அல்லல்சேர்
ஈனர்கட் கெளியேனலேன் திரு வாலவாயரன் நிற்கவே.

— சம்பந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன்

# தேவஸ்தான பரிபாலனம்

ஆலய பரிபாலனத்தில், திரு. சின்னப்பா சிவகுரு அவர்கள் கடமையாற்றி வரும் பொழுது 1943ஆம் ஆண்டு, கோவில் உரிமை சம்பந்தமான வழக்கு ஒன்று நீதி மன்றத்தில் தாக்கலானது. சின்னப்பா செல்லத்துரை, சின்னப்பா சிவகுரு, மயில் வாகனம் குழந்தைவேலு ஆகிய மூவரும் தங்கள் உரிமைக்கான நீதிமன்றத்தின் தீர்ப்பை நாடினார்கள். நீதிமன்ற விசாரணை 1946 ஐப்பசி வரை நீடித்தது.

இக்காலம் கோவிலின் வளர்ச்சியில் ஒரு பின்னடைவு ஏற்பட்டது உண்மை தான் என்றாலும், பன்றித்தலைச்சி கண்ணகை அம்மனின் திருவருட் சக்தியிலோ அன்றி அடியார்களின் பக்தியிலோ ஒரு குறைவும் ஏற்படவில்லை. உள்ளூர், வெளியூர் அன்பர்கள் அடியார்களின் வருகையும் திருப்பணித் தொண்டும் நிறைவாகவே இருந்தன. முதன் முதலாகச் செய்த அம்பாளின் தாமிர விக்கிரகம் பிரதிட்டை செய்து மகா கும்பாபிஷேகம் நிகழ்ந்தது. 1946 ஆம் ஆண்டில் ஆகும். அதைச் செய்வித்தவர் இப்போது இருக்கும் தர்ம கர்த்தா திரு. சி. சிவகுரு அவர்களே. இன்று, 1991ல் மகா கும்பாபிஷேகத்தைத் தலைமை தாங்கிச் செய்த சிவஸ்ரீ பா. வைத்தியநாத சிவாசாரியாரின் தந்தையாராகிய சிவஸ்ரீ ச. பாலசுந்தரம் குருக்களே அன்றும் கும்பாபிஷேகத்தை முன்னின்று செய்தார்.

கோவில் உரிமை சம்பந்தமான நீதி மன்றத்தின் தீர்ப்பு 1946 ஐப்பசியில் வெளியானது. வருடத்துக்கு ஒருவர் என்ற முறையில் நிர்வாகம் செய்ய வேண்டும் என்பதுதான் அது.

1946ன் எஞ்சிய காலப்பகுதியின் நிர்வாகம் திரு. சி. சிவகுரு அவர்களுக்கே. ஆகவே அந்த ஆண்டு மார்கழித் திருவெம்பாவையில் முதன் முதலாக கொடியேற்றத் திருவிழாவையும் அவர் ஆரம்பித்து வைத்தார். இதுவே இவ்வாலயத்தின் மகோற்சவமாக இன்றும் இருக்கிறது.

1947 ஆம் ஆண்டின் நிர்வாகம் திரு. சி. செல்லத்துரை அவர்களுடையது. அவர் திரு. சி. சிவகுரு அவர்களைப் பின்பற்றி நிர்வாகம் செய்தார். ஆனால் 1948, 1951, 1954, 1957-ஆம் ஆண்டுகளில் முகாமைத்துவம்மேற்கொண்ட திரு. ம. குழந்தைவேலு வேறுபட்ட முறையில் ஆலய பரிபாலனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தார். திருவிழாக்களும் பூசைகளும் வேறு விதமாக நடைபெற்றன. இதனால் நீதிமன்றம், கோவில் நிர்வாகத்தை மேற் பார்வை செய்வதற்கென ஒரு தர்மகர்த்தா சபைத் தலைவரை நியமித்துக் கொடுத்து, அதன்படி பரிபாலனம் செய்யும்படி பணித் தது.

இந்த தர்மகர்த்தா சபையின் முதலா வது தலைவராக 1957ஆம் ஆண்டில் திரு. சி. சிவராசா (சட்டத்தரணி) அவர்கள் நிய மனம் பெற்றார். 1962ல் சட்டத்தரணி திரு. க. கதிர்காமசேகரர் அவர்களும் 1966ல் காரியாதிகாரி திரு. இ. சிதம்பர பிள்ளை அவர்களும் 1969ல் மீண்டும் திரு. க. கதிர்காமசேகர் அவர்களும் 1972ல் உதவி அரசாங்க அதிபர் திரு. தா. வேல் நம்பி அவர்களும் நியமனம் பெற்றனர்.

இக்காலங்களில் திரு. ம. குழந்தை வேலு அவர்களின் நிர்வாகத்தை அவதா னித்த நீதிமன்றம் நிர்வாகச் சீர்கேடுகள் காரணமாக 1973 ஆம் ஆண்டு ஆலய நிர்வாக உரிமையிலிருந்து திரு. ம. குழந் தைவேலு அவர்களை நீக்கி வைத்தது.
அதன் பின்னர் திரு. சி. செல்லத் துரை அவர்களும், திரு. சி. சிவகுரு அவர் களுமே நிர்வாகத்தைச் செய்து வந்தனர்.

1975ல் அப்போது யாழ் உதவி அர சாங்க அதிபராகவிருந்த திரு. ஆ. கந் தையா அவர்கள் தர்மகர்த்தா சபையின் தலைவர் ஆக வந்தார். பின்பு 1978ல் சாவகச்சேரி மாவட்ட நீதிமன்ற முதலி யார் திரு. பொ. வேலாயுதபிள்ளை அவர் களும் 1980ல் திரு. க. துரைராசா (உ. அ. அதிபர் சாவகச்சேரி) அவர்களும் தலை வர்களாக நியமனம் பெற்று கோவிலின் வளர்ச்சிக்கு அரும்பணியாற்றினர்.

1980ல திரு. சி. செல்லத்துரை அவர் கள் காலமானதையடுத்து திரு. சி. சிவகுரு அவர்களே ஆலய பரிபாலனத்தைத் தொடர்ந்து செய்து வருகிறார்.

1982லும் 1985லும் தலைவராக நிய மிக்கப்பட்ட திரு. ஆ. கந்தையா அவர் களே தொடர்ந்து தலைவர் பதவியை வகித்து வருகிறார். இவருடைய முதிர்ந்த அனுபவமும் ஆற்றலும் 1991-07-04ல் இவ் வாலய மகா கும்பாபிஷேக நிகழ்ச்சிகளின் போது ஆலய தர்மகர்த்தாவுக்கு மிகவும் உறுதுணையாக இருந்தது யாவரும் அறிந் ததே.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்க்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன்சிவ லிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளாமணி விளக்கே.

— திருமூலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுவில் : 77

## மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன்

# கோவில் பதிவு

யாழ் மாவட்டச் செயலகத்தில் உள்ள, யாழ் மாவட்டக் கோவில்கள் பற்றிய பதிவேட்டில், மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் கோவில் பற்றி தகவல் வருமாறு :

மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் கோவில் கி. பி. 1750 ஆம் ஆண்டு திரு. நாகர் கதிர்காமர் அவர்களால் கட்டப்பட்டது.

கி. பி. 1884 ஆம் ஆண்டு இத்திருக்கோயில் பதிவுசெய்யப் பட்டது. இதன் பதிவு இலக்கம் மட்டுவில் 77 ஆகும். அப்பொழுது, திரு. கதிர்காமர் அப்பாக்குட்டி அவர்கள் முகாமையாளராக விளங்கினார்.

அக்காலத்தில் ஒவ்வொரு திங்கட்கிழமையும், விஷேடமாகப் பங்குனிமாத திங்கட்கிழமைகள் தோறும் திருவிழாவும் பொங்கலும் நடைபெறுவது வழக்கம், ஆயினும், திருவிழா வீதிவலம் வருவது இல்லை.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் எல்லாப் பகுதிகளிலுமிருந்து ஏறக்குறைய 3000 சனங்கள் திருவிழாவுக்கு வருவதுண்டு.

அக்கால கோவிற்கட்டிடப் பெறுமதி ரூபா 1500 சொத்துப் பெறுமதி ரூபா 10 ஆயிரம். ஒரு திருவிழாவுக்கும் பொங்கலுக்கும் செலவு ரூபா 50 ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்தி வழிபாடு

ஈசனருள் இச்சைஅறி வியற்றல் இன்பம் இலயமொடு போக
அதிகார மாகித்
தேசருவம் அருவுருவம் உருவமாகித் தேவியுமாய்த் தேசமொடு
செவ்வமாகிப்
பேசரிய உயிரையெலாம் பெற்றுநோக்கிப் பெரும்போக
மலைவயளித்துப் பிறப்பினையு மொழித்திட்
டாசகலும் அடியருளத் தப்பனுடனிருக்கும் அன்னையருட்
பாதமலர் சென்னிவைப்பாம்.

— சிவஞானசித்தியார்.

தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தரும் சக்தி
பின்னமிலான் எங்கள் பிரான்.

— உமாபதி சிவாச்சாரியார்.

அருளது சக்தியாகும் அரன்தனக் கருளையின்றித்
தெருள்சிவ மில்லை அந்தச் சிவமின்றிச் சக்தியில்லை
மருளினை அருளால் வாட்டி மன்னுயிர்க் களிப்பன் கண்கட்கு
இருளினை ஒளியா லோட்டும் இரவியைப் போல ஈசன்.

— அருணந்தி தேவர்:

சக்தியின் பெருமையைப்பற்றி அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக்குருக்கள் பின்வருமாறு கூறியுள்ளார்கள் :

சக்தி என்பதற்கு வல்லமைஎன்பதே பொருளாகும். சக்தியானது நீருக்குக் குளிர்ச்சியும் அக்கினிக்குச் சூடும்போலச் சிவபிரானோடு பிரிப்பின்றி நிற்பதாம். அக்கினி பொருளால் ஒன்றாயினும் வடிவாற் செம்மை என்றும், குணத்தாற் சூடு என்றும் பிரித்தெண்ணப்படுமாறு போல, பரம்பொருள் ஒன்றேயாயினும் எவற்றையுங் கடந்து நிங்கும் ஒளியாகிய வடிவால் சிவமெனவும், எவற்றினுங் கலந்து அவைகளைத் தன்பால் இழுக்கும் வலிமையாகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணத்தால் சக்தி எனவும் பிரித்துக் கூறப்படும். சகதியும் சத்தனும் மரமும் வைரமும் போலக் குணகுணி பாவமாய் நிலைத்தலாலும் இருவருக்கும் பேதமின்மை நன்கு தெரியப்படும்.

சூரியன் உலகத்திலுள்ள புறவிருளை நீக்கி ஒளியை உண்டாக்குவது போல, சிவபெருமான் திருவருளால் ஆன்மாக்களது மயக்கத்தை நீக்கி அனுக்கிரகஞ் செய்வர். சக்தியே உலகிற்குக் காரணம். சக்தியின்றேல் யாவுமின்று. திருவருளே சிவபெருமானுக்குச் சத்தியாகும். அவ்வருட்கு மாகிய சக்தியின்றிச் சிவமில்லை. சிவத்தை விட்டுச் சத்தி நீங்குவதில்லை சத்தியின் வடிவம் ஞானமேயாம் அதுவே பராசத்தி எனப்படும்.

அரசனது ஆஞ்ஞா சக்தியானது மந்திரி, பிரதானி, படைத்தலைவர், நியாயாதிபதி முதலாகக் கீழே நின்ற சேவகன் இறுதியாகவுள்ள அங்கத்தார் மாட்டுப் பதிந்து காரிய வேறுபாட்டால் பலவகைப்படல் போல், பராசத்தி ஒன்றே இச்சித்தல், அறிதல், செய்தல் என்னும் வேறுபாட்டால் இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியா சத்தி என மூவகையாகவும், பின்னரும் அவாந்தர வேறுபாட்டால் அநந்த சத்தி யாவும் வியாபரிக்கும். கிரியா சத்தியானது ஆரிணி, செநநி, இரௌத்திரி, ஈசானி, பூரணி, ஆர்த்தி, வாமை, மூர்த்தி என எட்டாக வியாபரிக்கும். அவற்றுள் ஆரிணி, செநநி, இரௌத்திரி என்னும் முச்சத்திகளும் சிவபெருமானுக்குச் சூக்கும வடிவமாகவும் ஏனைய ஐந்தும் தூல வடிவமாகவும் சொல்லப்படும் அன்றியும் செநநியாற் படைப்பும், இரௌத்திரியால் காத்தலும் மறைத்தலும் ஆரிணியால் அழித்தலும் அருளலும் ஆகிய சூக்கும கிருத்தியங்களு, ஈசானி முதலிய ஐந்தாலும் தூல கிருத்தியங்களும் செய்தருளுவர். இவ்வுண்மைகள், "அவருடைய பராசத்தி பலதிறப்படுவது" என உபநிடதமும்,

"சிவபிரானுக்குத் தீயின் சூடுபோல, சத்தியார் வேறுபடாதுள்ளார். சத்தியின்றிச் சிவபிரான் இல்லை. சிவனையின்றிச் சத்தி இல்லை" எனச் சிவாகமும்,

"உமையலா துருவமில்லை" எனத் தேவாரமும் கூறுமாற்றானும் பிறவாற்றானும் உணரப்படும்.

சத்தியாகிய உமாதேவியார் காமாட்சி என்னும் திருநாமத்தோடு முப்பத்திரண்டு அறங்களையும் வளர்க்கின்றார். சிவகாமி அம்மையார் என்னும் திருநாமத்தோடு பிறவிப் பிணியை நீக்கும் பொருட்டுச் சிவபெருமானது திருநிருத்தத்துக்குச் சாட்சியாய் நிற்கின்றார். விசாலாட்சி என்னும் நாமத்தோடு ஆன்மாக்களுடைய இளைப்பை நீக்கியருளுகின்றார். மீனாட்சி என்னும் திருநாமத்தோடு உலகத்தில் நீதிநெறிகளை நிலைபெறச் செய்கின்றார். புவனேசுவரி என்னும் திருநாமத்தோடு மும்மூர்த்திகளும் முத்தொழில் செய்வதற்கு அதிகாரம் கொடுத்தருளுகின்றார்.

இனி, ஈசுவரன் என்னும் திருநாமம் காரணப்பெயராய் நின்று பிறரையும் உணர்த்துமேனும் காரண இடுகுறிப்பெயராய்ச் சிவபெருமான் ஒருவரையே உணர்த்தும். அதுபோல, ஈசுவரி என்னும் பெயரும் உமையம்மையாரையே உணர்த்தும். ஆகவே பரமேசுவரி, மகேசுவரி, இராஜேசுவரி, புவனேசுவரி முதலிய நாமங்களும் தேவியாருக்கே உரிய திருநாமங்களாம். புவனேஸ்வரி என்பது உலகங்கட்கெலாம் ஐசுவரியத்தைக் கொடுப்பவர் எனப் பொருள்படும்.

தேவி அம்சங்களைப்பற்றி வேறு பல கொள்கைகளும் உண்டு. அவற்றுள் முக்கியமான கொள்கைகளைத் திருப்பராய்த்துறையில் தபோவனம் வைத்து நடாத்திவரும் சுவாமி சித்பவானந்தர் தமது "சக்தி தத்துவம்" என்னும் நூலில பின்வருமாறு கூறியுள்ளார்:

"வேந்தன் முதல் வேலையாள் வரையில் உள்ள காரியஸ்தர் அனைவரும் அடங்கியது அரசாங்கம். ஒவ்வொரு உத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகத்தனுக்கும் பிரவிருத்தி உண்டு. அம்முறையில் அம்பாள் அநேக அம்சங்களை உடையவள். யார் யார் எந்த வைபவத்தை விசேஷமாகப் பெற விரும்புகின்றனரோ. அதற்கேற்ற தேவியம சத்தைப் பொதும் போற்றி வணங்குகின்றனர். எங்கும் நிறை பொருளாகக் கருதப்படும் போது அவளுக்குப் பூரணி என்றும், பராசக்தி என்றும் இராஜராஜேஸ்வரி என்றும் மூலப்பிரகிருதி என்றும் பெயர். முத்தொழில்களைச் செய்யுமிடத்து பிராம்மணி, வைஷ்ணவி, ருத்ராணி என்று அவள் பேர் படைக்கின்றாள். சகுணபிரம்மம் அல்லது ஈசுவரனுக்கு ஒப்பாகும்போது அவளுக்குத் துர்க்கை என்னும் திருநாமம் வருகிறது. காலசொரூபிணியாகக் கருதப்படும் போது காளியாகின்றாள். வித்தையின் வடிவமெடுக்கும் போது அம்மாளுக்குச் சரஸ்வதி எனவும், தனதானிய வடிவமெடுக்கும்போது இலக்குமி எனவும் பெயர். ஞாலத்தை ஆதாரிக்கும் போது மகாதேவியானவள் ஜகதாத்திரியாகவும் பவதாரணியாகவும் பாராட்டப்படுகிறாள்."

# தேவாரம்

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னரும் என்
பண்கண்ட அளவிற் பணியச் செய்வாய் படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பலகோடி உண்டேனும் விளம்பில் உன்போல்
கண்கண்ட தெய்வம் உளதோ சகல கலா வல்லியே.

— குமரகுருபரர்

செறிதரும் உயிர்தோறும் திகழ்ந்து மண்ணிய
மறுவறு மானிட மரபின் மேவியே
அறுவகை நெறிகளும் பிறவு மாக்கிய
இறைவிதன் மலரடி இறைஞ்சி ஏத்துவாம்

— உமாதேவியார் விருத்தம்

மன்றின் மணி விளக்கெனலாம் மருவுமுக நகைபோற்றி
ஒன்றிய மங்கல நாணின் ஒளிபோற்றி உலகும்பர்
சென்றுதொழ அருள் சுரக்கும் சிவகாமி சுந்தரிதன்
நின்ற திரு நிலைபோற்றி நிலவு திருவடி போற்றி

— சிவகாமியம்மை விருத்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பிகையும் தமிழும்

அம்பிகையின் வடிவே அருள், அருளே அம்பிகை எனக் கூறுதல் போன்று தமிழ் மொழியையும் அம்பிகையின் அபின்னமாகக் கண்டவர் குமரகுருபரர்.

"தமிழோடு பிறந்து பழ மதுரையில் வளர்ந்த கொடி" எனவும்,
"மதுரமொழுகிய தமிழின் இயல்பயில் மதுரை மரகதவல்லி" எனவும்,
"தெளிதமிழ் மதுரையில் வளருமொரிள மயில்" எனவும்,
"முதுதமிழ் உததியில் வருமொரு திருமகள்" எனவும்,

"தெள்ளு சுவை யமுதங் கனிந்த வானந்தத்
திரைகடல் மடுத்துழக்கும்
செல்வச் செருக்கர்கள் மனக்கமல நெக்கபூஞ்
சேர்க்கையிற் பழைய பாடல்
புள்ளொலி யெழக்குடி புகுந்த சுந்தரவல்லி" எனவும் பாடி மகிழ்வார்.

அம்பிகை கருணையே வடிவானவர். தமிழ் தழுவிய சாயலுடையவர். கருணைத் திறத்தாலும் தமிழ்மேல் கொண்ட காதலாலுந்தான், காழியர் கோனாகிய ஞானசம்பந்தக் குழந்தையின் அழுகை தீர்க்க வெண்ணிப்பாலருத்தியருளினார் எனச் சப்பாணிப் பருவத்தில் பாடுவார். உபநிடத சாரத்தைத் தமிழாக வடித்துப் பாலாகச் சீர்காழிச் சேய்க்கு ஊட்டியதனால் செவிலித் தாயாகவும், விநாயகர்க்கும் வேலவர்க்கும் தாயாகவும் விளங்கும் அன்னையே, குழலின் இசையும் தேனின் இனிமையும், கனியின் ரசமும், அமுதின் சுவையும் பயின்ற மழலைபேசும் கிள்ளையே சப்பாணி கொட்டுவாய் என்ற பாடல் வெகு இனிமையானது.

செழுமறை தெளியவ டித்தத மிழ்ப்பதி கத்தோடே
திருவரு ளமுதுகு ழைத்துவி டுத்தமு லைப்பாலாற்
கழுமல மதலைவ யிற்றைநி ரப்பிம யிற்சேயைக்
களிநெடும் வளரவ ளர்த்தவ ருட்செவி லித்தாயே
குழலிசை பழகிமு முப்பிர சத்திர சத்தோடே
குதிகொழு நறியக விச்சுவை நெக்க பெருக்கே போல்
மழலையி னமுதுகு சொற்கிளி கொட்டுக சப்பாணி
மதுரையில் வளருமட ப்பிடி கொட்டுக சப்பாணி.

அம்பிகையின் அருள்திறமும் தமிழ் மணங்கமழ் சாயலும் ஆசிரியர் உள்ளத்தைக் கவர்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னந் தமிழின் உடன் பிறந்த செல்வியாகிய அம்பிகை, சங்கம் வளர்த்த மதுரையிலும் துங்க மனத்தரான அடியார் உள்ளத்திலும் கோயில் கொண்டருளி தொண்டர்கள் உழுவலன்பால் அன்பு நெக்குருக, உள்ளே கசிந்தூறு பைந்தேனாக இன்பம் செய்து நிற்பர். நெடுமால் தங்காய், தமனிய மலைபடர் நங்காய், எந்தாய் என்று வழிபடுவார்க்கு அஞ்சேல் என்றோதும் அபயமும் வரதமும், அருளுவர்; அம்பிகையின் இத்தகைய சிறப்பியல்புகளைத் தெவிட்டாத செந்தமிழில் எடுத்தோதும் இந்நூல் முழுவதையும் படித்து இன்புறுவதற்கு அவகாசம் கிட்டாது அவதிப்படும் சில மக்களும் உளர். அவர்கள்பால் கழிவிரக்கமுடைய ஆசிரியர் பிரான் அம்பிகையின் அருள், அழகு தமிழ்ச்சாயல் ஆகிய மூன்றினையும் ஒருங்கே ஓர் ஒப்பற்ற பாடலில் வடித்துத் தந்துள்ளார். அப்பாடலை நூலில் நடுநாயகமாகத் திகழுமாறு ஆறாவதாக அமைந்த வருகைப் பாகத்தில் 9ஆவது பாடலாக வைத்துள்ளார். இந்நூல் அரங்கேற்றப்பட்ட காலை, மீனாட்சி அம்மையே குழந்தை உருவில் எழுந்தருளி வந்து கேட்டு மகிழ்ந்து இருந்தனர் என்றும், இப்பாடலைப் பாடிப்பொருள் கூறிய போது தமது கழுத்திலிருந்து முத்துமாலையை எடுத்துக் குமரகுருபரர்க்கு அணிந்து விட்டு மறைந்தனர் என்றும் கூறுவர். அந்த அரிய பாடலை நோக்குவோம்.

தொடுக்கும் கடவுட் பழம் பாடற்
        றொடையின் பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழி னொழுகு நறுஞ்
        சுவையே அகந்தைக் கிழங்கை யகழ்ந்
தெடுக்குந் தொழும்ப ருளக் கோயில்
        கேற்றும் விளக்கே வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
        இளமென் பிடியே யெறிதரங்கம்
உடுக்கும் புவனங் கடந்து நின்ற
        ஒருவன் றிருவுள் ளத்திலழ
கொழுக வெழுதிப் பார்த்திருக்கும்
        உயிரோவியமே மதுகரம் வாய்
மடுக்கும் குழற்கா டேந்துமிள
        வஞ்சிக் கொடியே வருகவே
மலையத் துவசன் பெற்றபெரு
        வாழ்வே வருக வருகவே.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டுவில்
## பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன்
# புனராவர்தன மஹா கும்பாபிஷேக
# நிகழ்சிகள் ( வர்ணனை )

பிர சோற்பத்தி வருடம் ஆனிமாதம் இருபதாம் திகதி ( 04-07-1991 ) வியாழன், கிருஷ்ணபக்க ஷப்தமி திதியும் உத்திரட்டாதி நட்சத்திரமும் சித்தயோகமும் சந்திர ஓரையும் கூடிய பகல் 11 - 03 — 12 – 50 மணிக்குள் வரும் கன்னிலக்கின சுபவேளையில் பன்றித்தலைச்சி அம்மன் மகா கும்பாபிஷேகம் இனிது நிறைவேறியது.

ஆனி 16 ஞாயிற்றுக்கிழமை (30-6-91) பகல் 11 - 18 மணிக்குமேல், பிரதம சிவாசாரியார், சிவ ஸ்ரீ பா. வைத்தியநாத சிவாசாரியார், கும்பாபிஷேக காலத்தில் ஒருவிதமான விக்கினங்களும் வராதிருக்க விக்கினேஸ்வர வழிபாடு செய்தார்கள்.

பின்னர், பொருளை உரியவாறு பங்கிடுதல் என்னும் திரவியபாகம் செய்தார்கள். இரண்டு பங்கு பொருள் யாகத்துக் குரியது. ஒரு பங்கு அபிஷேகத்திற்கும் ஒரு பங்கு சிவாச்சாரியாருக்கும், இரண்டு பங்கு இருத்து விக்குகளுக்கும், ஒரு பங்கு வேதாத்தியானத்திற்கும், ஒரு பங்கு தட்சணை முதலியவற்றிற்கும், ஒரு பங்கு பிராமணபோசனம் அன்னதானம் முதலியவற்றிற்கும் ஒரு பங்கு பரிசாரகர் வாத்தியகாரர் சிற்பிகள் பரிசனங்களுக்கும் ஒரு பங்கு யாகத்திரவியங்களுக்கும் அமையும்படி பங்கிட்டு, திரவியசுத்தி செய்தபின், அனுக்ஞை என்னும் கிரியை செய்தார்கள். தொடர்ந்து, கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், ரக்ஷோக்னஹோமம், திசாஹோமம் கங்காபூஜை என்பன நிகழ்த்தினார்கள்.

அன்று மாலை 4-00 மணிக்கு விக்னேஸ்வர பூஜையும், வாசல் வெளிக்கொட்டகையில் ஈசானதிக்கில் கிராமசாந்தியும் செய்தார்கள். பின்பு, எட்டுத்திக்கிலும் பிரவேசபலியிட்டு வாஸ்துசாந்தி நடந்தது. புதிய கோவிலுக்குள் பசுவைக்கொண்டு போய் கோபூசை செய்தார்கள். மாலை 6-00 மணிக்கு கோவில் வெளிவாசலில் ஒரு தப்பம் நாட்டி, அதில் இடபக்கொடி ஏற்றிப் பூஜை செய்தனர் அதன்பின், மிருத்சங்கிரகணம் செய்து, யாகசாலை அங்குரார்ப்பணம், காப்புக் கட்டுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடித்து, யாகசாலையில் கும்பங்கள் வைத்து மூலமூர்த்திக்கு பிரசன்னாபிஷேகம், பிரசன்னபூஜை, கடஸ்தாபனம், கலாகர்ஷனம் செய்தனர் பின்னர் பிரதான கும்பம் பசுவினுடைய தருப்பைக்கயிற்றோடு வீதிவலம் வந்து, யாகசாலையில் வைத்து தீபாராதனையும் வேதபாராயணம், திருமுறை பாராயணம் என்பனவும் செய்தார்கள்.

இரண்டாம் நாள், 17 - ந் திகதி திங்கள் (01 - 07 - 91) காலை 6 - 00 மணிக்கு விக்கினேஸ்வர பூஜை செய்தார்கள். பின்பு சிற்பாசாரியார்கள், மங்களவாத்யம் முழங்க எல்லா, விமானங்களிலும் தூபிகளை வைத்தார்கள். காலை 7 - 00 மணிக்கு பிரதம சிவாசாரியாரும் அம்மையாரும் தீப பூஜை செய்து அம்பாள் மூலஸ்தானத்திற்கும் மற்றும் பரிவார மூர்த்திகளுக்கும் மங்கள வாத்தியம் முழங்க தீபஸ்தாபனம் செய்தார்கள். 8 - 00 மணிக்கு சிவாசாரியார்கள் விசேஷசந்தி, பூதசுத்தி, குருமார் வணக்கம் முடித்து, வெளிவாசலில் உள்ள கொடிமரத்தகுக்குச் சென்று, பூஜை செய்து வந்து, வாசலில் கால் அலம்பி, சந்தனம் புஷ்பம் சாத்தி ஆரத்தி செய்து திலகமிட்ட பின் உள்ளே வந்தார்கள். விநாயர், சிவகாமி அம்பாள், இராஜராஜேஸ்வரி அம்பாள், நாகதம்பிரான், சுப்பிரமணியர், சனீஸ்வரன், வைரவர், ஸ்தூபி முதலியவற்றின் நவகலசங்கள் பூசிககப்பெற்று பஞ்சாரத்தி செய்தனர். யாகசாலைபூஜையும், மூலமூர்த்தி கண்ணகை அம்பாளுக்கு விசேஷ அபிஷேகமும் பூசையும், ஸ்ரீசக்கர பூஜையும் செய்தார்கள். பின்பு, சூரியனிலிருந்து அக்கினி வரவழைத்து பஞ்சகுண்ட அக்கினி பூஜையும் ஹோம பூஜையும் செய்து தீபாராதனை செய்து 9 குருமார் நவசத்தி அருச்சனை செய்தனர். பின் வேதபாராயணமும் திருமுறை பாராயணமும் செய்தார்கள். பகல் 12-00 மணிக்கு வி நயாகர், அம்பாள், துவாரபாலகர், நந்தி, நாகதபபிரான், சுப்பிரமணியர், சனீஸ்வரன், வைரவர், சிவகாமி அம்மன், இராஜராஜேஸ்வரி அம்மன், பலீபீடமும், சண்டேஸ்வரி ஆகியவர்களுக்கு யந்திரஸ்தாபனமும் பிம்பஸ்தாபனமும் செய்தார்கள்.

மாலை 4-00 மணிக்கு விக்கினேஸ்வர பூஜையும் விசேஷசந்தி, பூதசுத்தி, குருமார் வணக்கம் என்பனவும் நிறைவேற்றி, வாசலில் சென்று கொடித்தம்ப பூசை செய்து திரும்பி வாசலில் உபசாரங்கள் செய்து ஆராத்தி செய்தபின், உள்ளே யாகசாலையிற் பிரவேசித்து, யாகபூசை, பஞ்சகுண்ட பூசை ஹோமம் தீபாராதனை நவசக்தி அர்ச்சனை, வேதபாராயணம், திருமுறை பாராயணம் நிகழ்த்தி அஷ்டபந்தன பூசையும் செய்தனர்.

மூன்றாம் நாள் ( 2 - 7 - 91 ) காலை விக்கினேஸ்வரபூசை முடித்து, குருமார்கள் வீதிவலமாகத்திருக்குளத்துக்குச் சென்றனர். அங்கு விசேஷசந்தி, பூதசுத்தி, குருமார் வணக்கம் என்பன முடித்து, 2ம் வீதியால் வந்து கொடிமரப்பூசை செய்து, வாசலுக்கு வந்தனர். உபசாரங்கள் செய்து ஆராத்தி காட்டித் திலகமிட்ட பின் யாகசாலையிற் பிரவேசித்தனர். பின் இராஜராஜேஸ்வரி அம்பாளுக்கு விசேஷ அபிஷேகமும் பூசையும் ஸ்ரீசக்கர பூசை யாகபூசை பஞ்சகுண்ட பூசை ஹோமம் தீபாராதனை நவசக்தி அர்ச்சனை என்பனவும் செய்து வேதங்கள் ஓதினர்; திருமுறை பாராயணஞ் செய்தனர். அன்று மாலை, விக்கினேஸ்வர பூசை, விசேஷசந்தி பூதசுத்தி குருமார் வணக்கம் என்பன முடித்து கொடித்தம்ப பூசை செய்து, வாசலில் ஆசாரங்கள் செய்து ஆராத்திசெய்து திலகமிட்ட பின் சிவாசாரியார்கள் யாகசாலையில் அமர்ந்து யாக பூசையும் பஞ்சகுண்ட பூசை ஹோமம் தீபாராதனை நவசக்தி அர்ச்சனை செய்து வேதபாராயணமும்திருமுறைபாராயணமும் நிகழ்த்தினர்.

நான்காம் நாள் (03-07-91) புதன் காலை 8.00 மணிக்கு விக்னேஸ்வர பூசையுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. முன்னைய நாட்களைப் போல விசேஷசந்தி, பூத சுத்தி, குருவணக்கம் என்பன செய்த பின் வீதிவலமாக கொடிக்கம்பத்துக்குச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று பூசை முடித்து, 3ம் பிரகாரம் வீதிவலம் வந்து வாசலில் உபசாரங்கள் செய்து ஆராத்தி செய்து திலகமிட்ட பின் சிவாசாரியார்கள் யாக சாலையில் அமர்ந்த னர். அன்று சிவகாமி அம்பாளுக்கு விசேஷ அபிஷேகம் பூசை, என்பன நடைபெற்றது. தொடர்ந்து ஸ்ரீசக்கர பூசை, யாக பூசை, பஞ்சகுண்ட அக்கினி பூசை, கோபூசை என்பன நடந்து, பால் கறந்து பொங்கல் செய்தனர். பின்னர் விசேஷ திரவிய ஹோமமம், தைலாப்பியங்கம், தீபாராதனை, நவசத்தி அர்ச்சனை செய்து வேதபாராய ணமும் திருமுறை பாராயணமும் நிகழ்ந் தன. காலை 10-00 மணிதொடக்கம் பி.ப. 5-00 மணிவரை பக்தர்களின் தைலாப்பி யங்கள் (எண்ணெய்க்காப்பு) நடைபெற்றது.

மாலை 4-00 மணிக்கு வழமையான விக்னேஸ்வர பூசையும் குருமார் விசேஷ சந்தி, பூதசுத்தி, குருவணக்கம் என்பன முடிந்து, கொடிமரப் பூசை, குருமார்களின் பாதபூசை, ஆராத்தி என்பன செய்த பின் சிவாசாரியார்கள் யாகசாலையில் பிரவே சித்தனர். அங்கு யாகபூசை, பஞ்சகுண்ட அக்கினி பூசை, முதலியனவும் ஹோமம், ரக்ஷாபந்தனம் பச்சிமசந்தானம், ஸ்பர்சா குதி, ஜாதிஹோமம் என்பன நிகழ்த்தித் தீபாராதனை செய்து நவசத்தி அர்ச்சனை வேதபாராயணம் திருமுறைபாராயணம் என்பன செய்தனர். பின் சிவாசாரியர்களின் சம்பாவனை நடைபெற்றது. ஐந்தாம் நாள் (04-07-91) வியாழன் காலை 8-00 மணிக்கு விக்னேஸ்வர பூசையும், விசேஷ சந்தி, பூதசுத்தி குருமார் வணக்கம், ஆராத்தி கொடித்தம்ப பூசை, குருமார் பாதபூசை என்பன முறையே முடிந்தபின் சிவாசாரி யர்கள் யாகசாலையில் சென்று, யாகபூசை ஹோமம் பஞ்சகுண்ட அக்கினி பூசை மகாபூரணாகுதி விசேஷ தீபாராதனை நவசத்தி அர்ச்சனை ஆகிய காரியங்களைச் செய்தனர். பின்னர் வேதபாராயணமும் மகா ஆசீர்வாதமும் நிகழ்த்தினர். பின் திருமுறைபாராயணம் நடந்தது. அதனை யடுத்து யாத்திராதானம் செய்த பின் பகல் 11-00 மணிக்கு மங்கள வாத்தியம் ஒலிக்கக் கும்பங்களை வீதிவலமாக எடுத் துச் சென்று, சிவாசரியர்கள் எல்லாக் கோவில் விமானங்களிலும் இவ்விரண்டு பேராக ஏறி நின்று சமகாலத்தில் தூபிக ளுககு அபிஷேகம் செய்த காட்சி பேரின் பக் காட்சியாகும்.

பின்னர் பகல் 11-25க்கு பிரதான கும் பங்கள் 2வது வீதிவலமாக ஈசானத்தில் வர மணிக்கோபுர தூபி அபிஷேகம் செய்த பின்னர் உள்வீதிக்கு வலம் வந்து முதலில் விநாயகர் கும்பாபிஷேகம் நடை பெற்றது. பிரதான கும்பம வாசலில் லாஜ புஸ்பம் கொடுத்து மூலாலயப் பிரவேசம் சென்றுகொண்டிருக்கும் பொழுது துவார பாலகர் கும்பாபிஷேகம் நடந்தது. பின் மூலமூர்த்தி கும்பம் ஆவாகனம் மகாகும் பாபிஷேகம் என்பனவும் தொடர்ந்து, சிவ காமி அம்மன் இராஜராஜேஸ்வரி அம்மன், ஸ்ரீசக்ரம், இடபம், நாகதம்பிரான், சுப்பிர மணியர், சனீஸ்வரன், வைரவர், பலிபீடம், சண்டேஸ்வரி கும்பாபிஷேகங்களும் நிறை வேறின.

அதன்பின் மங்கள தரிசனம், யாக உத்வாசனம், கற்பாவரண அபிஷேகம், எஜமான் அபிஷேகம் நடைபெற்றன. பின் னர் சிவாச்சாரியார்களுக்கு தட்சணை வழங்கி ஆசீர்வாதம் செய்தனர். தொடர்ந்து மகாபிஷேகமும் விசேஷ தீபாராதனையும் சண்டேஸ்வரி பிரார்த்த னையும் செய்தனர். பின்பு விபூதிப் பிர சாதம் வழங்கினார்கள்.

மாலை 6-00மணிக்கு ஆலய பூசை முடிந்தபின், விநாயகர், அம்பாள் சுப்பிர மணியர் ஆகிய கடவுளர் ஊஞ்சல் ஆடி னர். பின் உள்வீதி வலம் வந்து கைலாச வாகனத்தில் ஆரோகணித்து 2ம் வீதியில் வலம் வந்த காட்சி கைலையங்கிரி காட்சி யாகும்.

மாலை 8-00 மணிக்கு விசேஷ பொங் கல் நிகழ்ச்சி வசந்தமண்டப வாசலில் நடைபெற்றது. வைகாசியில் நடைபெறாது விட்ட வைகாசிப் பொங்கலை இனறு செய் தனர். மூன்று வழுந்துகள் சுத்தி செய்து மாவிலை கட்டி புண்ணிய யாகம் செய்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்ச கவ்வியம், பால், நெய், தேன், திரு மஞ்சனனீர் என்பன விட்டு பூசை செய்து மங்கல வாத்தியத்துடன் வீதிவலம் வந்து தர்மம், அதர்மம், காமியம் என்று மூன்று அடுப்புகளுக்கும் கற்பூர தீபங்காட்டி வழுந்து வைத்துப் பொங்கல் செய்தனர்.

இதே நேரம் ஸ்ரீ வை. நித்தியானந்த சர்மா "பார்வதி கல்யாணம்" என்னும் பொருளில் கதாப்பிரசங்கம் நிகழ்த்திக் கொண்டிருந்தார்கள்.

பொங்கற் பூசை இரவு 11-00 மணிக்கு நடந்து விபூதிப் பிரசாதமும் பொங்கற் பிரசாதமும் வழங்கினார்கள்.

இரவு 12-00 மணிக்கு அர்த்த சாமப் பூசையுடன் மகாகும்பாபிஷேக நிகழ்ச்சிகள் நிறைவெய்தின.

கும்பாபிஷேகத்தை தொடர்ந்து மண்டலாபிஷேகம் காலை, மாலை நடைபெற்று 45ம் நாள் 1008 சங்காபிஷேகமும் நடைபெற்று மாலை 5 மணியளவில் பூந்தண்டிகையில் வீதிவலம் வந்து காட்சியளித்தார்.

# தேவாரம்

ஆலந் தானுகந் தமுது செய்தானை
ஆதியை அமரர் தொழு தேத்தும்
சீலந் தான் பெரிதும் உடையானைச்
சிந்திப் பாரவர் சிந்தை யுளானை
ஏலவார் குழ லாளுமை நங்கை
என்று மேத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பனெம் மானைக்
காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே

— சுந்தரர்

மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாள் தொறும் பரவப்
பொங்கழல் உருவன் பூத நாயகன் நால்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த
ஆலவாய் ஆவதும் இதுவே.

— சம்பந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
தேவிமயம்

சிவாகம வித்தியா பூஷணம், கிரியாரத்தினம்

## சிவஸ்ரீ ச. பா. வைத்தியநாத சிவாச்சாரியார்

ஊரெழு.

## அவர்கள் வழங்கிய

# கும்பாபிஷேக தத்துவம்

பெருகலாம் தவம் பேதமை தீரலாம்
திருகலாகிய சிந்தை திருத்தலாம்
பருகலாம் பரமாய தோரானந்தம்
மருகலானடி வாழ்த்தி வணங்கவே.

உலகத்து உயிர்கள் எல்லாம் உய்ய வேண்டி பரம கருணாநிதியாகிய இறைவன் அருளிச்செய்த நூல்கள்வேதசிவாகமங்களே. வேதம் பொதுவென்றும் ஆகமம் சிறப்பென்றும் சொல்லப்படுகின்றது. வேதங்களில் இறைவனின் பொது இலக்கணங்களும் வழிபாடுகளும் கூறப்பட்டுள்ளன. ஆகமத்திலே மூர்த்திகளும் வடிவங்களும் அவற்றிற்குரிய தியானங்களும் அமைத்து வழிபட வேண்டிய முறைகளும் ஆலய அமைப்பு விதிகளும் பரவக் காணலாம். வேதங்கள் எப்படி நான்காக அமைந்துள்ளனவோ அதேபோல் ஆகமங்களும் இருபத்தெட்டாக இடம் பெற்றுள்ளன. இவற்றுள் கர்ஷணாதி பிரதிஷ்டாங்கம் பிரதிஷ்டாதி உற்சவங்கம் உற்சவாதிப் பிராயச் சித்தாங்கம் என பகுதிகள் அமைந்துள்ளன. சொரூபத் திருமேனியாகிய இறைவனை தடத்தத் திருமேனியாக வேண்டுவதே கும்பாபிஷேகம். இதில் சொரூபநிலை மனத்தால் நினைக்கவும் வாக்கால் சொல்லவும் முடியாத அநாதி முத்தசித்து உருவாய நிலை ஆகும். இந்நிலையில் இறைவன் ஒன்றிலும் தோய்வின்றித்தானே சுயம்பிரகாசமாய் தன் உண்மை நிலையில் நிற்பான். சொரூப நிலையிலுள்ள இறைவன் ஐந்தொழில்களைச் செய்ய திருமேனி கொண்ட நிலையே தடத்த நிலை ஆகும்: இவ்வழிபாட்டைச் செய்யும் இடம்தான் யாகசாலையாகும். அநாதி மல முத்தராகிய விடுபட்டவராகிய இறைவன் ஏகனாய் இருந்த போதிலும் அநாதி மல பெத்தராகிய அநாதியே கட்டுப்பட்டவர். ஆன்மா வழிபட்டுய்ய இறைவன் அட்ட மூர்த்தியாய் நிலம் நீர், தீ, காற்று, ஆகாயம் சூரியன் சந்திரன் ஆத்மா என்ற அட்டவடிவங்களையும் குறிப்பதே யாகசாலையில் அமைக்கப்படும் எட்டுக் குண்டங்களாகும். வட்டக்குண்டத்து எரியோம்பி என்றவாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டக்குண்டம் பிரதான குண்டமாக அமையும். இக்குண்டத்தில் வேண்டும் இறைவனை மந்திரதியாகுதிகளால் வழிபாடாகுதிகள் செய்வர். இவ் யாகசாலையில் ஒற்றித்த நாட்களும் இரட்டித்த காலங்களுமாக பூஜை முறைகள் அமையும். இவ்வாறு பூஜை செய்யப்பெற்ற கும்பமூர்த்திகள் நன்னுளிலே ஸ்தூலலிங்கமாகிய விமானத்திற்கும் சூக்கும லிங்கமாகிய மூலமூர்த்திக்கும் மந்திர ஆராதனையுடன் அபிஷேகித்தல் கும்பாபிஷேகமாகும். இக்கும்பாபிஷேகத்தைச் செய்யும் ஆலய அமைப்பிலும் பல விதிகள் இடம் பெற்றுள்ளன. புதிதாக ஆலயம் அமைத்த காலத்தினுல் மறையப் பெற்று பின் நிச்சயித்து ஆலயத்தை அவ்விடத்தில் அமைத்தல் அழிழ்ந்த ஆலயத்தை புதிதாக அமைத்தல் என்பனவும் பிராயச்சித்தாதி கருமங்களுக்காக செய்யப்படும் கும்பாபிஷேகமும் ஆவர்த்தனம், அநாவர்த்தனம், புனராவர்த்தனம் அந்தரீதம் என நான்கும் கிரியைகளும் 64, 30, 18, என்ற கணக்கினை உடையதாக அமையும் இவ்வாறு கும்பாபிஷேகம் செய்யப்பெற்ற மூர்த்திகளை நிலைக்களமாகக் கொண்டு ஆன்மாக்களின் வழிபாடுகளுக்கு அமைய அவரவர் பக்குவ நிலைக்கேற்ற வாறு முத்திநிலையை அருளுவர். எனவே கும்பாபிஷேகத்தைத் தரிசிப்பது மானுடப் பிறவியின் பெரும் பயனாகும். ஸ்ரீ கண்ணகாம்பிகையின் கும்பாபிஷேகத்தைக் கண்டு களிக்கப் பேரார்வத்துடன் இருக்கும் தொண்டர்கள், நிர்வாக அன்பர்கள், பொருளுதவிய தர்மசிலர்கள் யாவருக்கும் இந்தநன்நாளில் எல்லாம வல்ல ஸ்ரீ கண்ணகை அம்பாளின் திருவருளால் சகல நலன்களும் பெற்று இனிது வாழும் வண்ணம் அம்பிகையை வேண்டி நல்லாசி கூறுகின்றேன்.

'சுபமஸ்து'

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்."

---

# தேவாரம்

பரந்தெழுந்த சமண்முதலாம் பரசமய இருள்நீங்கச்
சிரந்தழுவு சைவநெறித் திருநீற்றின் ஒளிவிளங்க
அரந்தைகெடப் புகலியர்கோன் அமுதுசெயத் திருமுலைப்பால்
சுரந்தளித்த சிவகாம சுந்தரிபூங் கழல் போற்றி.

— சிவகாமியம்மை விருத்தம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சக்தி

# சிவநெறி சீர்பெற அன்பு செய்வோம்!

சிவ வழிபாடும் சக்தி வழிபாடும் அம்மையே அப்பா ஒப்பிலா மணியே எனத் தொடங்கும் திருவாசகத் தேன் மூலம் வெளிப்படுகிறது. சிவபூமியாகிய ஈழநாடு உலகத்தில் முதன்மை பெற சிவவழிபாடும் சிவ சிந்தனையுமே காரணமாகியது.

இதற்குக் காரணம் மறைந்த லெமூரியாக் கண்டத்திலும் சிந்துவெளிக் காலாச்சாரத்திலும் சிறப்புப்பெற்ற சிவவழிபாடும் சக்தி வழிபாடுமேயாகும். திரைகடல் ஓடியும் திரவியம் தேடும் வணிகத் தொடர்பும், அன்பு நெறியும் உலகத் தொடர்பில் பரந்து விரிந்து ஆசியாக் கண்டத்திலும், இந்து சமுத்திரத்திலும் சிறப்புற ஈழநாடு தனித்துவமுடையதாகும்.

ஈழநாட்டின் பழம்பெரும் சிவத்தலங்களாகிய நகுலேசுவரம், திருக்கோணேசுவரம், தெய்வேந்திரேசுவரம், முனீஸ்வரம் திருக்கேதீசுவரம் என்பன காலத்தால் முற்பட்ட வழிபாட்டு மையங்களாகும்.

அம்மை, அப்பர் வழிபாட்டில் சக்தி வழிபாடு முதன்மை பெறும் தன்மையில் சக்தி ஆலயங்களில் பன்றித்தலச்சி அம்மன் ஆலயம் முதன்மை பெறுகிறது. ஏனையவற்றுள் வற்றாப்பளை அம்மன் கோயில், நீர்கொழும்பு மனோன்மணி அம்மன் கோயில், உடப்பு கண்ணகி அம்மன் கோயில், நயினாதீவு நாகபூசனி அம்மன் கோயில் தெல்லிப்பளை துர்க்கை அம்மன் கோயில் என்பன காலச் சிறப்பும் தலச்சிறப்பும் உடையனவாகும்.

இதே போன்று தமிழ் தெய்வமாகவும் குறிஞ்சித் தெய்வமாகவும் விளங்கும் முருக வழிபாடு தேவர்களுக்கும் அசுரர்களுக்குமான தர்ம நிலையில் சூரசம்மாரம் இடம் பெற்ற தலமாக கருதப்படும் "கதிர்காமம்" தலயாத்திரை ஊடாக சிவாலயங்களை ஆண்டு தோறும் இணைத்து வைத்து ஆலய வழிபாடு சிறப்புற்ற காலம் மீண்டும் ஈழ நாட்டில் சிவநெறி சீர்பெற அன்பு செய்வோமாக.

பழம் பெரும் சிவ ஆலயமாகிய முனீஸ்வரமும், சக்தி ஆலயமாகிய பன்றித்தலச்சி அம்மன் கோயிலும் குடமுழுக்குப் பெற்ற ஒரே தினமாக பிரசோற்பத்தி வருடச் சிறப்பு சிறப்புறவும் கதிர்காம அடியார்கள் துயர் நீங்க திருவுலாக்காலமும் இணைக்கப்பட்ட வழிபாடுகள் நாட்டில் அன்பு நெறியை வளர்க்க அருளாசி யாவரும் பெறுவோமாக.

சமகால சமய வளர்ச்சி சிவநெறி தழைத்து ஓம் சிவாயநம, ஓம் முருகா, ஓம் சக்தி எனப் பரந்து அமைதியும் சமாதானமும் ஏற்பட கொல்லாமை புலால் மறுத்தல் பசுப்பாதுகாப்பு ஊடாக பல்லுயிர் ஓம்பி தன்னுயிர் காக்கும் அரச ஒழுக்கம் சிறந்து சிவபூமியில் சமாதானமும், முதன்மை நிலை சிறக்க அன்பு மொழியாகிய தமிழர் தாய் மொழி தமிழர் மொழி வாழவும் உலகில் அமைதி நிலவவும் அன்பு செய்வோமாக.

நன்றி.

" மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம் "

வே. கெ. தனபாலன் ஆசிரியர்
தலைவர்
யாழ் / மாவட்ட இந்து இளைஞர் பேரவை நல்லை ஆதீனம்,
நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பிகை அருள்

"கானகதா வாரிதி",
பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா (ஆசிரியர்)

" லக்ஷ்மீப்ரதான சமயே நவவித்ருமாபாம்
வித்யாபரதான சமயே சரதிந்து சுப்ராம்
வித்வேஷிவர்க்க விஜயேபி தமால நீலாம்
தேவீம் திரிலோகஜநநீம் சரணம் பிரபத்யே "

சமயம் என்பது மனிதனுடைய அன்றாட வாழ்க்கை அலுவல்களில் இருந்து விடுவிக்கக் கூடிய ஒரு சிறந்த மார்க்கமாகும். இது இம்மை, மறுமை, வீடு மூன்றுக்கும் வழிகாட்டும். சிவனைக் குறித்து சிவராத்திரியும், சக்தியைக் குறித்து நவராத்திரியும், முருகனைக் குறித்து கந்தசஷ்டியும், விநாயகனைக் குறித்து சதுர்த்தியும் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. இவற்றில் நவராத்திரி தினங்கள் சிறப்பான தேவி வழிபாட்டு நாட்களாகும், இந்நாட்களில் உலகமாதாவாகிய பராசக்தியை வேறு வேறு வடிவங்களில் வைத்து துர்க்கையாகவும், இலக்குமியாகவும், சரஸ்வதியாகவும் வழிபடுகிறோம்.

" தனந்தரும் கல்விதரும் ஒரு
நாளும் தளர் வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந்தரும்
நெஞ்சில் வஞ்ச மில்லா
இனந்தரும் நல்லன எல்லாம்
தரும் அன்பரென்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபி
ராமி கடைக்ககண்ணே"

என்றார் அபிராமிப் பட்டர்.

மனித வாழ்க்கை செந்நெறியிற் கழியவேண்டுமானால் அறிவுப் பொருளும் வீரமும் நல்லோர் சேர்க்கையும் நமக்குத் தேவை. இவற்றை எல்லாம் வல்ல அம்பிகையே எல்லோருக்கும் தருகிறாள். நமது பேச்சும், மூச்சும், ஆக்கமும், ஊக்கமும், ஏற்றமும், தோற்றமும் அம்பிகையின் அருளாலேயே வந்தமைந்துள்ளன அவளே அருள் சக்தி. அப்பனும், அம்மையும் ஒரே வடிவமே. இறைவன் யோக வடிவேயும் அம்பிகையிடன் இருந்தே அருள் பாலிக்கிறான் என்பதை மாணிக்கவாசகர் திருவாசகத்தில் கூறியுள்ளார். " தானும் தன் தையலும் தாழ்சடையோன் ஆண்டிலனேல் " என்றார். தேவியின் அருள் பெற்றவர்கள் பலர். கம்பர், காளமேகப் புலவர், காளிதாசர், குமரகுருபரர், பாரதியார் போன்ற கவிஞர் பெருமக்கள் அம்பிகையை வழிபட்டு புலமை பெற்றார்கள். பட்டர் தமது அபிராமி அந்தாதியில் அம்பிகையின் அருளின் பேறுகளை விளக்குகிறார்.

"அல்லும் பகலும் தொழுவார்க்கே
அழியா அரசும்
சொல்லும் தவநெறியும் சிவ
லோகமும் சித்திக்குமே"

எனவே நவராத்திரி நாட்களில் அம்பிகையைக் கும்பத்திலேயும், பிம்பத்திலேயும் அமைத்து வழிபட்டு வீரம், செல்வம் கல்வி என்பனவற்றைப் பெற்று வாழ்வாங்கு வாழ்வோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லோருக்கும் பொதுவான சக்திவழிபாடு

சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயங்கள் ஆறு. இவ்வாறு ஆறு சமயங்களாகப் பேசப்பட்டு, ஞானிகளும் பண்டிதர்களும் சாதாரண பக்தர்களும் ஏற்றுக் கொண்டு வழிபட்டு வந்தாலும், அந்த ஆறு சமயவாதிகளும் வேற்றுமையில் ஒற்றுமை காணவேண்டும்; தம்முள் முரண்படாது இருக்க வேண்டும் என்பதற்காக அந்த ஆறு சமயங்களும் இவைதாம் என்றும், இவை எல்லாம் ஒன்று என்றும் காட்டியவர் சங்கராச்சாரியார் என்னும் பெரியார். இறைவனே சங்கராச்சாரியாராகத் திருவவதாரஞ் செய்தார் என்று பெரியோர் கருதுவர்.

"முன்னம் இருமூன்று சமயங்கள் அவையாகிப்
பின்னை யருள்செய்த பிறையாளன் உறைகோயில் ..." எனவும்

"அறுவகைச் சமயத்தில் அருந்தவரும் ..." எனவும்

திருஞானசம்பந்தர் தமது தேவாரத்தில் அறுவகைச் சமயங்கள் பற்றிக் குறிப்பிட்டுப் பாடியுள்ளார்கள்.

"ஒன்றது பேரூர்; வழியாறு அதற்குள்
என்றது போல இருமுச்சமயங்கள்" எனத் திருமூலரும்,

"அறுசமயத் தலைவராய் நின்றவருக் கன்பராய் ..." 'எனச் சேக்கிழாரும்,
"அறுவகைச் சமயத்தோர்க்கும் அவ்வவர் பொருளாய் என்றும்
மெய்தரு சைவமாதி இரு மூன்று —" என அருணந்தியாரும்

அருளியுள்ளார்கள்.

இந்த ஆறு அகச்சமயங்களும் வருமாறு:

1. சைவம் — இதிலே பெருமையும் பிரபாவமும் முக்கியத்துவமும் கொடுக்கும் கடவுள் சிவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. வைணவம் — இதிலே பெருமையும் பிரபாவமும் முக்கியத்துவமும் கொடுக்கும் கடவுள் விஷ்ணு.

3. சாக்தம் — இதிலே பெருமையும் பிரபாவமும் முக்கியத்துவமும் கொடுக்கும் கடவுள் சக்தி.

4. காணபத்தியம் — இதிலே பெருமையும் பிரபாவமும் முக்கியத்துவமும் கொடுக்கும் கடவுள் கணபதி.

5. கௌமாரம் — இதிலே பெருமையும் பிரபாவமும் முக்கியத்துவமும் கொடுக்கும் கடவுள் முருகன்

6. சௌரம் — இதிலே பெருமையும் பிரபாவமும் முக்கியத்துவமும் கொடுக்கமும் கடவுள் சூரியன்.

இந்த அகச் சமயங்கள் ஆறும் தனித்தனி புகழ் பெற்றனவாயினும், இவற்றை யெல்லாம் சிவபெருமான் தாயென நின்று வளர்த்தார் என்று கச்சியப்ப சுவாமிகள் அருளியுள்ளார்கள். இந்த ஆறு சமயங்களும் ஒன்றுக்கொன்று முரண்பாடில்லாமல் ஒன்றுக்குள் ஒன்று கலந்து விளங்குபவையாகும். இதனையே உமாபதி சிவாச்சாரியார்

"மூவிரு தகுதி மேவிய தாமும் ஒன்றோடொன்று
சென்றுறும் நிலையில் ஆறும்
மாறா வீறுடைத்து" என விளக்கியுள்ளார்

சக்தி சிவபெருமானுக்குத் தேவி; திருமாலுக்குத் தங்கை; விநாயகர் சுப்பிரமணியருக்குத் தாய் என்ற நிலையில் நாம் வணங்குகின்றோம். சக்தி வழிபாடு செய்யும் ஒருவன் சைவனாகவோ வைணவனாகவோ இருக்கலாம்.

இனி, சக்தி வழிபாடு பற்றிச் சிறிது ஆராய்வோம். சக்தி என்றால் ஆற்றல், ஆண்மை, விசை, வல்லமை, வீரம், ஊக்கம் என பொருள்படும் இந்த ஆற்றலே காயத்திரி மந்திரம்.

சூரியனில் கதிர் இருப்பது போலவும், சந்திரனில் தண்ணொளி இருப்பது போலவும், பூவில் மணம் இருப்பது போலவும் கடவுளிடம் ஒப்பற்ற சக்தி இருக்கிறது. கடவுளும் சக்தியும் ஒன்றே.

இறைவனை உலகப் படைப்பில் ஈடுபடுத்துவது சக்தி தத்துவம்.
'எத்திறம் இறைவன் நின்றான் அத்திறம் அவளும் நிற்பள்'

"தன்னிலமை மன்னுயிர்கள் சாரத் தருஞ் சக்தி
பின்னமிலான் எங்கள் பிரான்" என உமாபதி

சிவாச்சாரியார் மூலமாக நாம் அறியும் சைவசித்தாந்தக் கருத்து.

பூதங்கள் ஐந்தில் இருந்தெங்கள் கண்ணில்
புலப்படும் சக்தியைப் போற்றுகின்றோம்
வேதங்கள் சொன்ன படிக்கு மனிதரை
மேன்மை யுறச்செய்ய வேண்டுமென்றே" எனப் பாடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதியார் உலகும் உயிரும் சக்தியின் வழியிலே இயங்குவதைக் காட்டுகின்றார்.

"எங்கெங்கு காணிலும் சக்தியடா — தம்பி
ஏழு கடல் அவள் வண்ணமடா" என்று பாரதிதாசன்

முழங்குவதையும் காண்கின்றோம்.

சக்தி வழிபாடு, அம்மை வழிபாடு, அன்னை வழிபாடு என மிகப் பழைய காலத்திலேயே இருந்து வந்துள்ளது. இருக்கு வேதத்தில் தேவி வழிபாடு கூறப்பட்டுள்ளது.

மகாபாரதம், தேவி பாகவதம் தேவி மகாத்மியம் முதலிய நூல்களிலும் தேவியைப் பற்றிய வரலாறுகள் உள. சுமேரியர் சக்தியை மலைமகளாக விளங்கினர் என்று கூறப்படுகிறது.

சிவம் இன்றேல் சக்தி இல்லை; சக்தி இன்றேல் சிவம் இல்லை "சக்தியும் சிவமுமாய தன்மையில் உலகமெல்லாம்" என்பது அருணந்தி சிவாச்சாரியாரின் அருள்வாக்கு.

எனவே சிவனடியார் சிவ வழிபாட்டுடன் சக்தி வழிபாட்டையும் மேற்கொண்டு வந்திருக்கின்றனர். சிவன் கோயில்களில் சிவனையும் உமையையும் ஒன்றாக வைத்து வழிபடுவதும், சக்திக்குத் தனியான சந்நிதானம் அமைத்து அம்மன் என வழிபடுவதும்' ஊர்கள் தோறும் அம்பாளுக்குத் தனியே கோவில் எழுப்பி வழிபடுவதும் சைவசமய மரபாகும்.

இந்தியாவிலே மதுரை மீனாட்சி அம்மன் கோவில், காஞ்சி காமாட்சி அம்மன் கோவில், காசி விசாலாட்சி அம்மன் கோவில், கன்யாகுமரி பகவதி அம்மன் கோவில் என்பன சக்தி ஆலயங்களில் பிரசித்தமானவை. யாழ்ப்பாணத்தில் வீரமாகாளி அம்மன் கோவிலும் நயினை நாகபூஷனி அம்மன் கோவிலும் சரித்திரப் புகழ் வாய்ந்தவை. திருகோணமலை பத்திரகாளி அம்மன் கோவிலும், மாத்தளை முத்துமாரி அம்மன் கோவிலும், வற்றாப்பளை கண்ணகை அம்மன் கோவிலும், தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவிலும்; மட்டுவில் பன்றித்தலச்சி கண்ணகை அம்மன் கோவிலும் பன்னெடுங் காலமாக அவ்வூர் மக்களால் மாத்திரமன்றிப் பிறஊர் மக்களாலும் போற்றி வழிபடப்பெற்று வருகின்றன

சக்தியைக் குறித்துச் செய்யப்படும் விரதங்களுள் கேதார கௌரி விரதமும். நவராத்திரி விரதமும் மிக முக்கியமானவை.

கேதார கௌரி விரதம், சக்தியின்றிச் சிவமில்லை; சிவம் இன்றிச் சக்தியில்லை என்பதை விளக்குவதாக இறைவனை அர்த்தநாரீசுர வடிவில் பூசித்து வணங்கும் விரதமாகும்.

நவராத்திரி விரதம், வீரம், செல்வம், வித்தை என்பவற்றை வேண்டி முறையே துர்க்கை, இலக்குமி, சரஸ்வதி ஆகிய மூன்று சக்திகளையும், இந்த மூவருமான பராசக்தியையும் வழிபடும் விரதமாகும். தொழிலாளிகள் எல்லோருமே இந்த விழாவில் ஊக்கமெடுத்துக் கொண்டாடுவதை நாம் காண்கிறோம். அவர்கள் தாம் தாம் செய்யும் தொழிலைத் திறம்படச் சோர்வின்றிச் செய்வதற்குத் தமக்குச் சக்தியைத் தரும்படி பராசக்தியைப் பிரார்த்திக்கின்றனர்.

"நாடிப் புலலங்கள் உழுவார் கரமும் நயவுரைகள்
தேடிக் கொழிக்கும் கவிவாணர் நாவும் செழுங்கருணை
ஓடிப் பெருகும் அறிவாளர் நெஞ்சும் உவந்து நடம்
ஆடிக் களிக்கும் மயிலே உன்பாதம் அடைக்கலமே" என்று

பாடித் துதித்த கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை அவர்களோடு நாமும் சக்தியை வணங்கி அருள் பெறுவோமாக.

தொகுப்பு: நா. நல்லதம்பி ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை வழிபாடு

அன்னையே முதலிற்காணும் அருட்பெருங் கடளாவாள்
அன்னையே அன்பின்காட்சி அறிவினை யூட்டுந்தெய்வம்
அன்னையே உயிருனுக்கு ஆதரவளித்துக் காப்பாள்
அன்னையே என்றும்நம்முள் அகங்களித் திருப்பள்நன்றே.

நாங்கள் அன்னையாகிய பராசக்தியை வழிபட்டால் எல்லா நன்மைகளையும் அடையலாம். அஃதும், இந்த கும்பாபிஷேக வைபவத்தில் வழிபட்டால் இன்னும் மேலான நன்மைகளை அடையலாம். எங்கள் நெஞ்சில் அன்னையைக் குடியிருத்த வேண்டும். அதற்கேற்ற வழி என்ன? அவள் உருவத்தைப் பார்த்துப் பார்த்து அதை எங்கள் அகத்தில் இருத்த வேண்டும். அதைப் பூசை நேரங்களிற்தான் நன்றாகப் பார்க்கலாம். அதற்கு அன்னை உள் நின்று உணர்த்தும் மந்திரத்தை ஓத வேண்டும். வாக்கால் மந்திரத்தை ஓதி ஓதி, உருவத்தைத் தியானித்துப் பழகி வர அந்த உருவமே கடவுள் ஆவதை நாங்கள் அறிவோம். அதுதான் "நான் அல்ல; நீ" ஆகும். அதன் வழி நடந்தால் நாம் அன்னை வழிபாட்டில் அடியெடுத்து வைத்தவர் ஆவோம். நல்ல சுகமான வழி இருக்க, அதை விட்டு கஷ்டமான வழிகளில் போய் அலைய வேண்டியதில்லை. அன்னை அருள் இருந்தால் எல்லாம் கைகூடும். ஆனமட்டும் அன்னை உருவத்தை இதயத்திலிருத்தி அவள் நாமத்தை மனத்தால் ஜெபித்தால் அனைத்து வெற்றியுமுண்டாகும். நாம் ஆருக்கும் அஞ்சவேண்டியதில்லை. மரணம் வந்தாலும் அஞ்சவேண்டாம். மரணம் என்பது உடல் மாற்றமே. உயிர் நல்வழியில் பயங்கரமின்றி உலாவிக்கொண்டு போகும். அதற்கும் அன்னை உதவி புரிவாள். அவள் உண்மைவழி நடத்த நாம் எம்மை ஒப்புக் கொடுத்தால் எல்லாம் அவள் செயலே.

பிள்ளைகள் பள்ளிக்கூடம் போனால் தான் எழுத வாசிக்கப் பழகலாம். படித்துப் பழகிய பின் எல்லாரும் எதையும் படிக்கலாம். அதுபோல் முதல் ஆலயங்களுக்குப் போய்ப் பழக வேண்டும். பள்ளிக்கூடம் போவது முதலில் கஷ்டமாக இருப்பது போல் ஆலயத்துக்குப் போவது சிலருக்குக் கரைச்சல்தான். பழகி விட்டால் பின் அது வழக்கமாய் இயற்கையாய் விடும். படிக்கப் படிக்க அறிவு பெறுவது போல, தியானிக்க தியானிக்கத் தியானிக்க ஞானம் உதயமாகும். ஞான உதயம் பெறுவதுதான் மனிதப் பிறவியின் பயன். ஞானம் பெற்றால் வீடு பெறலாம். அதுதான் வாழ்க்கையின் நோக்கம். அதற்கு கோயில் வழிபாடு இன்றியமையாதது. அதிலும், அன்னையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிதாவும் முன்னறி தெய்வம் என்பது போல, அன்னை வழிபாடு தான் சிறந்தது. சிவனை அடைவது தான் முடிந்த நோக்கம். அதற்கும் அன்னை வழிகாட்ட வேண்டும். எதற்கும் பொறுமையுடன் வழிபட்டு வர வேண்டும். அன்னையைச் சரணடைந்தால், அந்தந்த நேரத்தில் அன்னை வேண்டியதை அருளி, எம்மைச் சரியான பாதையில் இட்டுச் செல்வாள். அப்படிப்பட்ட ஒரு அன்னைதான் எங்கள் பன்றித்தலைச்சி கண்ணகை. பன்றித்தலைச்சிதான் மீனாட்சி மீனாட்சியும் சிவகாமியும் ஒன்றுதான். எல்லாம் சிவசக்திமயம் தான். "சுத்த ஓம் சக்தி" என்னும் ஜெபிப்போம்.

"மானிடர் எல்லாம் மங்களமான
பூரண வாழ்க்கை பொருந்திடவேண்டியே
சக்தி பரப்புதல் நித்தியகடனே" என்றும்,

"அன்னை அளித்திட்டவுடல் அன்னை
அளித்த உயிர்
அன்னை அருட்பணிக்கே யாம்"

என்றும் சுத்தானந்தர் பாடியுள்ளார்.

சக்தி என்றால் ஆற்றல் எனப்பொருள் படும். தண்ணீரின் ஆற்றல் கடல் ஆறு குளங்களில் வேறுபடுவது போல, அன்னையின் ஆற்றலும் இடத்துக்கிடம் வேறுபடும். அதில் எங்கள் பன்றித்தலைச்சி கண்ணகையின் ஆற்றல் மிக அற்புதமானது. அதற்கு, அங்கு வந்து குவியும் அடியார் கூட்டமே ஆதாரம். சரியான நெறியில் நடத்தும் அன்னைக்கு அன்பர்கள் என்ன பெயரிட்டு அழைத்தாலும் அதன் சக்தி திருவருட் சக்தி தான் என்பதை எல்லாரும் அறிவர். திருவருட்சக்தி தான் சிவசக்தி. சிவகாமி சிறந்த சக்தி அத்துடன் இராஜராஜேஸ்வரியும் அருட்சக்திதான். எல்லா அருட் சக்தியும் ஒன்று சேர்ந்து அருள்பாலிக்கும் அன்னை பன்றித்தலைச்சியை அன்போடு வழிபடுவோமாக.

அன்னையே, "உன் பொற்றிருமுகத்தை உள்ளும் புறமுங்கண் டன்புற் றிருக்க அருள்."

வணக்கம் தாயே!

அ. சிவஞானம் B. A.
சரசாலை.

---

# தேவாரம்

பால் நினைந்தூட்டுந் தாயினுஞ்
சாலப் பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யான் உனைத் தொடர்ந்து சிக்கெனப்பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

— மணிவாசகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துவசாரோகணம்

மகோற்சவ ஆரம்பத்திலே கொடியேற்றல் ஆகம சம்மதமாம் மும்மலத்திலே மூழ்கிக் கிடக்கின்ற ஆன்மா ஆசாரியருடைய அருளால் தீக்ஷா கிரமத்தினாலே பாசபந்த மற்றுச் சிவஞானத்தைப் பொருந்திய பதியின் திருவடியை அடையும் முறையைத் துவசாரோகணம் காட்டும் அஃது எவ்வாறெனில் காரணம் முதலிய சிவாகமங்களிற் கூறியவாறு.

கொடிமரம் பதியாகி சிவபெருமானையும் கொடிக்கயிறு திருவருட்சக்தியையும் கொடிச்சீலை பசுவையும் தருப்பைக்கயிறு பாசத்தையும் குறிக்கும். ஆன்மா பாச பந்தம் நீங்கி சிவபெருமானை அடையுமிடத்துத் திருவட்சத்தி வாயிலாகவே அடைதல் வேண்டும் இவ்வாறே துவசாரோகணத்திலும் பசுவைக் குறிக்கும் கொடிச்சீலை திருவருளைக் குறிக்கும் கயிறு வழியாகச் சென்று தம்பத்தில் ஆருதாரங்களை ஆசனமாகக் கொண்டு அதன் மீதிருக்கும் பரமசிவத்தை அடைகின்றது தம்பமும் சீலையும் பொருட்டன்மையால் இரண்டாயிருப்பினும் தம்பமே பொருளாகச் சீலை அதிலே ஒடுங்கித் தங்கியிருந்தல் அத்துவிதநிலையைக் குறிக்கும் ஆதலினாலே துவசாரோகணம் செய்தல் மும்மல பந்தத்தாற் பிறந்திறந்து சுழன்று வருந்தும் ஆன்மாக்கள் தீனக்ஷ முறைப்படி மல நீக்கம் பெற்றுச் சிவபெருமானை அடைதலை உணர்த்தும் நற்குறியாம் என்பது செவ்விதிற்றுணியப்படும்.

ஒளிக்கு மிருளுக்கு மொன்றேயிட மொன்று மேலிடி லொன்
றொளிக்கு மெனினு மிருளடரா துன்னுயிர்க் குயிராய்த்
தெளிக்குமறிவு திகழ்ந்துளதேனுந் திரிமலத்தே
குளிக்குமுயிரருள் கூடும் படிக் கொடி கட்டினனே.

— உமாபதிசிவாச்சாரியர் கொடிக்கவி

துவசத் தம்பம் பதி எழுத்தையும் கொடியேற்றுங் கயிறு பரை எழுத்தையும் கொடிச்சீலையில் எழுதப்பட்ட இடபதேவர் உயிரெழுத்தையும் கொடிச்சீலை திரோத எழுத்தையும் தருப்பைக் கயிறு மல எழுத்தையும் குறிக்கும்.

அஞ்செழுத்து மெட்டெழுத்து மாறெழுதத்து நாலெழுத்தும்
பிஞ்செழுத்து மேலைப் பெருவெழுத்து - நெஞ்சமுத்திப்
பேசுமெழுத்துடனே பேசா வெழுத்திலையுங்
கூசாமற் காட்டக் கொடி.

— கொடிக்கவி

— சிவஸ்ரீ ச. குமாரசாமிக் குருக்கள்
அச்சுவேலி.

மகோற்சவ விளக்கத்தில் உள்ளன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்தி தத்துவம்

இப் பூவுலகில் மாத்திரமன்றி சகல அண்டங்களிலும் எல்லா சக்திகளுக்கும் காரணமாகவும் ஆதாரசக்தியாகவும் இருப்பது பராசக்தி அல்லது ஆதிசக்தி கேனோபநிஷத்தில் மூன்றாம் கண்டத்தில் சக்தியின் பிரபாவத்தைப் பற்றி அழகாகக் கூறப்பட்டுள்ளது.

பிரும்மமே தேவர்களின் பொருட்டு தேவாசுர யுத்தத்தில் ஜெயத்தை அடைந்தது. அப்பொழுது தேவர்கள் தாங்கள் வெற்றி பெற்றதாகப் பெருமைப்பட்டனர். அப்பொழுது, அவர்களுக்கு யாதொரு சக்தியும் கிடையாதென்றும், எல்லாம் தன்னால் தான் உண்டாகிறது என்றும், அக்கினி, வாயு, இந்திரன் முதலிய தேவர்களுக்கு பிரும்மம் உணர்த்தி மறைந்தது. அந்த பிரும்மமே ஜகந்மாதாவான பராசக்தி.

இன்பம் வழங்கும் இறைவனை பரசிவம் என்கிறது சைவசித்தாந்தம் பரம் - உயர்ந்த சிவம் - பேரின்பம். பரசிவத்தின் அருள் ஆற்றலை பராசக்தி என்று கூறுவது மரபு. அதனைவிட ஆற்றல் உடைய பொருள் இல்லை என்னும் பொருள் கொண்டு பராசக்தி என்ற பெயர் விளங்குகிறது. பரா - மேலான; சக்தி - அருள் ஆற்றல்.

சூரியனின் ஒளி சூரியனை விட்டு அகலாது. அதுபோலப் பரசிவத்திலிருந்து பராசக்தி பிரிக்க முடியாதது. பராசக்தியின் ஆயிரத்தில் ஒரு பங்கு, ஆதிசக்தியை அளிக்கிறது. ஆதிசக்தியின் ஆயிரத்தில் ஒருபங்கு இச்சா சக்தியாகிறது. இச்சா சக்தியின் ஆயிரத்தில் ஒன்று, விமலஞான சக்தியாகிறது.

பராசக்தியோடு பரமசிவன் கூடியிருக்கும் போதுதான், உலகத்தில் சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம், திரோதானம் அனுக்கிரகம் என்ற ஐந்தொழில்களையும் செய்து ஈசுவரத்துவம் என்ற தனது தன்மையை வெளிப்படுத்து கின்றார்.

எல்லா வழிபாட்டுக்கும் ஆதாரமாக விளங்குவது சக்திவழிபாடு. உலகத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயங்கச் செய்வது இந்தச் சக்தியே. இதை சிவவாக்கியர், "சக்தியின் அருள்இன்றேல் ஜகந்தனில் அசைவேயில்லை" என்கிறார். சக்தியும் சிவமும் சேர்ந்தால்தான் மதிப்பு மனித சரீரத்தில் இரத்தமும் சதையும் போன்றவள் அம்பிகை; எலும்பு போன்றவர் ஈசன் எலும்புடன் இரத்தமும் சதையும் சேர்ந்தால்தான் உடலுக்கு அழகு. சிவனை விட சக்திக்கு ஒன்பது மடங்கு பெருமை உண்டு என்று தெரிகிறது. இதனாற் போலும் சிவராத்திரி என்று ஒரே இரவில் சிவனுடைய வழிபாட்டை நடத்திவிட்டு, நவராத்திரி சக்தி வழிபாட்டை ஒன்பது இரவுகளில் கொண்டாடுகிறார்கள்.

அளவைக்கு உபயோகிக்கப்படும் எண்களில் பெரியது ஒன்பது. அளவுக்கு அடங்காத எண் பூச்சியம். தன்னால் பெருக்கப்பட்ட எந்த எண்ணையும் தன்மயமாக்கும் சக்தி பூச்சியத்திற்கு உண்டு. அதுபோல் எந்த எண்ணையும் ஒன்பதால் பெருக்க வரும் எண்களின் கூட்டுத்தொகை ஒன்பதேயாகும். எனவே, பூச்சியம் நிர்க்குண பிரம்மம் சிவமாகவும், ஒன்பது சகுண பிரம்மம் சக்தியாகவும் மதிக்கத்தக்கவை.

இருக்கு வேதத்தில், தேவி சூக்தம், பராசக்தியை "வாக்" என்கிறது. 'கண்ணால் காண்பது, காதால் கேட்பது, மூச்சு விடுவது எல்லாமே என் சக்தியால்தான் நிகழ்கிறது' என்று பராசக்தியே கூறுகிறாள்.

தேவி உபாசகர்கள் சக்தியை ஆறு பிரிவாகப் பிரித்திருக்கிறார்கள். அவை பராசக்தி, ஞானசக்தி, இச்சா சக்தி, கிரியா சக்தி, குண்டலினி சக்தி, மாத்ருகா சக்தி என்பன.

சக்தியைக் குறிப்பனவாகிய குமாரி, கௌரி, ஆர்யா, சூலி, கொற்றவை, செய்யாள், நீலி, சாமாரி, சங்கரி போன்ற சொற்கள் சங்க நூல்களில் காணப்படுகின்றன.

உலகம் இயங்க அடிப்படையான சக்திகள் மூன்று. இவை செல்வம், இயக்கம், அறிவு எனப்படும். இவற்றை அளிப்பவர்கள் முறையே இலக்குமி, பார்வதி, சரஸ்வதி ஆவர்.

பராசக்தியின் அம்சமாக எட்டுச் சக்திகள் அஷ்டமா சக்திகள் எனப்படுவர். இது போல, திருமகளுக்கும் எட்டுச் சக்திகள் உண்டு. இவர்கள் அஷ்டலக்ஷ்மிகள் எனப்படுகின்றனர்.

தேவிகளில் "உமா" என்பது மிகப் பழமையான பெயர். 'உ' என்றால் சிவன். 'மா' என்றால் அறிவது, 'உமா' என்றால் 'சிவனை அறிதல்' என்று பொருள். 'உமா' என்பது 'ஓம்' என்ற பிரணவ மந்திரத்தில் அடங்கும்.

'எல்லாமே அவள்' என்னும் உண்மையை அறிந்து கொண்ட அபிராமிப்பட்டர்,

"அறிந்தேன் எவரும் அறியா மறையை,
அறிந்து கொண்டு,
செறிந்தேன் உனது திருடிக்கே திருவே"

என்று பாடுகிறார். நான்கு வேதங்களுக்கும் முதலான "வேதசிரசு" வான உபநிடதங்களே அம்பிகையின் பாதாரவிந்தங்கள் தாம் என்ப் பாடுகிறார். "மறைநான்கினுக்கும் தான் அந்தமான சரணாரவிந்தம்" என்பது அவர் வாக்கு.

இதனைக் குமரகுருபரர்,
"கற்பூரவல்லி நின்பாதபத்மம் மது
மத்தொடும்
தம்முடி வைத்த வாமது ரேசரவர்"

என்று மீனாட்சியம்மை இரட்டை மணிமாலையில் குறிப்பிடுகின்றார்.

மனிதன் உணவு, உடை, உறைவிடம் என்பவற்றைத் தெரிந்து கொண்ட பின், இயற்கைவனப்பை ஆராய்ந்திருக்கிறான். மலையும், கடலும் மக்கள் அறிவும் சக்தியின் உருவங்களே எனக்கண்டு மலைமகளாகவும், அலைமகளாகவும், கலைமகளாகவும் அம்பிகையை அவன் வழிபடஆரம்பித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கிறான். இப்படி மூன்று அன்னையரை உருவாக்கிய அவன், மூவர்க்கும் முத்தொழிலுக்கும் முதல்வராகப் பராசக்தியைப் போற்றி வணங்கினான்.

மூவர்க்கும் முதற்பொருளாய்
முத்தொழிற்கும் வித்தாகி
நாவிற்கும் மனத்திற்கும்
நாடறியப் பேரறிவாய்
தேவர்க்கும் முனிவர்க்கும்
சித்தர்க்கும் நாகர்க்கும்
யாவர்க்கும் தாயாகும் எழிற்பரையை வணங்குவோம் - என்ற பாடல் இதனை விளக்குகிறது.

அம்பிகை அக்ஷரரூபமாக விளங்குகின்றாள். இந்த அக்ஷரங்களின் எண்ணிக்கை 51. அண்டத்தில் உள்ளதெலாம் பிண்டத்திலும் உண்டு என்பர். ஆக இந்த 51 அக்ஷரங்களும் நம் உடலில் ஆறு ஆதாரங்களில் 51 பீடங்களாகத் திகழ்கின்றன.

மூலாதாரத்தில் 4, சுவாதிஷ்டானத்தில் 6, மணிபூரகத்தில் 10, அநாகதத்தில் 12, விசுத்தியில் 16, ஆக்ஞையில் 2, நெற்றிக் கண் பகுதியில் சூக்குமமாக 1 ஆக 51 பீடங்கள் இருக்கின்றன. இதனாலே 51 இடங்களில் சக்தி பீடங்கள் தோன்றியிருக்கலாம். (ஆதாரம் பிரதிபா பிரசுரம் : சர்வமங்களா.)

ஆலயங்கள் தோன்று முன்பே இந்த சக்திபீட ஸ்தலங்களே தெய்வீக சக்தியைப் பெறும் புண்ணிய க்ஷேத்திரங்களாக விளங்கின.

சக்திபீடங்கள், ஸ்ரீபத்மாசல புராணத்தில் 18 எனவும், தேவி பாகவதத்தில் 108 எனவும், பீட நிர்ணய நூலில் 64 எனவும், தேவி கீதையில் 38 எனவும் பலவாறு கூறப்பட்டிருக்கின்றன.

ஆதாரம் : அன்னை பராசக்தி பிரதிபா பிரசுரம் 1980.

---

# 1 - ஆம் திருமுறை

அருநெறிய மறை வல்லமுனியகண் பொய்கை யார்மேய
பெருநெறிய பிரமாபுரமேவிய பெம்மானிவன் றன்னை
ஒருநெறிய மனம் வைத்துணர் ஞானசம்பந்தன் னுரைசெய்த
திருநெறிய தமிழ்வல்லவர் தொல்வினை தீர்தலெளிதாமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஸ்ரீ சக்கர பூஜை

அம்பிகையை ஸ்தூல உருவத்திலும் சூக்கும உருவத்திலும் வழிபடலாம். இவற்றில் சூக்கும உருவ வழிபாடு என்பது ஸ்ரீ சக்சர வழிபாடு ஆகும்.

ஸ்ரீசக்கரம் அல்லது மேரு எனப்படும் இந்த யந்திரத்தை ஒரு உபாசகன் தன் உடலில் உருவகப்படுத்திக் கொள்கிறான். உடம்பின் ஒவ்வொரு உறுப்பையும் சக்தி அம்சம் கொண்ட கோயிலாகக் கொண்டு பரம் பொருளான சக்திக்கு ஆத்மபூஜை செய்கிறான்.

ஸ்ரீசக்கரம் என்பது தேவியின் ராஜ தானியாக ஸ்ரீநகரத்தில் சுத்த சக்தியான வள் வீற்றிருக்கும் நிலையின் தரைப்படம் எனக் கொள்ளலாம்.

ஸ்ரீசக்கரம் 43 முக்கோணங்களைக் கொண்டது. தகட்டிலுள்ளவை பிம்பமாக் கினால் அதுதான் மேரு. இம்மேருவின் உச்சியில் இருப்பது பிந்துஸ்தானம். அது பராசக்தியின் சுவரூபம். உலகத்தை இரட்சிப்பதற்காகவும் அம்பாளின் கட்டளையை நிறைவேற்றுவதற்காகவும் பல தேவதைகள் 43 கோணங்களிலும் அமர்ந்துள்ளனர். இவர்களில் பெயர் கொண்ட துதி மாலையே கட்கமாலா.

சக்கர வழிபாடு மிக இரகசியமான ஒரு சமய மரபாகும். இரகசியம் என்பதாலேயே பெருமை மிக்கது; புகழும் மிக்கது.

வார்த்தைகளால் தோத்திரங்களைச் சொல்கிறோம் வார்த்தையே இல்லாமல் வெறும் ஒலி வடிவமாகவும் வழிபடலாம். அதே போல, உருவத்தில் வழிபடும் கடவுளை அவயவங்களின்றி வெறும் வரி வடிவிலும் வழிபடலாம். பச்சிலைகளில் சிலவற்றிற்கு நோய் தீர்க்கும் சக்தி இருப்பது போல, சொற்களில் வேதமந்திரச் சொற்களுக்கு மட்டும் விஷேச வீரியம் இருப்பது போல வரி வடிவங்களிலும் அபரிமிதமான ஆத்ம சக்தி நிரம்பியுள்ளது.

சக்கர வழிபாடு முக்கியமாகத் தேவியைச் சார்ந்த தந்திர சாஸ்திரங்களில் இடம் பெறுகிறது. உலகுக்கெல்லாம் தாயுந் தந்தையுமான சக்தி சத்திய வடிவாய், தத்துவ வடிவாய், பேதமற்று ஒரே பரம்பொருளாய் பிந்து ஸ்தானத்தில் வீற்றிருந்து மாட்சிமை புரியும் தெய்வ சந்நித்தியத்தைக் கொண்டது.

ஸ்ரீசக்ரம் என்கிற ரகசியமான மாளிகையில் சக்தி உறைகிறாள் என்கிறது சௌந்தரியலஹரி. ஸ்ரீ சக்ரம் மேரு மலையை வடிவமாகக் கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ சக்கரத்தை ஆகாசத்தில் பூஜிக்க வேண்டியதனால் அதற்கு "வியத்சக்கரம்" என்ற பெயரும் உண்டு. (வியத் = ஆகாசம்)

அம்பிகைக்கு 'சர்வயந்திராத்மிகாயை' என்ற ஒரு நாமம் உண்டு இதற்கு யந்திர வடிவமாயும் இருப்பவள் என்று பொருள். ஒவ்வொரு தேவதைக்கும் மந்திரம் இருப்பது போலப் பிரத்தியேகமான யந்திரமும் உண்டு. தேவி 'மகாயந்திரா' என அழைக்கப் பெறுகிறாள். ஸ்ரீ சக்கரத்திற்கு மகாயந்திரம் என்ற பெயரும் உண்டு.

"சக்கரராஜ நிகேதனாய" என்ற பெயரும் அம்பிகைக்கு உண்டு சக்கரராஜம் எனப்படும் ஸ்ரீ சக்கரத்தை அம்பிகை தனது வீடாக உடையவள் என்பது அதன் பொருள்.

மேருவில் வசிப்பதால் அம்பிகை' மேரு நிலையாயை' என்று அழைக்கப்படுகிறாள். மேரு மலை வெள்ளியங்கிரியான கைலாசத்திற்கு மேலுள்ளது. முக்கோண வடிவான மேருமலைக்கு மூன்று சிகரங்களும் நடுவில் ஒரு சிகரமும் உண்டு. மூன்று சிகரங்களில் மும்மூர்த்திகள் வசிக்கின்றனர். நடுநாயகமான சிகரத்தில்தான் சிந்தாமணி உறைவிடம் இருக்கிறது.

ஸ்ரீ சக்கரம் அல்லது மேருவைப் பூஜிப்பவர்கள் கவனிக்க வேண்டியது. ஸ்ரீசக்கரம் தாமிரத்தில் இருப்பது முக்கியம். யந்திரம் வைத்திருப்பவர்கள் அதற்குப் பூஜை இல்லாமல் வைத்திருக்கக் கூடாது. தினம் இரண்டு புஷ்பங்களையாவது போட்டு, தேவியின் தியான சுலோகங்களைச் சொல்லி, அன்னம் அல்லது கற்கண்டு நைவேத்தியம் செய்து கற்பூரம் காட்டுவது மிக முக்கியம். பிரதி வெள்ளிக்கிழமை தோறும் லலிதா சகஸ்ரநாம பாராயணம் அவசியம் செய்ய வேண்டும். இதற்கு தீனக்ஷ அவசியமில்லை. நடுவிலுள்ள முக்கோணம் கீழ்ப்புறம் பார்த்து சக்கரத்தை வைக்க வேண்டும். செபங்களைச் செய்வதற்கு மூல மந்திரங்களை உபதேசமாகப் பெறவேண்டும்.

ஆதாரம் : அன்னைபராசக்தி பிரதிபா பிரசுரம்

---

## 2 - ஆம் திருமுறை

ஆற்றல்மல் விடையேறுமால வாயான் திருநீற்றைப்
போற்றிப்புகலி நிலாவும் பூசுரன் ஞானசம்பந்தன்
தேற்றித் தென்னனுடலுற்ற தீப்பிணியாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹோற்சவம்

பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் மகோற்சவ காலம் பல சிறப்புக்கள் பொருந்திய மார்கழி மாதத்தில் அமைந்துள்ளது. மார்கழி மாதம் திருவெம்பாவை ஆரம்ப நன்னாளில் கொடியேற்றம் நடைபெறுவதோடு மகோற்சவம் ஆரம்பமாகிறது.

வருடந்தோறும். நித்திய பூசைகளில் ஏற்பட்ட மந்திரலோபம், கிரியாலோபம், முதலிய குறைகளைப் போக்கவும், நாள் தோறும் ஆலயத்திற்குச் செல்ல முடியாதோர் இத்தினங்களிலாவது சென்று அருள் பெற வேண்டும் என்னும் பெருநோக்கத்திற்காகவும் மகோற்சவம் பத்து நடைபெறுகின்றது.

உற்சவ காலத்திலே செய்யப்படும் ஒவ்வொரு கிரியையும் சிருஷ்டி முதலிய ஒவ்வொரு கிருத்தியத்தை குறிப்பதால், அக்கிரியைகள் ஒவ்வொன்றும் ஆன்மாக்களது மலத்தை நீக்கி வீடுபேறு அருளுதற்காக வைக்கப்பட்டன என்று உணரப்படும்.

அதற்கு முதல் நாள் விநாயகபூசை, திரவிய சுத்தி, அனுக்ஞை கிராமசாந்தி, வாஸ்துசாந்தி, மிருத்சங்கிரகணம். அங்குரார்ப்பணம், பேரீதாடனம், இரட்சாபந்தனம், விருஷபயாகம், அஸ்திரதேவதா வாகனம், துவசாரோகணம், துவஜபீடபலி, சந்தியாவாகனம், வீதிப் பிரதக்ஷிணம், கோபுரத்துவார நீராசனம், யாகமண்டபபூசை, பிரமத்தானத்திலும் எட்டுத்திக்கிலும் போடும்பலி, என்னுங் கிரியைகள் சிருஷ்டியைக் குறிக்கும்.

வாகனோற்சவம், ஓமகருமம், பலி என்பன திதியைக் குறிக்கும். மிருகயாத்திரை, இரதாரோகணம், கிருஷ்ணகந்தார்ச்சனை என்னும் கிரியைகள் சங்காரத்தைக் குறிக்கும்.

சூர்ணோற்சவம், தீர்த்தம், அங்குரவிசர்ச்சனம், யாககும்பாபிசேகம், அவரோகணம், மௌனோற்சவம், இரட்சாபந்தன விசர்ச்சனம், சண்டயாகம் என்னும் கிரியைகள் திரோபவத்தைக் குறிக்கும்.

சத்தியாத்திரை என்னும் ஊடல் சண்டேசுவரோற்சவம், ஆசாரியோற்சவம் என்னும் கிரியைகள் அனுக்கிரகத்தைக் குறிக்கும்.

இத்துடன் பத்துநாள் மகோற்சவம் இனிது பூரணத்துவம் பெறுகிறது. அடுத்த நாள் பிராயச்சித்த அபிஷேகம் வயிரவசாந்தி பூசை முதலியன நடைபெறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பன்றித்தலைச்சி
# கண்ணகை அம்மன்
# உற்சவங்கள்

சித்திரை: (அ) சித்திரை வருடப்பிறப்பு. அன்று காலை விசேஷ அபிஷேகமும் இடபவாகனத்தில் அம்பிகை வீதிவலம் வருதலும் நிகழும்.

(ஆ) சித்திராபூரணையன்று விசேஷ பூசை வழிபாடு, சித்திர புத்திரனார் கதை படித்தல், கஞ்சி வார்த்தல் என்பன நடைபெறும்.

வைகாசி: (அ) வைகாசி விசாகம். பகல் சங்காபிஷேகம். மாலை புஸ்ப பல்லக்கில் அம்பாள் வீதிவலம் வருதல் இரவு விசாகப் பொங்கல் மூன்று நாயக வழுந்து கட்டி, முறைப்படி பூசித்து மடைபரவி பூசை நடைபெறும். பின் அர்த்த சாமப்பூசை உண்டு.

ஆனி: (அ) மாணிக்கவாசகர் குருபூசையும் விஷேச வழிபாடும், திருவாசகம் முழுவதும் படிக்கப்படும்.

(ஆ) ஆனி உத்தரட்டாதி புனராவர்த்தன கும்பாபிஷேக தினத்தன்று கைலாசவாகனத்தில் அம்பாள் வீதிவலம் வரும் காட்சியும் இடம்பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடி : (அ) ஆடிப்பூரம் விசேஷ அபிஷேகமும் ஆராதனைகளும்.

ஆவணி : (அ) விநாயக சதுர்த்தி விசேஷ அபிஷேகம் விநாயகர் எலி வாகனத்தில் வீதிவலம் வருதல்.

(ஆ) ஆவணி உத்தரட்டாதி நட்சத்திரத்தில் சிவகாமி அம்மன் கும்பாபிஷேக தினம். விசேஷ அபிஷேகம் இடபவாகனத்தில் வீதிவலம் தருதல்.

புரட்டாதி : (அ) நவராத்திரி கும்பபூசையும் ஸ்ரீசக்கர பூசையும் ஒன்பதாம் நாள் அம்மன் சிங்கவாகனத்தில் மகிடாசுர சங்காரம். விஜயதசமியில் அம்மன் குதிரை வாகனத்தில் மானம்பூ. இந் நாட்களில் அபிஷேக ஆராதனைகள் விசேஷமானவை.

ஐப்பசி : (அ) ஐப்பசி உத்தரட்டாதி பிரதிட்டா நட்சத்திரத்தில் கும்பாபிஷேக தினம். மணவாளக் கோலம், பகல் சங்காபிஷேகம், இரவு அம்மன் புஸ்ப பல்லக்கில் வீதிவலம் வருதல்.

கார்த்திகை : (அ) கார்த்திகை சோமவாரம் மாலையில் அபிஷேகமும் உள்வீதி வலம் வருதலும் 1ம் திங்கள் இடபவாகனம், 2ம் திங்கள் எலி 3ம் திங்கள் சிங்கம் 4ம் திங்கள் மயில்.

(ஆ) திருக்கார்த்திகையில் சுப்பிரமணியருக்கு அபிஷேகமும் திருவிழாவும்.

(இ) சர்வாலய தீப தினத்தில் விசேஷ அபிஷேகம், அம்பாள் இடப வாகனத்தில் வீதிவலம் வருதல், சொக்கப்பனை கொளுத்துதல்.

மார்கழி: (அ) திருவெம்பாவை. மகோற்சவம் (கொடியேற்றம்) ஆரம்பம். எட்டாம் நாள் மாலை வேட்டைத் திருவிழா. சப்பறத் திருவிழா ஒன்பதாம் நாள் தேர்த்திருவிழா. பத்தாம் நாள் தீர்த்தம் ஊஞ்சல் என்பன. (மகோற்சவ கால வாகனக்கிரமம் இந்நூலின் வேறோர் இதழில் காண்க)

தை : (அ) தைப்பொங்கல் விசேஷ அபிஷேகமும் பூசையும்.
(ஆ) சுபநாளில் புதிதெடுத்தல் புத்தமுது ஆக்கல்.

மாசி : (அ) சிவராத்திரி அபிஷேகமும் ஒரு கால விசேட பூசையும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்குனி : (அ) சக்திக்குரிய முக்கிய வழிபாட்டுக் காலம் பங்குனி, திங்கட் கிழமைகளில் அம்பிகைக்கு விசேஷ அபிஷேகங்களும் ஆராதனைகளும் அர்ச்சனைகளும் உண்டு. பகலிலும் இரவிலும் திருவிழா உண்டு.

1ம் திங்கள் பகல் - இடபவாகனம் இரவு - காமதேனு

2ம் திங்கள் பகல் - சிங்கவாகனம் இரவு - எலி வாகனம்

3ம் திங்கள் பகல் - கைலாச வாகனம் இரவு - சோடிச்சிங்கம்

4ம் திங்கள் பகல் - மயில்வாகனம் இரவு - மஞ்சம்

இவை தவிர, ஒவ்வொரு மாதமும் பௌர்ணமியில் ஸ்ரீசக்கர பூசை நடைபெறுகிறது. ஒவ்வொரு பௌர்ணமியிலும் அபிராமிஅந்தாதி, அபிராமி அம்மை பதிகம் என்பன பக்தி சிரத்தையோடுபடிக்கப்படுகிறது. தைமாத அமாவாசையிலும் இவை படிக்கப்படுகிறது. (அபிராமிப்பட்டர், அமாவாசை தினத்தைப் பௌர்ணமியென்று தவறுதலாக அரசனிடம் கூறியதாகவும் அதை மெய்ப்பிக்கப்பாடி அம்பிகை அருளால் அமாவாசையைப் பௌர்ணமியாக்கியதாகவும் கூறப்படுவது காண்க.)

## நித்திய பூசை

உஷத் காலம் 6 மணி — காலை சந்தி 9 மணி

உச்சிக் காலம் 12 மணி — சாயரட்சை 4 மணி

2ம் காலம் 5 — 6 மணி — அர்த்தஜாமம் 6 — 7 மணி

## திங்கட்கிழமைகளில்

காலை சந்தி 10 மணி — உச்சிக் காலம் 2 மணி

பூசை நேரங்கள் உற்சவ காலங்களில் மாறுதலடையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
தேவிமயம்

# மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் மகோற்சவ கால வாகனக் கிரமங்கள்

## மகோற்சவம் :
## திருவெம்பாவைக் கொடியேற்றம்

1ம் நாள் பகல் இடபவாகனம் இரவு பூதம் ( காதேனு ) வாகனம்

2ம் நாள் பகல் சிங்க வாகனம் இரவு அன்ன வாகனம் (மயில்)

3ம் நாள் பகல் புஸ்ப பல்லக்கு வாகனம் (எலி)
இரவு சோடிசிங்க வாகனம்

4ம் நாள் பகல் மயில் வாகனம் இரவு யானைவாகனம் (காமதேனு)

5ம் நாள் பகல் இடப வாகனம் இரவு மஞ்சம்

6ம் நாள் பகல் கமல வானம் (சிங்கம்) இரவு காமதேனு வாகனம்

7ம் நாள் பகல் நாக வாகனம் (எலி) இரவு கைலாச வாகனம்

8ம் நாள் பகல் இடபம் வேட்டை (குதிரை வாகனம்)
இரவு சப்பறம்

9ம் நாள் பகல் தேர் இரவு இடப வாகனம்

10ம் நாள் பகல் இடபம், எலி, மயில் இரவு இடபம்

சண்டேஸ்வரி உற்சவம் இரவு இடபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமஸ்கிருத பண்டிதர்
சிவஸ்ரீ த. காசிநாதக்குருக்கள் பாடிய

மட்டுவில் பன்றித்தலைச்சி

# கண்ணகாம்பிகை
# ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள்
# திருஊஞ்சல்

()




## காப்பு

சீர்மேவு மட்டுவிலாம் பதியின் மேவுந்
தெய்வீக முளபன்றித் தலைச்சி தன்னில்
ஏர்மேவு கோயிலிடை வாழுந் தூய
இராஜரா ஜேஸ்வரியா ரருளை வேண்டி
நேர்மேவு மூஞ்சலிசை யவள்மேற் பாட
நீர்வேணிப் பரமசிவன் முதலிற் தந்த
கார்மேவு கயமுகத்தொர் தந்தத் தொந்திக்
கணபதிபொற் பாதமலர் காப்ப தாமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல்

1. திருமருவு நாதபிந்து கால்களாகச்
செய மருவு சத்தியொளிர் விட்டமாக
உரு மருவு மந்திரநூ லிழையதாக
உயர்ச்சியுறு நான் மறைகள் கயிறதாகக்
குருமருவு முப்நிடதம் பலகையாகக்
கூறுமுதற் பிரணவப்பொற் பீடமேவி
இருநிதியர் சார்பன்றித் தலைச்சி வாழும்
இராஜரா ஜேஸ்வரியே யாடீ ரூஞ்சல்

2. காரணியுந் திருக்கண்டத் தெந்தைக் கின்பக்
காதலளித் திடுமிரண்டு கண்ணும் நல்ல
சீரணியும் மதிமுடியும் புன்சிரிப்பும்
திருமுகமும் மதாணி நிரைபொலியு மார்பும்
ஆரணியும் சிலம்பொலிக்கும் கழலுங் காட்டி
அடியரிடர் நீக்கியினி தாள்வை தாயே
ஏரணிசார் நற்பன்றித் தலைச்சி வாழும்
இராஜரா ஜேஸ்வரியே யாடீ ரூஞ்சல்

3. கோதில்பன் னடனமட மாதர் நன்மை
குலவுறுகீ தம்பாடி நடன மாடப்
பூதிதிகழ் கந்தருவர் கானம் பாடப்
புலவர்தினந் திருத் தோத்திரம் புகன்றுநீட
ஓதுறுநா ரதராதி முனிவர் நல்ல
உரைசொல்லி வந்துவழி பட்டு நேட
ஏதமில்சீர் நற்பன்றித் தலைச்சி வாழும்
இராஜரா ஜேஸ்வரியே யாடீ ரூஞ்சல்

4. தனமொருமூன் றுளதடா தகையாய்த் தோன்றித்
தனியுலகாள் பராபரையே யாடீ ரூஞ்சல்
வனமிகுந்த சோமசுந் தாரனா மீசன்
வரப்போரிற் றனத்தொன்று மறைந்து போகக்
கனமிகுத்த கணவனெனக் கருத்துட் கொண்டே
கடிமணமாற் றிடுமிறைவீ யாடீ ரூஞ்சல்
இனமிகுந்த நற்பன்றித் தலைச்சி வாழும்
இராஜரா ஜேஸ்வரியே யாடீ ரூஞ்சல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. முந்துதவஞ் செய்தலத்தோ ரசுரன் வேங்கை
முதுவுருவாய்க் காவல்செய் தன்மை யாலே
சிந்தைமகிழ்ந் தரனருளாற் கைலை தன்னிற்
றிருநந்தி யொடுங்காவல் செயுமா றேவிப்
புந்தியுளார் சோமநந்தி யெனவே சொல்லும்
புகழினையும் பெறவருள்செ யிறைவி நீயே
இந்திரைசார் நற்பன்றித் தலைச்சி வாழும்
இராஜராஜேஸ்வரியே யாட லூஞ்சல்

6. மதிநிகர்வெண் குடைசுமாலி மாலி தாங்க
வருசுமனை மங்கலைகள் கவரி தாங்கச்
சதியுடைய சுகேசைபா துகைகை வாங்கச்
சாற்றுகம லினியனிந் திதையாம் பெண்கள்
புதியமனங் கமழ் மாலைத் தட்டந் தாங்கப்
பொன்மாதும் வெண்மாதும் வடந்தொட் டாட்ட
இதமுடைய நற்பன்றித் தலைச்சி வாழும்
இராஜராஜேஸ்வரியே யாட லூஞ்சல்

7. வலஞ்சிறக்கும் வீதிதொறும் தென்னை பெண்ணை
மாபுளியே தேக்குமகிழ் மருதம் வேம்பு
பலஞ் சிறக்கும் நாவல் குரா பலாவே மூங்கில்
பாதிரிபொற் கொன்றைவிளா பலாசு வில்வம்
நிலஞ் சிறக்கும் பேரில்லங் கணவங் வேங்கை
நிரைகளொடு செடிகொடியும் பிறவுந்துன்னும்
இலஞ்சியுயர் நற்பன்றித் தலைச்சி வாழும்
இராஜராஜேஸ்வரியே யாட லூஞ்சல்.

8. பகருமிரு மூவிதமாஞ் சமயத்தோர்க்கும்
பகுக்குமறு சமயத்தி லுள்ள வர்க்கும்
சுகமுதவித் தாய்போலத் தினமுங் காக்குந்
தோகையுன துருவமியான் காணக் காட்டிச்
சகமருவு பிறவியெனுங் கடலைத் தாண்டத்
தளிரடியாந் தெப்பந்தந் தருளு வாயே
இக பரமார் அகப்பன்றித் தலைச்சி வாழும்
இராஜராஜேஸ்வரியே யாட லூஞ்சல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. வந்தனை செய் கண்ணகைசீர் சூலி காமேஸ்
வரிமுதலா நாமமுளீர் ஆடீர் ஊஞ்சல்
சிந்தனை செய் சிறீசக்ர நடுவில் வைகுந்
தேவிமகா மனோன்மணியே யாடீ ரூஞ்சல்
சந்தமுள மறைமுடிபே ஆடீர் ஊஞ்சல்
சற்றென்னைப் பார்த்தருள்வீர் ஆடீர் ஊஞ்சல்
இந்திலமீ தூர்பன்றித் தலைச்சி வாழும்
இராஜரா ஜேஸ்வரியே ஆடீர் ஊஞ்சல்.

10. காதமருங் குழையாரே ஆடீர் ஊஞ்சல்
கரத்தமர்பா சத்தாரே ஆடீர் ஊஞ்சல்
பாதிமதி முடியாரே ஆடீர் ஊஞ்சல்
பாதமிளிர் சிலம்பாரே ஆடீர் ஊஞ்சல்
போதமுளார் பொங்குவதற்குதவும் நன்னீர்ப்
பொய்கைதிகழ் ஆவணத்தீர் ஆடீர் ஊஞ்சல்
ஈதலுளார் சார்பன்றித் தலைச்சி வாழும்
இராஜரா ஜேஸ்வரியே ஆடீர் ஊஞ்சல்.

வாழ்த்து

பூத்திகழும் வைதிகநற் சைவம் வாழி
புயல் பொழிந்து மழை மாதந் தோறும் வாழி
சாத்திரமாம் வேதசிவா கமங்கள் வாழி
சாற்றுமான் அந்தணரா தியர்கள் வாழி
நாத்திகழும் ஐந்தெழுத்தும் நீறும் வாழி
நாடெங்கு மக்கமணி மாலை வாழி
ஏத்துறுசீர் நற்பன்றித் தலைச்சி வாழும்
இராஜ ராஜேஸ்வரியா ருளும் வாழி.

சுபம்

தேவி திருவடிகளே சரணம்

சிவஸ்ரீ. த. காசிநாதக் குருக்கள்,
கரணவாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
தேவிமயம்



## பன்றித்தலைச்சி அம்மன்

# பக்தரின் அற்புதத் தெய்வம்

"பன்றித்தலை ஈது பசுக்கொலை அல்ல அப்பா"
வென்ற வழக்கு நீதி வேதநாயகியாம் அம்பாள்
கண்டதே காட்டுகின்றாள் கண்ணகை அம்மன் நித்தம்
கொண்டவர் குறைகள் போக்கிக் குலம் விளங்கிடவும் வைப்பாள்!

தும்பிக்கையான் உலகு சுற்றிட அர்த்தநாரி
அம்பிகைவேல் கொடுத்து அழகனா ஷிட்ட அன்னை
வெம்பிக்கை தலைமேல் வைப்பவர் வினைதீர் தாயாம்
நம்பிக்கையோடு நாளும் நாசொல்ல சரஸ்வதியாம்!

ஆறுகாலப் பூசை ஆகம முறைப்படியாம்
வேறுபட்டேதும் இல்லை வேண்டலாம் புவனேஸ்வரி
ஊறுபட்டழிந்திட்டாலும் உறுதுணை நாமகளே
கூறுபாட்டிதழ்கள் பாதம் கும்பிடும் திருமாதேவி!

கொண்டிடவாரும் செல்வம் குவித்திடும் கனகேஸ்வரி
கண்டிடப்பாலும் பொங்கும் கவலையும் பசியும் போகும்
உண்டிட உலகுகாட்டி உழைத்திடு என்றும் அம்மா
பண்டிதன் மடியில் காணப் பரம்பொருள் பாலாம்பிகை!

மூ. சு. கதிர்காமத்தம்பி,
மேலைப்புலோலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். மட்டுவில் பன்றித்தலைச்சி

என்னும்

## ஸ்ரீ இராஜராஜேஸ்வரி

# தோத்திர மாலை

### காப்பு

மன்றிற் சிவன்றந்த மாகளிறே ஐங்கரனே
பன்றித் தலைச்சிப் பகவதியாய் - நின்றருளும்
எங்கண் ணகியாம் இராஜரா ஜேஸ்வரிதாள்
தங்குகவி பாடவரந் தா.

### நூல்

அருணபிர ணவமுதல வட்சர மனைத்துமாய்
அகிலாண்ட கோடி யீன்று
தருணமழை யாயுதவும் தாயே சராசரம்
தாங்குமணிக் கோயில் கொண்டாய்
சரணமென நின்னையே தஞ்சமென வந்தேனுன்
தன்னருள் புரிந்து காப்பாய்
எருதுபொலி மட்டுவிற் பன்றித் தலைச்சியெனும்
இராஜ ராஜேசு வரியே. 1

நீரேறு கண்பெருகி நினைவுநின் பால்வைத்து
நெக்குருகு பக்குவத் தார்
சீரேறு வண்ணமலர் சிந்தனைத் தெளிவாகி
திகழறிவுக் கறிவு மாகி
பாரேறு வாழ்வருளும் சிவமனோன் மணியுனைப்
பாடுகிற பேறருளு வாய்
ஏரேறு மட்டுவிற் பன்றித் தலைச்சியெனும்
இராஜ ராஜேசு வரியே. 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பென்ற வலையிலே வந்துவிழு மம்மையே
அடியார் விழுங்கு கனியே
முன்புவரு கண்ணகி மகாசக்தி யென்றுதொழ
முன்னிற்கும் ஞான மணியே
பொன்பெருகு நின்கழலுக் கந்திபகல் தொண்டுபுரி
புனித சுக மனமுதவு வாய்
இன்பமுயர் மட்டுவிற் பன்றித் தலைச்சியெனும்
இராஜ ராஜேசு வரியே. 3

அப்பனுட னம்மை நீ ஆயஉற வோரும் நீ
அரியதுணை நண்பரும் நீ
வெப்பம் நீ குளிரும் நீ விண்முத லனைத்தும் நீ
விளங்குபல தெய்வமும் நீ
செப்பரிய நின்பெருமை தெரிகிலேன் தெரியமனத்
திரையிலொரு வடிவில் வருவாய்
இப்படியில் மட்டுவிற் பன்றித் தலைச்சியெனும்
இராஜ ராஜேசு வரியே. 4

பரவிடும் வைசூரி கொப்பளிப் பானம்மை
படுவன் சிலந்திகண் ணோய்
சிரநரம் புற்றநோய் செறுபுழுப் புற்றுநோய்
சித்தமா றாட்டம் வாதம்
மருவுபல நோய்தீர்க்கும் வைத்யகற் பகமேயென்
மலநோய்க்கும் மருந்துதரு வாய்
இரவி பணி மட்டுவிற் பன்றித் தலைச்சியெனும்
இராஜ ராஜேசு வரியே. 5

பொழிலாரும் கம்பையிற் பொலியநா லெட்டறம்
போற்றிப் படைத்த குயிலே
தொழிலாதி யைந்துபுரி சோதிமயிலே நினைச்
சுழுமுனா வெளியிற் காண
வழியேது மறியாத மதியிலேன் கடைத்தேறும்
வழியொன்று புகலு வாயே
எழிலான மட்டுவிற் பன்றித் தலைச்சியெனும்
இராஜ ராஜேசு வரியே. 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரங்கொளும் சகஸ்ரார தீபமே சிவாயநம
திருவடிவ நடனமாடி
வரந்தருங் கரமசைய வதனமதி யசையவிழி
மலரசைய மாலை யசைய
பரந்திடும் சடையசைய பரவபர தனமசைய
பரிவொடெழுந் தருளியெமக் கிங்
கிரங்குவாய் மட்டுவிற் பன்றித் தலைச்சியெனும்
இராஜ ராஜேசு வரியே. 7

முந்துமது ரைப்பதியில் முதுசிலம் புடனாடி
முடிநெடுங் குன்றில் நின்ற
செந்தமிழ்க் கண்ணகித் தெய்வமெனத் தேவர்தொழும்
தேனே சிவக்கொழுந் தே
ஐந்துபுல வேடரை அடக்கிப் பறித்ததேன்
அமுதம் புசிக்க அருள்வாய்
இந்துபணி மட்டுவிற் பன்றித் தலைச்சியெனும்
இராஜ ராஜேசு வரியே. 8

தோத்திரம் செய்துனது துணையடி பணிந்திலேன்
சொல்வேத வாகமத் தின்
சாத்திரம் தெளிகிலேன் தவநெறி பயின்றிலேன்
தமியனே னுடலினை வெறும்
பாத்திரம் போற்கொண்டு திரியாம லுனதருட்
பார்வையின் பாலுதவுவாய்
ஏத்திடும் மட்டுவிற் பன்றித் தலைச்சியெனும்
இராஜ ராஜேசு வரியே. 9

யோகமே யோகத்தின் ஞானமே ஞானத்தின்
நுண்சுடர் மலர்ந்த மலரே
மோக மா விருண்மனையில் விளக் கின்றிவிழி
மூடிவிழித் தழுகுழவி போல்
சோகமே உருவாக நின்றநா யேன்றனைச்
சோதியா தருளு மம்மா
ஏகமே மட்டுவிற் பன்றித் தலைச்சியெனும்
இராஜ ராஜேசு வரியே. 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைவிலா நிதியுண்டு கலையுண்டு வாழ்க்கையிற்
கோணாத நெஞ்ச முண்டு
நிறைவான மனைவியுண் டறிவாங்கு
நீதிதரு மினமு முண்டு
மறை நான்கின் மேலான மந்திர சொரூபிநின்
மலரடி பணிந்தவர்க் கே
இறைவியே மட்டுவிற் பன்றித் தலைச்சியெனும்
இராஜ ராஜேசு வரியே. 11

துண்ணென்ற பேயோடும் தொடரீன நோயோடும்
துட்டர்வஞ் சனைக ளோடும்
நண்ணுபவ வினையோடும் நலிவறுமை பகையோடும்
நாள்கோளின் துயர மோடும்
திண்ணென்ற காலநம தூதரோ டும்நினது
தெரிசனம் கண்டவர்க்கே
எண்ணுபுகழ் மட்டுவிற் பன்றித் தலைச்சியெனும்
இராஜ ராஜேசு வரியே. 12

ஆக்கியோன் : அருட்கவி சீ. விநாசித்தம்பி

உ
தேவிதுணை

# ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அஷ்டகம்

அன்னை சாம்பவி பிறைமுடி அபலை
அபர்ணை பார்வதி உமையருட் காளி
மன்னி மாசல மகள்சிவை காத்யா
யனிமுக் கண்ணிநற் பயிரவி கருணை
துன்னு சாவித்ரி யழிவில்யவ் வனத்தாள்
சுபஞ்செய் வாள் நிறை பெருந்திரு அருள்வாள்
சின்மயீ யருட் பகவதி திருவார்
தேவி ராஜரா ஜேஸ்வரி பரையே. 1

அன்னை மோகினி தேவிமுப் புவன
அகண்ட ரூபிணி பெருமகிழ் வளிப்பாள்
மன்னு நற்கலை வடிவினள் தளிர்க்கை
வயங்கு வேய்ங்குழற் கானத்தின் விருப்பாள்
நன்னர் மங்கலை யுடுபதி நிகரு
நலங்கொ ளானனி புகைக்கணற் செகுத்தாள்
சின்மயீ யருட் பகவதி திருவார்
தேவி ராஜரா ஜேஸ்வரி பரையே. 2

அன்னை பொற்சிலம் பரதனக் கடகம்
அங்க தங்குளிர் முத்தணி யணிவாள்
மன்னு சம்பகஞ் சாதிமென் மலர்நன்
மாலை யாள்கழுத் தணியொளி திகழ்வாள்
துன்னு வீணையுங் குழலுமிக் கணிசெய்
தொடிக் கரத்திவீ ராசனத் திருப்பாள்
சின்ம யீயருட் பகவதி திருவார்
தேவி ராஜரா ஜேஸ்வரி பரையே. 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னை ரௌத்திரி பத்திர காளி
வகலை வைணவி யாழரன் முகத்தி
யன்னு நற்பிரம் மாணிமுப் புரங்காய்
வயிரி வானவர் வழுத்து செஞ்சோதி
தன்னை அண்டினர்ப் புரந்தரு ளம்மை
தக்கன் மாமகள் சாமுண்டி வலவை
சின்ம யியருட் பகவதி திருவார்
தேவி ராஜரா ஜேஸ்வரி பரையே. 4

அன்னை சூலம்வி லங்குச பாசம்
அடுத்த கையினள் பிறைமதி யணிவாள்
பொன்னும் வாணியும் போற்றிடுந் தகையாள்
வராகி மாமது கைடவர்ச் செறுத்தாள்
சின்ன மாகமல் லாசுர மூகர்ச்
சிதைத்த நங்கையம் பிகைமகேச் சுவரி
சின்ம யியருட் பகவதி திருவார்
தேவி ராஜரா ஜேஸ்வரி பரையே. 5

அன்னை முத்தொழில் புரிபவள் மேலாம்
அணங்கு மிக்குயர்ந் தொளிர்தரு நிறத்தாள்
மன்னு காயத்ரி பிரணவ அமுத
சார பூரணி வழிபடத் சூரியாள்
தன்னை நேரிலோங் காரிதாழ் விநதை
தனயற் காத்தவள் தைத்தியர்ச் செருப்பாள்
சின்ம யியருட் பகவதி திருவார்
தேவி ராஜரா ஜேஸ்வரி பரையே. 6

அன்னை நித்தியை ஆகம மாதி
வழுத்த நின்றவள் ஆரியை தேவி
அன்ன வாகனன் முதலெனும் பீறாம்
அனைத்து மீன்றவள் செகமயல் புரிவாள்
வன்ன பஞ்சகப் பிரணவ மாதீ
வகுத்த தாயகி மாலினி மனத்தாள்
சின்ம யியருட் பகவதி திருவார்
தேவி ராஜரா ஜேஸ்வரி பரையே. 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னை அட்டகம் அனுதினம் அன்பின்
அகன்ற சிந்தையில் படிக்குநல் அடியார்
அன்னை தன்கடைக் கண்ணருள் நோக்கம்
அடைவ ரிங்கழி யாப்பெருந் திருவும்
அன்னை தூயமந் திரப்பெருந் துதியால்
அரன்ச மீபமன் னரும்பதம் அளிப்பாள்
சின்ம யீயருட் பகவதி திருவார்
தேவி ராஜரா ஜேஸ்வரி பரையே. 8

ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அஷ்டகம்
முற்றிற்று
தேவி துணை

---

மட்டுவில்

# பன்றித்தலைச்சி அம்பாள் துதி

## காப்பு

வாரணனைப் பெற்றவளே மன்னும் நடமாடும்
பூரணியாய் நிற்கும் புராதனியே — ஆரணங்கள்
தந்த சிவசக்தித் தாயே; மனாதீத
சுந்தரியே நின்தாள் துணை.

பூ அயன் மால் அறியாத
பூரணனு ருடன் ஆடும்
தேவி பராபரி
செல்வ மனோன் மணியென்று
ஓவிய மந்திரம் சொல்லும்
உள்நெகிழ் நல் லடியார்க்கே
நாவில்இருந் தருள் செய்யும்
நல்ல பன்றித் தலைச்சித் தாயே.

பொற்புயர் பண்முலைப் பாலை
புகலுயர்கோன் உணத் தந்து
சிற்புறு தேனுறும் பாடல்
தேங்கி வளம் பெறுமாறு
கற்பக நாயக னுடனே
கனவிடை ஏறிய கருணை
நற்பர மானந்தம் அருள்வாய்
நல்ல பன்றித் தலைச்சித் தாயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னெறி கல்வியும் வாழ்வும்
மோன உபாசன நிலையும்
நன்னெறி ஓங்கிய சுகமும்
வாரி வழங்கிடும் அன்னே
முன்னெறி சோதியும் சுடரும்
வேதமும் அங்கமும் ஆகி
நன்னெறிக் கேற்றிடும்
நல்ல பன்றித் தலைச்சித் தாயே.

ஆகம வேள்வியும் அகில
அண்ட சராசரங்கள் உதவும்
யோகமும் லோகமும் எங்கும்
பூத்திடும் ஏகமும் அநேகமும் ஆதி
எண்ணிய புண்ணியம் பூத்த
நாக சடேசு வரியானாய்
நல்ல பன்றித் தலைச்சித் தாயே.

கல்லாத கல்மனம் உருக்கி
கரும்பான தீஞ்சுவை பெருக்கி
நில்லாத சிந்தையை நிறுத்தி
நிலையான பேரகத் திருத்தி
சொல்லாமை கள்ளாமை சூது
கொடுங்காம குற்றங்கள் தவிர்த்து
நல்லாரின் நெஞ்சினில் வாழும்
நல்ல பன்றித் தலைச்சித் தாயே.

பாடும் பனுவலும் தொடையும்
பதங்களும் சீரொடு நயமும்
ஆடும் கலைகளும் அறிவும்
அறிவினில் தேடிய தெளிவும்
வீடும் பதங்களும் கொடுக்கும்
விமலியென மகிழ்ந் தடியார்கள்
நாடும் பிரணவப் பொருளே
நல்ல பன்றித் தலைச்சித் தாயே

உமை சிவகாமி பவானி
ஊற்றெழு மாசி மகத்தாள்
அமையும் தாட்சாயணி
மதுரை அங்கயற் கண்ணி
மீனாட்சி கண்ணகை
இமைய பொற் பார்வதி, இனிய காஞ்சி
காமாட்சியுமாகிநற்பரமானந்தம்அருள்வாய்
நல்ல பன்றித் தலைச்சித் தாயே.

எண்ணெய் கலைதரும் அழகீ
இயைந்த நிதி தரும் அழகீ
திண்ணம் திறல் தரும் அழகீ
தில்லை நடமிடும் அழகீ
விண்ணும் புவனமும் மாற்றி
விதைக்கும் அழகி உன்பணியை
நண்ணும் வரம் தருவாயே
நல்ல பன்றித் தலைச்சித் தாயே.

சீல மிகுந்திடும் தேவர்
சீலர் எல்லாந் துயர்மாற
சால மகுடனை மாய்த்த
சங்கரி நீலி சுபாலி
கோல மிகுதவம் பேணி
குங்குமம் சந்தனம் நீறு
ஞால மெல்லாம் அருள் செய்த
நல்ல பன்றித் தலைச்சித் தாயே.

அம்பலம் ஆல நற்காட்டில்
ஆடினை ஐங்கரத்தானை
செம்பொருட் கந்தனை ஈன்றாய்
திரு முகுந்தன் மகிழ் தங்காய்
கும்பிட்டு நின்புகழ் பாடி
குரை கழல் போற்றிடத் தருவாய்
நம்பி நின்றேன் பிழைபொறுப்பாய்
நல்ல பன்றித் தலைச்சித் தாயே.

சண்டிலிப்பாய் க. ஞானப்பிரகாசம் அவர்களால் ஆக்கப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
திருச்சிற்றம்பலம்

# திருமுறைகள்

1-ம் திருமுறை

அருநெறியமறை வல்லமுனியகண் பொய்கை யலர்மேய
பெருநெறிய பிரமாபுரமேவிய பெம்மானிவன் றன்னை
ஒருநெறிய மனம்வைத்துணர் ஞானசம்பந்தன் னுரைசெய்த
திருநெறிய தமிழ்வல்லவர் தொல்வினை தீர்தலெளிதாமே.

1

கானமர் சோலைக் காபலீச் சரமமர்ந்தான்
தேனமர் பூம்பாவைப் பாட்டாகச் செந்தமிழான்
ஞானசம் பந்தனலம் புகழ்ந்த பத்தும் வல்லர்
வான சம்பந்தத் தவரோடும் வாழ்வாரே.

2-ம் திருமுறை

ஆற்றல்டல் விடையேறுமால் வாயான் திருநீற்றைப்
போற்றிப்புகலி நிலாவும் பூசுரன் ஞானசம்பந்தன்
தேற்றித் தென்னனுலுற்ற தீப்பிணியாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே.

3-ம் திருமுறை

நந்தி நாம நமச்சிவாய வெனும்
சந்தை யாற்றதமிழ் ஞானசம்பந்தன் சொல்
சிந்தையால் மகிழ்ந்தேத்த வல்லா ரெல்லாம்
பந்த பாச மறுக்க வல்லார்களே.

4-ம் திருமுறை

மாப்பினை தழுவிய மாதொர் பாகத்தன்
பூப்பினை தருந்தடி பொருந்தக் கைதொழ
ஞாப்பினை தழுவிய நமச்சிவாயப் பந்து
ஏத்த வல்லார் தமக் கிடுக்கண் இல்லையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5-ம் திருமுறை

பனைக்கை மும்மத வேழ முரித்தவன்
நினைப்பவர் மனங் கோயிலாக் கொண்டவன்
அனைத்து வேடமாமம் பலக் கூத்தனைத்
தினைத்தனைப் பொழுது மறந் துய்வனே.

6-ம் திருமுறை

அருந்துணையை அடியார் தம் அல்லல் தீர்க்கும்
அருமருந்தை யகன் ஞாலத் தகத்துட்டோன்றி
வருந்துணையும் சுற்றமும் பற்றும் விட்டு
வான் புலன்களகத் தடக்கி மடவாரோடும்
பொருந்தணைமேல் வரும் பயனைப் போக மாற்றிப்
பொதுநீக்கித் தனைநினைய வல்லோர்க் கென்றும்
பெருந்துணையைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

7-ம் திருமுறை

மற்றுப் பற்றெனக் கின்றிநின் திருப்பாதமே மனம் பாவித்தேன்
பெற்றதும் பிறந்தேனினிப்பிற வாததன்மை வந்தெய்தினேன்
கற்றவர்தொழு தேத்துஞ்சீர்கறை யூரில் பாண்டிக் கொடுமுடி
நற்றவாவுனை நான் மறக்கினும் சொல்லுநா நமச்சிவாயவே.

8-ம் திருமுறை

தென்பா லுகந்தாடும் தில்லைச் சிற்றம்பலவன்
பெண்பாலு கந்தான் பெரும் பித்தன் காணேடி
பெண்பாலு கந்திலனேல் பேதாய் இரு நிலத்தோர்
விண்பா லியோகெய்தி வீடுவர்காண் சாழலோ.

9-ம் திருமுறை

நையாத மனத்தினனை நைவிப்பா னித்தெருவே
ஐயா நீ யுலாப்போந்த வன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே.

10-ம் திருமுறை

ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்
நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந்தான் ஐந்து
வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழும்பர்ச்
சென்றனன் தானிருந் தானுணர்ந் தெட்டே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11-ம் திருமுறை

அரியோடு நான்முகத் தோனாதி சுரர்க்கெல்லாம்
தெரியாமை செந்தழலாய் நின்ற - ஒருவன் சீர்
தன்தலையின் மேல்தரித்த சம்பந்தன் தாளிணைகள்
என்தலையின் மேலிருக்க வென்று.

12-ம் திருமுறை

உலகெலா முணர்ந்தோதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

வாழ்த்து

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்க்கவே.

திருச்சிற்றம்பலம்.

மங்களமா மனைத்தினுக்கும் மங்களமே சிவமே
மக்கள்விழை நாற்பொருளும் வழங்குநலத் தாயே
தங்கள்புக ளேவிழிமூன் றேய்ந்தவளே கௌரி
எழில்நா ராயணியுன்னை இறைஞ்சிடுவோம் யாமே.

ஸர்வ மங்கள மாங்கல்யே சிவே ஸர்லார்த்த ஸாதிகே
சரண்யே த்ரியம் பகே கௌரி நாராயணி நமோஸ்துதே.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

சிவநேயச் செல்வர்காள்!

மட்டுவில் வடக்கு பன்றித்தலைச்சிக் கண்ணகை அம்பாளுக்கு நிகழும் விபஹு ஐப்பசி மீ 21ந்உ புதன்கிழமை பகல் 18 நாடி 50 விநாடி தொடக்கம் 20 நாடிவரை மணி 1 மினிற் 27 தொடக்கம் ம. 2 மி.5 வரை நிகழும் கும்பலக்கினமும் உத்திரட்டாதி நட்சத்திரமும் கூடிய சுபமுகூர்த்தத்தில் மஹாகும்பாபிஷேகம் கீழ்க் காணப்படும் கிரியா கலாபங்களுடன் நடாத்தப்படும்.

19உ திங்கள் பகல் திரவிய சுத்தி அனுஞ்ஞை
இரவு கிராம சாந்தி பிரவேசபலி வாஸ்து சாந்தி மிருத்சங்கிரகணம் யாகாரம்பம் முதலியன

20 ,, செவ்வாய் பகல் கோபூஸை ஆதாரசிலாஸ்தாபனம் தீபஸ்தாபனம் நயநோன்மீலனம்
இரவு தானியாதிவாசம் ஜலாதிவாசம் சயநாரோகணம் திரவியஹோமம்

21 ,, புதன் உதயாதி 6 மணிக்குள் மூர்த்தி ஸ்தாபனம் பர்சாகுதி முதலியன மேற்காணப்படும் சுபமுகூர்த்தத்தில் ஆன்மாக்களது தியாஞதிகளுக்கு தாம் அகப்படுதல் வேண்டுமென்னுந் திருவருளினல் சக்தி காரியமாகிய உருவத்திருமேனி கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ கண்ணகாம்பிகைக்கு வேத பாராயண சங்க மங்கள வாத்தியங்களுடன் கும்பாபிஷேகம் நடைபெறும். அத்தருணம் அன்பர்கள் அனைவர்களும் வந்து தரிசித்து இஷ்டசித்திகளைப் பெற்று இனிது வாழ்க. அன்றிரவு 6 மணிதொடக்கம் மஹாபிஷேகமும் வீதிஉலாக்கொண்டருளும் பவனி உற்சவமும் நடைபெறும்.

" திருப்பணி செய்வார் சிவனை யுன்னிச்
செம்பொன் விருப்புட னீவார் பெறுகவீடு "

பிரதிஷ்டாகுரு :
சி. வ. ச. பாலசுந்தரக்குருக்கள்
ஊரெழு.

இங்ஙனம்,
மனேச்சர்
சி. சிவகுரு

3 – 11 – 46

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டுவில் வடக்கு பன்றித்தலைச்சிக் கண்ணகாம்பிகையின்
## நித்திய நைமித்திய
## மஹோற்சவ விஞ்ஞாபனம்

சொல்லும் பொருளுமென நடமாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடியே - நின்புதுமர்த்தாள்
அல்லும் பகலும் தொழுமவர்க்கே அழியாவரசும்
செல்லுந் தவறியும் சிவலோகமும் சித்திக்குமே

சிவநேயச் செல்வர்களே !

ஸ்ரீ விராட்புடருனது சரீரமாகிய பிரமாண்டத்தின் இடைநாடிக்கு ஸ்தானமென்று சாத்தோக்கியம் முதலிய உபநிஷத்துக்களிலே எடுத்தோதப் பெற்றதும், சிவானுபூதி செல்வர்களாலும், பிறராலும், சிவபூமி, சுவர்ணபூமி, புண்ணியபூமி, அனுக்கிரகஸ்தலம் என்று வியந்து கூறப்பெற்றதும் இவ்விலங்காதேவியின் பராசக்திக்கு உபாங்கமாகிய பதினெண் சக்திகளுள் ஒன்ருக விபாபிக்கப்பட்டதும், சர்வான்மாக்களுக்கும் மனோபீஷ்டப்படி அனுக்கிரகிக்கும் சர்வரோக நிவராணியும் ஆன்மாக்களது தியானுதிகளுக்கு தாம் அகப்படுதல் வேண்டுமென்னுந் திருவருளினுலே சக்திகாரியமாகிய உருவத்திரு மேனிகொண்டு எழுந்தருளியிருக்கும் கண்ணகாம்பிகா தேவிக்கு நித்தியாங்கமாகிய நைமித்திய மகோற்சவம் நிகழும் விய வருடம் மார்கழிமீ 12-ந் திகதி (27-12-46) வெள்ளிகிழமை சாயங்காலம் 6 மணி தொடக்கம் விநாயகபூசை, திரவியசுத்தி, அனுஞ்ஞை, மாரிஅம்மன் விழா (கிராமசாந்தி) பிரவேசபலி, வாஸ்துசாந்தி.

13-ந் திகதி சனிக்கிழமை முற்பகல் 1 மணிக்குள் மிருத்சங்கிரகணம், அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம், விருஷபயாகம், ஸ்தம்பப்பிரதிஷ்டை துவஜாரோகணம், நவசந்தியாவாகனம், முதலியன. அன்று இரவு யாகாரம்பம் முதலியன.

20-ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் மிருகயாத்திரை, இரவுசப்பறம்.

21ந்திகதி ஞாயிற்றுக்கிழமை இரத்தோற்சவம், மகாபிஷேகம் முதலியன

22-ந் திகதி திங்கட்கிழமை முற்பகல் தீர்த்தோற்சவம் யாககும்பாபிஷேகம் இரவு ஊஞ்சல், துவஜாவரோகணம், சண்டேஸ்வர உற்சவம், ரக்ஷாவிசர்சனம்

23-ந் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் பிராயச்சித்தம், இரவு வைரவ சாந்தி மேற்படி கண்ணகாம்பிகாதேவிக்கு நடாத்தப்படும். தசரக்தின மகோற்சவ விழாக்களை அன்பர்களனைவரும் உரியகாலங்களில் வந்துதெரிசித்து இஷ்ட சித்திகளைப்பெற்று இனிது வாழ்க.
" செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும் வானகமும் மாற்றலரிது "

மகோற்சவ குரு — இங்ஙனம் — மனேச்சர்

சி. வ. ச. பாலசுந்தரக்குருக்கள் — சி. சிவகுரு

ஊரெழு.

16 - 12 - 1946

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
தேவி துணை

மட்டுவில் வடக்கு

# பன்றித்தலைச்சி கர்ணாகாம்பாளின் சம்புரோக்ஷண

# மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

ஸ் து தி

சொல்லும் பொருளு மெனநட மாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடியே நின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலுந்தொழு மலர்க்கே யழியா வரசும்
செல்லுந் தவநெறியும் சிவலோகமும் சித்திக்குமே.

சிவநேயச் செல்வர்களே!

இவ்விலங்கா தேவயின் வடபாகத்தில் சிவபூமி, சுவர்ணபூமி, புண்ணியபூமி, அனுக்கிரகஸ்தலம் என்று வியாபிக்கப் பெற்றதும் சர்வான்மாக்களுக்கும் மனோபீஷ்டப்படி அனுக்கிரகிக்கும் சர்வரோக நிவாரணியுமாகிய கர்ணகாம்பாளுக்கு வருஷந்தோறும் நிகழ்ந்த நித்தியாங்கமாகிய நைமித்திக மகோற்சவம் சென்ற ஆண்டில் நடக்கப் பெறாமையால், இவ்வாண்டு நடப்பதற்கு பிராயச்சித்தாங்கமாக நிகழும் மன்மதவரு ஐப்பசி மீ (21-10-55) க்குச்சரியான 4-ந் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் மணி 10 மி. 8 தொடக்கம் 10-30 க்குள் வரும் தனுலக்கின சுபமுகூர்த்தத்தில், சகல கிரியாகலாபங்களுடன் கும்பாபிஷேகஞ் செய்ய திருவருளை முன்னிட்டு நிச்சயித்திருப்பதால் அருட்பெருஞ் சிறப்புவாய்ந்த அன்பர்கள் தங்களாலியன்ற அபிஷேக திரவியங்களுடன் வந்து தரிசித்து அம்பாளின் திருவருளைப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

பிரதிஷ்டா குரு:
சிவஸ்ரீ சி. வ. ச. பாலசுந்தரக் குருக்கள்
ஊரெழு.

13-10-55

இங்ஙனம்,
மேற்படி ஆலய மனேச்சர்
சி. சிவகுரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

### மட்டுவில் வடக்கு
## பன்றித்தலைச்சி என்னும்
## திவ்வியக்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கும்
## ஸ்ரீ கண்ணகாம்பிகா தேவியின்

### சம்புரோக்ஷண
# மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபனம்

---

ஸ்துதி

சொல்லும் பொருளு மெனநடமாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடியேநின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலுந் தொழுமவர்க்கே யழியாவரசும்
செல்லுந் தவநெறியும் சிவலோகமும் முத்திக்குமே.

**சிவநேயச் செல்வர்காள் !**

ஸ்ரீ விராட்புருடனது சரீரமாகிய பிரமாண்டத்தின் இடைநாடிக்கு ஸ்தானமென்று சாந்தோக்கியம் முதலிய உபநிஷத்துக்களிலே எடுத்தோ ப் பெற்றதும் சிவானுபூதிச் செல்வர்களாலும், பிறராலும் சிவபூமி, சுவர்ணபூமி, புண்ணியபூமி, அனுக்கிரகஸ்தலம் என்று வியந்து கூறப்பெற்றதும் இவ்விலங்காதேவியின் பராசக்திக்கு உபாங்கமாகிய பதினெண் சக்திகளுள் ஒன்றாக வியாபிக்கப்பட்டதும் சர்வான்மாக்களுக்கும் மநோபீஷ்டப்படிக்கு அனுக்கிரகிக்கும் சர்வரோகநிவாரணியும் ஆன்மாக்களது தியானதிக்களுக்கு தாம் அகப்படுதல் வேண்டுமென்னுந் திருவருளினாலே சக்திகாரியமாகிய உருவத் திருமேனி கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ கண்ணகாம்பிகாதேவிக்கு நிகழும் குரோதி ஷு கார்த்திகை மீ 8ந் திகதி (23-11-64) திங்கட்கிழமையும் புநர்பூச நக்ஷத்திரமும் அமிர்தசித்தயோகமும் கூடிய பஞ்சாங்க சுபதினத்திலே காலை 9 மணி 22 நிமிஷம் தொடக்கம் 9 மணி 46 நிமிடம்வரை வரும் தனுலக்கின சுபமுகூர்த்தத்தில் வேதாகம கோஷசுங்கமங்கள வாத்தியங்களுடன் மஹாகும்பாபிஷேகம் திருவருள் வசத்தால் நடைபெறும். அத்தருணம் சைவசமய அன்பர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவர்களும் தங்களாலியன்ற அபிஷேகதிரவியங்களுடன் வந்து தரிசித்து இயன்ற பாதகாணிக்கை செய்து இஷ்டசித்திகளைப் பெற்று இனிது வாழ்வீர்களாக.

## கிரியா விபரம்

குரோதி ஹூ கார்த்திகை மீ 6-ந் திகதி (21-11-64) சனிக்கிழமை 9 மணி தொடக்கம்: ஆசார்யவரணம் விக்கினேஸ்வர பூஜை திரவ்யசுத்தி, அனுக்ஞை முதலியன.

இரவு 6 மணிக்கு: கிராமசாந்தி, பிரவேசபலி, ரக்ஷாக்கின ஹோமம், வாஸ்துசாந்தி, மிருத்சங்கிரகணம், அங்குரார்ப்பணம், ஆசார்ய இரக்ஷாபந்தனம், பிரசன்னாபிஷேகம், பிரசன்னபூஜை, கடஸ்தாபனம், கலாகர்ஷணம், யாகாரம்பம், புதிய சனீஸ்வரன், சண்டேஸ்வரிக்கு அதிவாசக்கிரியைகள் முதலியன.

7-ந் „ (22-11-64) ஞாயிற்றுக்கிழமை 9 மணிக்கு: விசேஷ சந்தி, பூதசுத்தி, கோபூஜை, தீபஸ்தாபனம், விம்பஸ்தாபனம், அஷ்டபந்தனம், எண்ணைக் காப்புச் சாத்துதல், யாகபூஜை விசேஷ ஹோமம், வேதபாராயணம், திராவிட பாராயணம் முதலியன.

இரவு 6 மணிக்கு! பிம்பசுத்தி, சுவாமி இரக்ஷாபந்தனம் தத்துவ பூஜை, யாகபூஜை, விசேஷ ஹோமம் பர்சாகுதி ஜயாதிசாந்தி ஹோமம் முதலின.

8-ந் திகதி (23-11 64) திங்கட்கிழமை காலை 7 மணி தொடக்கம்; யாகபூஜை, மஹாபூர்ணாகுதி, விசேஷ ஆராதனைகள், யாத்திராதானம், முகூர்த்ததானம், வேதாகம சங்க மங்கள சர்வவாத்திய கோசங்களுடன் மஹாகும்பாபிஷேகமும், கேகதர்சனுதி மங்கள தர்சனம் யாக உத்வாசனம், தீர்த்தயாத்திரை, எஜமான் அபிஷேகம் பகல் 12 மணிக்கு மஹாபிஷேம் ஆசார்யசம் பாவனைகள் விஷேபூசை, முதலியன இரவு அம்பாள் இரத்தின பீடத்தில் ஆரோகணித்து வீதி உலாக் கொண்டருளும் பவனி உற்சவமும் நடைபெறும்.

" திருப்பணி செய்வர் சிவனையுன்னிச்
செம்பெகன் விருப்புடனீவார் பெறுக வீடு "

பிரதிஷ்டா குரு:
சிவஸ்ரீ. ச. பா. வைத்தியநாதக் குருக்கள்
ஊரெழு.

சி. செல்லத்துரை, சி. சிவகுரு
தருமகர்த்தாக்கள்

14-11-64

க. கதிர்காமசேகரம்
சபைத்தலைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
தேவிமயம்

# மட்டுவில் வடக்கு பன்றித்தலைச்சிக் கண்ணகை அம்பாள் தேவஸ்தானம்

ஜீர்ணோத்தாரண புனராவர்த்தன பஞ்சகுண்ட மஹாயாகத் திருக்குடத்திரு மஞ்சன

# மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

ஸ்துதி

சொல்லும் பொருளும் என நடமாடும் இணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடியே நின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழும் அவர்க்கே அழியா அரசும்
செல்லும் தவநெறியும் சிவலோகமும் சித்திக்குமோ.

அம்பிகை அடியார்களே!

ஸ்ரீ விராட்புருடனது சரீரமாகிய பிரமாண்டத்தின் இடை நாடிக்கு ஸ்தானமென்று சாந்தோக்கியம் முதலிய உபநிஷத்துக்களிலே எடுத்தோதப் பெற்றதும் சிவபூமி, சுவர்ணபூமி, புண்ணியபூமி, அனுக்கிரக ஸ்தலம் என்று வியந்து கூறப்பெற்றதும் மூர்த்தி தலம் தீர்த்தம் மூன்றும் ஒருங்கே சிறக்கப்பெற்றதும் சக்திபீடங்களுள் பத்தாவது அருட்பீடமாகப் புராதனச் சிறப்புடன் விளங்குவதும் சைவமும் தமிழும் சகலசெல்வங்களும் பெருகிவாழும் சுவர்ணபூமி என விளங்கும் மட்டுவில் வடக்கில் கோயில் கொண்டு எழுந்தருளி ஆன்மாக்களது தியானாதிகளுக்கு தாம் அகப்படுதல் வேண்டுமென்னும் திருவருளினாலே உருவத்திருமேனி கொண்டு எத்திறன் ஈசன் நிற்பன் அத்திறன் அவளும் நிற்பள் என்றவாறு அருள்பெருகும் ஸ்ரீ கண்ணகை அம்பாளுக்கும் மற்றும் பரிவார மூர்த்திகளுக்கும் ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான பிரசோற்பத்தி வருஷம் ஆனி மீ 20-ந் திகதி (4-7-91) வியாழக்கிழமை கிருஷ்ணபக்ஷஸப்தமித் திதியும் உத்தரட்டாதி நக்ஷத்திரமும் சித்தயோகமும் சந்திர ஓரையும் கூடிய சுபமுகூர்த்தத்தில் பகல் 11 மணி 03 நிமிஷம் மேல் 12 மணி 50 நிமிஷ மணிக்குள்ளாக வரும் கன்னி லக்கின சுபமுகூர்த்தத்தில் புனராவர்த்தனப் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் திருவருள் துணைகொண்டு நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது. அத்தருணம் சைவாபிமானிகள் அனைவரும் வந்து தரிசித்து அளவிலா ஆனந்தப்பேறு பெற்று நிலமிசை நீடு வாழ்ந்து இஷ்டசித்திகளைப் பெற்று இனிது வாழ்வீர்களாக.

## கிரியாகால நிகழ்ச்சிகள்

பிரசோற்பத்தி ஸ்ரீ ஆனி மீ 16-ந் திகதி (30-6 91) ஞாயிறு:

பகல் 11 ம 18 நி மேல் கர்மாரம்பம். விநாயக வழிபாடு. அனுக்ஞை கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், ரக்ஷோக்கன ஹோமம், திசாஹோமம், கங்காபூசை முதலியன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலை 4 மணி விக்கினேஸ்வரபூசை கிராம சாந்தி பிரவேசபலி வாஸ்துசாந்தி கோவாசம் மிருத்சங்கிரகணம் அங்குரார்ப்பணம் ரக்ஷாபந்தனம் பிரசன்னாபிஷேகம் கடஸ்தாபனம் கலாகர்ஷனம் பிரதான கும்பம் யாகசாலா பிரவேசம் தீபாராதனை வேதபாராயணம் முதலியன.

17-ந் திகதி ( 1-7-91 ) திங்கள் :

காலை 6 மணி விக்கினேஸ்வரபூசை தீபஸ்தாபனம், தூபிஸ்தாபனம், யந்திரஸ்தாபனம், பிம்பஸ்தாபனம், அஷ்டபந்தனம் விஷேசசந்தி, பூதசுத்தி சூர்யாக்கினி சங்கிரகணம், யாகபூஜை, பஞ்சகுண்ட அக்கினி பூஜை, ஹோமம், யாகதீபாராதனை. வேதபாராயணம் திருமுறைபாராயணம் முதலியன.

மாலை 4 மணி விக்கினேஸ்வரபூஜை, விசேஷசந்தி, பூதசுத்தி, யாகபூஜை, அக்கினிபூஜை, ஹோமம், விசேஷ தீபாராதனை, வேதபாராயணம், திருமுறைபாராயணம், முதலியன.

18-ந் திகதி ( 2-7-91 ) செவ்வாய் :

காலை 8 மணி விக்கினேஸ்வரபூஜை, விசேஷ சந்தி, பூதசுத்தி, யாகபூஜை, அக்கினிபூஜை, ஹோமம், தீபாராதனை, வேதபாராயணம், திருமுறைபாராயணம் முதலியன.

மாலை 4 மணி விக்கினேஸ்வரபூஜை, விசேஷசந்தி, பூதசுத்தி, யாகபூஜை, அக்கினிபூஜை, ஹோமம், தீபாராதனை, வேதபாராயணம், திருமுறைபாராயணம் முதலியன.

19-ந் திகதி ( 3-7-91 ) புதன் ;

காலை 8 மணி விக்கினேஸ்வரபூசை, விசேஷசந்தி, பூதசுத்தி, யாகபூஜை, அக்கினிபூஜை, ஹோமம், விசேஷ திரவிய ஹோமம், தீபாராதனை, வேதபாராயணம், திருமுறைபாராயணம் முதலியன. 10 மணிக்கு தைலாப்பியங்கம்.

மாலை 4 மணி விக்கினேஸ்வரபூஜை, விசேஷசந்தி, பூதசுத்தி, யாகபூசை, அக்கினிபூஜை, ஹோமம், சுவாமி ரக்ஷாபந்தனம், பச்சிமசந்தானம், ஸ்பர்சாகுதி ஜயாதிஹோமம், தீபாராதனை, வேதபாராயணம், திருமுறைபாராயணம் ஆசார்ய சம்பாவனை முதலியன.

20-ந் திகதி ( 4-7-91 ) வியாழன் :

காலை 8 மணி விக்கினேஸ்வரபூஜை, யாகசாலாப்பிரவேசம் மஹாயாகபூஜை, ஹோமம் பஞ்சகுண்ட அக்கினி சம்யோசனம், மஹாபூரணாகுதி விசேஷதீபாராதனை, வேதபாராயணம், மஹாசிர்வாதம், திருமுறைபாராயணம், யாத்திராதானம். 11 மணிக்கு சகல ஸ்தூல லிங்க ஸ்தூபிகளும் கும்பாபிஷேகம். 11 ம 15 நி மேல் 12 ம 50 நிமிடத்துக்குள்ளாக வரும் சுபமுகூர்த்தத்தில் பிரதான கும்பம் வீதிப்பிரதக்ஷணம் மூலாலயப்பிரவேசம் ஆவஹாநம் மஹாகும்பாபிஷேகம் மங்கள தரிசனம், யாகஉத்வாசனம் கர்ப்பாவரண அபிஷேகம், எஜமான் அபிஷேகம், மகாபிஷேகம், விசேஷ தீபாராதனை சண்டேஸ்வரி பிரார்த்தனை முதலியன.

மாலை 5 மணி விசேடபூஜை, திருவூஞ்சல், திருவீதியுலா, பவனி உற்சவம் முதலியன.

சுபமஸ்த்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலங்களில் அம்பிகை அடியார்கள் அனைவரும் தவறாது வந்து தரிசித்து இஷ்டசித்திகளைப் பெற்று இனிது வாழ்வீர்களாக.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

பிரதிஷ்டா பிரதம குரு சிவாகம வித்தியா பூஷணம் கிரியாரத்தினம்

சிவஸ்ரீ ச. பா. வைத்தியநாத சிவாச்சாரியார் ஊரெழு

| | |
|---|---|
| சிவஸ்ரீ பா. வை. தியாகராசக் குருக்கள் | ஊரெழு |
| சிவஸ்ரீ வை. கனகசபாபதிக் குருக்கள் | அச்சுவேலி |
| சிவஸ்ரீ க. சோமசுந்தரக் குருக்கள் | கோப்பாய் |
| சிவஸ்ரீ சோ. ஜோதிக் குருக்கள் | யாழ்ப்பாணம் |
| சிவஸ்ரீ தி. கெங்காதரக் குருக்கள் | புன்னாலைக்கட்டுவன் |
| சிவஸ்ரீ க. நடராசக் குருக்கள் | சரசாலை |
| சிவஸ்ரீ. கி. வைத்தீஸ்வரக் குருக்கள் | கோப்பாய் |

சாதகாசிரியர்கள் : சிவஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள் தர்மசாஸ்தா குருகுல அதிபர் இணுவில்.
பிரம்மஸ்ரீ வை. ஸ்ரீமசுந்தரசர்மா ஊரெழு.
பிரம்மஸ்ரீ பா. பங்குசசர்மா ஊரெழு.

தேவஸ்தான நித்திய அர்ச்சகர் : பிரம்மஸ்ரீ ந. ரவீந்திரசர்மா மட்டுவில்
பிரம்மஸ்ரீ ப. ரவீந்திரசர்மா சரசாலை

ஆசாரிமார்கள் : நாகமுத்து கோபாலரத்தினம் குழுவினர்,
அம்பலவாணர் திருநாவுக்கரசு குழுவினர் அராலி,

இங்ஙனம்,

சி. சிவகுரு
தர்மகர்த்தா.


ஆ. கந்தையா
சபைத் தலைவர்.

14 - 06 - 91

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஸ்ரீ விநாயகர் ஆலயம்




ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible]




[illegible]







ஸ்ரீ பாலசுப்பிரமணியர் ஆலயம்



ஸ்ரீ சனீஸ்வரன் ஆலயம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







ஸ்ரீ வைரவர் ஆலயமும் மணிக்கோபுரமும்




கோவில் மூலஸ்தானத்தின் பழைய தோற்றம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூலஸ்தானமும் நீராவி மண்டபமும்
சிவகாமி அம்மன் கோவிலும்




பழைய ஸ்தம்ப கொட்டகையின் தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




[illegible]




[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




புதிய ஸ்தம்ப மண்டப கொட்டகை




மகா யாகசாலையில் கும்பங்கள் இருக்கும் காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




[illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible]




மகாயாகசாலையில் விசேட தீபாராதனை
நடக்கப்பெறும் காட்சி



யாகசாலையில் இருந்து பிரதான கும்பங்கள்
2-ஆம் பிரகாரத்திற்கு செல்லுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




[illegible]



[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மூலஸ்தான தூபியும் சிவகாமி அம்மன் தூபியும்
குடமுழுக்கு நடைபெறும் காட்சி




மூலஸ்தானம் ஸ்ரீ கண்ணகை அம்பாளுக்கு
குடமுழுக்கு நடைபெறும் காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



[illegible]




[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கும்பாபிஷேக குருமார்களின் சம்பாவனை




நவராத்திரி ஸ்ரீ சக்கரயந்திர பூசை
செய்துகொண்டு இருக்கும் காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




[illegible]




[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வசந்த மண்டபத்தில் நவராத்திரி பூசை விசேட
தீபாராதனை நடைபெறும் காட்சி




கொடியேற்றம் நடைபெற்றுத் ஸ்தம்பபூசை நடைபெறும் காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






noolaham.org | aavanaham.org




அம்பிகையின் ௯-ம் திருவிழா
இரதோற்சவக் காட்சி



அம்பாள் தேரிலிருந்து இறங்கி
வசந்த மண்டபம் செல்லும் காட்சி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




[illegible]



[illegible]



மூலஸ்தானம் தூபி கும்பாபிஷேகம் நடக்கப்பெற்ற காட்சி




திருக்குளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



[illegible]



[illegible]



# நன்றியுரை



எம் பெருமாட்டியினுடைய பாதாரவிந்தங்களை நமஸ்கரித்து வணங்குகிறேன்.

எனக்கு ஒன்பது வயது நடக்கும் பொழுது 1934ல் எனது தகப்பனர் இறந்தார். அன்று தொட்டு இன்று வரையும் அம்பிகையினுடைய சிந்தனைதான் எனக்குப் பெரிது. நான் எத்தனையோ கஷ்டங்களை அனுபவித்து வந்திருக்கிறேன். அப்போதெல்லாம் அம்பிகை எனக்குத் தாயாக நின்று, தனது திருவருட் செயலால் என்னைக் காத்து வந்திருக்கின்றார்.

1943 ஆம் ஆண்டு ஆடிமாதம் கோவிலின் பொறுப்பு என்னிடம் வந்தது. அப்போது, இக்கோவிலுக்கு குருவானவர் ஒருவர் தேவையெனக் கருதி, ஊரெழு சிவஸ்ரீ சி. வ. சதாசிவக் குருக்கள் பாலசுந்தரக் குருக்கள் அவர்களை அணுகினேன். அவர் பிரபல்யமான குரு பரம்பரையில் உள்ளவர்; வேத ஆகம சாஸ்திரங்களை நன்கு அறிந்தவர்; பலகோவில்களில் பிரதிட்டை மகோற்சவம் முதலியவற்றைச் செய்து வைத்தவர்; நற்குணம், பண்பாடு என்பவற்றிற் சிறந்தவர். அவரிடம் நான், அம்பிகைக்கு விசேஷ தினங்களில் வந்து அபிஷேகம் உற்சவம் முதலியவற்றை நீங்களே செய்ய வேண்டும் என்று அழைப்பு விடுத்தேன். அதற்கிணங்கி அவர்கள் 1946ல் ஸ்ரீ கண்ணகை அம்பாள் தாமிர விக்கிரகம் பிரதிட்டை செய்து முதன் முதலாக மகாகும்பாபிஷேகத்தைச் செய்து வைத்தார்கள். அதே வருடம் மார்கழித் திருவெம்பாவை முதல் தினத்தில் மகோற்சவமான கொடியேற்று விழாவையும் ஆரம்பித்து நடத்தினார்கள்.

இவ்விதமாக, இவ்வாலயத்தில் நடைபெறும் பூசை முறைகள், உற்சவ முறைகள், ஆலய பரிபாலன முறைகள் பற்றி எல்லாம் எனக்கு குருவாக இருந்து உபதேசம் செய்து என்னை வழிநடத்தியவர் சிவஸ்ரீ ச. பாலசுந்தரக் குருக்கள் அவர்களே. குரு தட்சணை விஷயத்திலும் அவர்கள் நாம் கொடுப்பதை நன்மனதோடு ஏற்றுக் கொள்ளுவார்கள். இக்கோவிலின் வளர்ச்சிக்கு எனது குருவின் உபதேசமும் ஒரு காரணம் எனலாம்.

பின்வந்த மகோற்சவங்களுக்கும் அபிஷேகங்களுக்கும் அவரும் அவருக்குப் பின் அவருடைய மகனாரும் கடமை செய்துள்ளார்கள். 1955ம் ஆண்டு சம்புரோட்சண கும்பாபிஷேகத்தைச் செய்து வைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவர் சிவஸ்ரீ ச. பாலசுந்தரக் குருக்கள் அவர்களேயாகும். அவ்வாண்டில் நிகழ்ந்த மகோற்சவத்தை அன்னாரின் மகனாராகிய சிவஸ்ரீ ச. பா. வைத்தியநாதக் குருக்கள் நடாத்தி வைத்தார். பின்னர் நடைபெற்ற வைபவங்களுக்கும் சிவஸ்ரீ ச. பா. வைத்தியநாத குருக்கள் அவர்களே வந்து கடமை செய்தார்கள். 1964ல் சம்புரோட்சண கும்பாபிஷேகம், 1973 பங்குனியில் அந்தரிதப் பிரதிட்டை கும்பாபிஷேகம். 1988 தையில் அந்தரிதப் பிரதிட்டை கும்பாபிஷேகம் என்பனவும் இவருடைய தன்மையிலேயே நடைபெற்றன. 1989 வைகாசி 22ந் திகதி (04-06-89) யில் பாலஸ்தாபன வைபவத்தைச் செய்தவரும், 1991 ஆனி 20 (04-07-1991)ல் புனராவர்த்தன சம்புரோட்சண மகாகும்பாபிஷேகத்தைத் தலைமை வகித்துச் செய்து வைத்தவரும் சிவஸ்ரீ ச. பா. வைத்தியநாத சிவாசாரியார் அவர்களே. அவர்கள் பிரதம குருவாகவும், மற்றும் உதவிக் குருக்கள்மார், சாதகாசிரியர்கள், உதவியாளர்கள், தேவஸ்தான நித்திய அர்ச்சகர்கள் அவருக்கு உதவியாகவும் இருந்து, ஒன்று சேர்ந்து இந்த மகாகும்பாபிஷேகத்தை அழகாகவும் சிறப்பாகவும் நடாத்தி வைத்ததற்கு இவர்கள் எல்லோருக்கும் மிகுந்த நன்றியைக் கூறுவதோடு, இவர்கள் அம்பிகையின் அருளைப் பெற்றுப் பல்லாண்டு இனிது வாழ வேண்டுமென அம்பிகையைப் பிரார்த்திக்கின்றேன்.

கோவில் கட்டிடம் திருத்தியமைக்கும் வேலையை அராலியூர் வி. நாகமுத்து ஆசாரியார் பொறுப்பேற்றுத் தொடங்கினார்கள். முக்கியமான பல வேலைகள் முற்றுப்பெற்ற சமயத்தில், அன்னார் சென்ற ஐப்பசியில் காலமாகி விட்டார்கள். அவரின் ஆத்ம சாந்திக்காக அம்பிகையைப் பிரார்த்திக்கின்றேன். அவரின் குடும்பத்தாருக்கு எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன். மிகுதி வேலையைத் தொடர்ந்து நிறைவேற்றி உரிய காலத்தில் கும்பாபிஷேகம் செய்ய உதவியமைக்காக அவரின் மகன் திரு. நா. கோபாலரெத்தினம், திரு. அம்பலவாணர் திருநாவுக்கரசு ஆகியோருக்கும் எனது நன்றியைக் கூறுகின்றேன்.

கட்டிடத்திற்குச் சீமெந்து, மாபிள்கல், செங்கல் முதலியவற்றைத் தந்து உதவியவர்களுக்கும், திருப்பணிக்குப் பண உதவி வழங்கிய அன்பர்கள் அடியார்கள் யாவருக்கும் நாகதம்பிரான், சனீஸ்வரன் கோவில்கள் திருத்தியமைக்க விசேஷமாகப் பண உதவி செய்த அன்பர்கட்கும் நன்றி கூறுவதோடு அம்பிகையின் அருள் கிடைக்கவும் வேண்டுகின்றேன்.

தூபி கலசங்கள் செய்து உதவிய ஆசாரியர் திரு. சு. பாஸ்கரன், கதவுகள் செய்து பூட்டிய ஆசாரியார் திரு. வ. செல்லப்பா ஆகியோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருக்கு எனது மனமார்ந்த நன்றியைக் கூறுவதோடு அம்பிகையின் அருள் அவர்களுக்கு கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

கோவில் தர்மகர்த்தா சபையில் அவ்வப்போது தலைவர்களாக இருந்து எனக்கு ஊக்கம் தந்து கட்டிடங்கள் கட்டவும் கும்பாபிஷே கங்கள் செய்யவும் உதவி புரிந்த எல்லோருக்கும் எனது உளங் கனிந்த நன்றியைக் கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

மேலும், இவ்வாலயத்தின் நிரந்தர, தற்காலிக பணியாளர் அனைவருக்கும் இச்சந்தர்ப்பத்தில் எனது நன்றியைக் கூறுவதில் மகிழ்வடைகிறேன்.

அம்பிகையின் அடியார்களின் வேண்டுதலைப் பூர்த்தி செய்யு முகமாக இந்த 'மட்டுவில் பன்றித் தலைச்சி கண்ணகை அம்மன் பூர்வீக வரலாறும் கும்பாபிஷேக வைபவங்களும்' என்னும் நூலைத் தொகுத்தவர்களான பண்டிதர் திரு. க. சிவகுருநாதன், ஆசிரியர் திரு. நா. நல்லதம்பி ஆகியோருக்கும், இந்நூலுக்கு ஆசியுரைகள், வாழ்த்துரைகள், கட்டுரைகள், கவிதைகள், திருஊஞ்சல் பாட்டு, தோத்திரப் பாடல் ஆகியவற்றைத் தந்து உதவியவர்களுக்கும் அம் பாளின் திருவருள் கிடைப்பதாகவென வேண்டுவதோடு நன்றியை யும் கூறுகின்றேன்.

நிழற்படம் எடுத்துத் தந்தவர்களுக்கும், படஅச்சு தயாரித் துத் தந்தவர்களுக்கும் எமது நன்றியும் அம்பிகையின் அருளும் உரித்தாகுக.

இந்நூலை நல்லமுறையில் அச்சிட்டு உதவிய யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவு அச்சகத்தாருக்கு எமது உளங்கனிந்த நன்றி யைக் கூறுவதோடு அம்பிகையின் அருளையும் வேண்டிப் பிரார்த் திக்கின்றேன்.

எல்லோருக்கும் வணக்கம்.

" மூர்த்தி தலம் தீர்த்தம் முறையால் தொடங்கினர்க்கோர்
வார்த்தை சொல்லச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே."

— *தாயுமானவர்*

மட்டுவில் வடக்கு
7 - 8 - 91

இங்ஙனம்,
சீ. சிவகுரு
(பரம்பரைத்தர்மகர்த்தா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| விஷயம் | பக். | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| வைத்தியநாதர் நல்லாசி | | மற்றும் முள்ள | மற்றுமுள்ள |
| தங்கம்மா அப்பாக்குட்டி | | அஞ்சல் | அஞ்சொல் |
| | | தன்டி | தன்னடி |
| சிவகுரு நல்லதம்பி | 1 | சர்க்ரைப் | சர்க்கரைப் |
| ,, | 2 | உவந்தளிர்த்தார் | உவந்தளித்தார் |
| அபிராமி அந்தாதி | 2 | அக்கினியும் ஆடும் | அக்கினியும் சூடும் |
| | 2 | இச்சக்தியின் | சித்சக்தியின் |
| | 2 | கொன்றையார் | கொன்றைவார் |
| | 2 | தனிதரும் | புனிதரும் |
| | 2 | இறைவனுடைய | இறைவனையுடைய |
| | 2 | அவன் அருள் | அவள் அருள் |
| | 2 | அபின்னமாகாவலர் | அபின்னமாவர் |
| மட்டுவில் பன்றித்தலைச்சி | 3 | அதனமும் | ஆதனமும் |
| ,, | 4 | கைச்சேரி | கச்சேரி |
| பாரும் புனலும் | 6 | படர் விதம்பும் | படர் விசும்பும் |
| | | கிழடிக்கே | சீரடிக்கே |
| | | அவையொளி | கவையொளி |
| | | யூஎருவி | யூரெருவி |
| | | பிரிதுவி | பிருதுவி |
| | | கிரகம் | ரஸம் |
| | | தர்மத்தின் | தன்மாத்திரை |
| தேவாரம் | 9 | ஒருரனல்லவன் | ஒருரனல்லன் |
| தேவஸ்தான பரிபாலனம் | 11 | சிதம்பரபிள்ளை | சிதம்பரப்பிள்ளை |
| | 14 | அவ்வருட்கு மாகிய | அவ்வருட்குணமாகிய |
| தலைப்பு | 15 | தேவாரம் | தோத்திரம் |
| அம்பிகையும் தமிழும் | 17 | கோயில் | கோயிற் |
| அன்னை வழிபாடு | 29 | கடளாவாள் | கடவுளாவள் |
| | | உயிருனுக்கு | உயிரினுக்கு |
| | | அகங்கனித் | அகங்கனிந் |
| ,, | 30 | அன்னை அனித்திட்டவுடல் | அன்னை அளித்தவுடல் |
| துவசாரோகணம் | 31 | தம்பமும் சீளையும் | தம்பமும் சீலையும் |
| 1 - ம் திருமுறை | 34 | மூனியகண் | முனியகள் |
| | | யார்மேய | யவமேய |
| | | வைத்துனர் | வைத்துணர் |
| | | தீர்தலெனிதாமே | தீர்த்தலெளிதாமே |
| 2 - ம் திருமுறை | 36 | ஆற்றமல் | ஆற்றலடல் |
| மகோற்சவ | 41 | காமதேணு | காமதேனு |
| 2ம் திருமுறை | 55 | ஆற்றல்டல் | ஆற்றலடல் |
| 2ம் திருமுறை | 55 | தென்னனுலுற்ற | தென்னனுடலுற்ற |
| 4ம் திருமுறை | 55 | பூப்பினை தருந்தடி | பூப்பினை திருந்தடி |
| | 55 | ஞாப்பிணை | நாப்பிணை |

யாழ். மா. கூ. சபை அச்சகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவிமயம்

# அபிராமி அம்மைப் பதிகம்

சகலசெல் வங்களும் தரும் இமய கிரிராச
　　தன்யைமா தேவி நின்னைச்
சத்யமாய் நித்தியமுள்ள த்தில்து திக்குமூத்
　　தமருக்(கு) இரங்கி மிகவும்
அகிலமதில் நோயின்மை கல்விதன தானியம்
　　அழகுபுகழ் பெருமை இளமை
அறிவுசந் தானம்வலி துணிவுவாழ் நாள்வெற்றி
　　ஆகுநல் லூழ்நு கர்ச்சி
தொகை தரும் பதினாறு பேறும்தந் தருளிநீ
　　சுகானந்த வாழ்வளிப் பாய்,
சுகிர்தகுண சாலி! பரிபாலி! அநுகூலி! திரி
　　சூலி! மங் களவி சாலி!
மகவுநான்! நீதாய் அளிக்கொணாதோ? மகிமை
　　வளர்திருக் கடவூ ரில்வாழ்
வாமி! சுபநேமி! புகழ்நாமி! சிவசாமி மகிழ்
　　வாமி அபிராமி உமையே.

வாடாமல் உயிரெனும் பயிர்தழைத் தோங்கிவர
　　அருள்மழை பொழிந்தும் இன்ப
வாரிதியி லேநின்ன தன்பெனுஞ் சிறகால்
　　வருந்தா மலேய ணைத்துக்
கோடாமல் வளர்சிற் றெறும்புமுதல் குஞ்சரக்
　　கூட்டமுத லான சீவ
கோடிகள் தமக்குப் புசிக்கும் புசிப்பினைக்
　　குறையாம லேகொ டுத்து
நீடாழி யுலகங்கள் யாவையும் நேயமாய்
　　நின்னுதர பந்தி பூக்கும்
நின்மலீ! அகிலங் களுக்(கு) அன்னை என்றோதும்;
　　நீலியென்(று) ஓதுவாரோ?
ஆடாத நான்மறையின் வேள்வியால் ஓங்குபுகழ்
　　ஆதிகட வூரின் வாழ்வே
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
　　அருள்வாமி! அபிரா மியே!

யா. மா. கூ. ச. அச்சகம் யாழ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org